வெளியீடு 05-03-2000

Issued 05-03-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மே 11, 1999 - தொகுதி 80 - எண் 2**

**Tuesday, 11th May, 1999—Volume 80 - No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

D
V211,31'N99
N99.80.2
221198

62 — 2001

**11-05-1999**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 135-167

2. **விதி 111-ன்கீழ் வேளாண்மைத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை—**

கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் நிர்ணயிக்கக் கோரி விவசாயிகள் போராடுவது குறித்து 22-3-1999 அன்று எழுப்பிய சிறப்புக் கவன ஈர்ப்பு மீதான விளக்கத்திற்குத் திருத்த அறிக்கை. 168-170

3. **கவன ஈர்ப்பு—**

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கொளமஞ்சனூர் அருகே பெண்ணாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்தல் 170-172

(ஆ) விளாகம்-எடையாத்தூர் இடையில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல் 172-175

4. **அறிக்கை அளித்தல்—**

• பொதுக் கணக்குக் குழு 175

5. **விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை—**

நெசவாளர் குழந்தைகளுக்கு தேசிய ஆடை வடிவமைப்பு மையம் அளிக்கவுள்ள தொழில் நுட்பக் கல்விப் பயிற்சி குறித்து கைத்தறித் துறை அமைச்சரின் அறிக்கை. 176

பக்கங்கள்

6. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு நகரகப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப் படுத்துதலும், ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு, *1999* — 176-177

7. **மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

கோரிக்கை எண் 30 - பழங்குடியினர், ஆதிதிராவிடர், முதலியோர் நலன் — 177-183, 186-280

*மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு — 177,185,216, 217,220,223, 225,227,228, 233,234,235, 236,259-277

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் — 187-193

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 193-194

திரு. கொ. வீ. நன்னன். — 194-200

திரு. ஜி. பழனிசாமி — 200-206

*திரு. உ. திசைவீரன் — 206-213

திரு. ஜி. நிஜாமுதீன் — 214-222

திரு. ச. புரட்சிமணி — 222-226

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 224,226-227

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 227-237

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 229,230,231,256

*திரு. சி. சந்திரசேகரன் — 237-244

திரு. ஜி.கே. மணி — 244-248

திரு. மு.பெ. சாமிந[illegible] — 248-253

திரு. பு. அப்பாவு — 253-258


22/198




பக்கங்கள்

8. **அரசினர் தீர்மானம்—**

(அ) விதி 185(2)-ஐத் தளர்த்தல் — 184

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் — 281

9. **அரசினர் தனித் தீர்மானம்—**

மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்புச்) சட்டம் 1993-ஐ (மையச் சட்டம் 46/1993) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுப் பயன்படுத்தப்படுத்துதல். — 184-186,280

*மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு — 185-186

10. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** — 282-284


D
N2, 31 N99
N99.80.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 28, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 மே 11, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்"*

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

## 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 701, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**701—**

### நூலகத்தை விரிவுபடுத்துதல்

***6699—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*சென்னை, அம்பத்தூரில் இயங்கி வரும் முருகப்பா நூலகத்தை விரிவுபடுத்திட அரசு முன்வருமா?*

[1999 மே 11

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, அம்பத்தூரில் இயங்கிவரும் முருகப்பா நூலகம் ரூ. 16.49 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட புதிய கட்டடத்தில் 26-4-1997 முதல் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 702, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**702—**

## தட்டச்சுத் தேர்வு மையம்

***15229— திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி நகரில் ஒரு தட்டச்சுத் தேர்வு மையம் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இக்கல்வியாண்டில் அதைத் தொடங்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 703, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**703—**

## துணை மருத்துவமனை

***16659—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மே 11 ]

(அ) உசிலம்பட்டித் தொகுதி, வி. பெருமாள்பட்டியில் துணை சுகாதார நிலையம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உசிலம்பட்டித் தொகுதி, வி. பெருமாள்பட்டி கிராமம், நல்லுதேவன்பட்டி துணை சுகாதார நிலையத்தைச் சேர்ந்தது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் ஏற்கெனவே நல்லுதேவன்பட்டியில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதால் தனியாக வி. பெருமாள்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வி. பெருமாள்பட்டியைச் சுற்றி வில்லாளி, முக்கோட்டி, பன்னப்பட்டி, ஒத்தப்பட்டி போன்ற பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. நல்லுதேவன்பட்டி வேறு ஓர் ஊராட்சியைச் சேர்ந்தது. வி. பெருமாள்பட்டியைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து துணை சுகாதார நிலையத்தை வி. பெருமாள்பட்டியில் நிறுவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக துணை சுகாதார நிலையங்கள் 5,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதிக்கு ஒன்று என்ற வீதத்தில் அமைக்கப்பட்டு சுமார் 8 ஆயிரம் துணை சுகாதார நிலையங்கள் தமிழகத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற வி. பெருமாள்பட்டி கிராமத்தினுடைய மக்கள் தொகை 1503. இதோடு சேர்ந்து 5 ஆயிரம் மக்கள் தொகை எங்கே இருக்கின்றதோ அங்கேதான் தனியாக ஒரு கிராமச் சுகாதார நிலையம் தொடங்கப்படும். ஏற்கெனவே நல்லுதேவன்பட்டியிலே 5893 மக்கள் வசிக்கின்ற காரணத்தாலே இப்போது அங்கே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எதிர்காலத்திலே வி. பெருமாள்பட்டியினுடைய மக்கள்தொகை 5000-க்கு வந்தால் அப்போது அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

[1999 மே 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 704, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**704—**

### மருத்துவமனைக்கு அவசர ஊர்தி

***18728*—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சுழியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர ஊர்தி உடனடியாக வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவசர ஊர்தி வழங்கும்போது அதற்குரிய ஓட்டுநரையும் உடனடியாக நியமித்திட அரசு ஆவன செய்திடுமா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர ஊர்திகள் வழங்குகின்ற நேரத்திலே ஏற்கெனவே எங்கெங்கே ஓட்டுநர்கள் இருக்கின்றார்களோ அவர்களை நியமித்துக்கொள்ள வேண்டுமென்று நிதி இலாகா சொல்லியிருக்கிறது. இருந்தாலும், ஊர்திகள் வழங்கும்போது நிச்சயமாக ஓர் ஓட்டுநரை வழங்க அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இதே திருச்சுழி அரசு மருத்துவமனையில் ஒரு பல் மருத்துவப் பிரிவு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கே



1999 மே 11]

மருத்துவர் இருந்தும்கூட அவருக்கு உதவி புரிவதற்குரிய மற்ற பணியாளர்கள் யாரும் இல்லாத நிலைமையும், அந்த மருத்துவமனையிலே இரவுக் காவலர் இல்லாத நிலைமையும் இருப்பதால் அங்கே பொது மக்களும் மருத்துவமனை ஊழியர்களும் அவதியுறும் நிலை நீடிக்கிறது. எனவே அதைச் சீர் செய்து உடனடியாகத் தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே பெரும்பாலும் மருத்துவர் ஒருவர் இருந்தாலே, அந்த மருத்துவருக்கே வேலை கிடையாது. அந்த மருத்துவருக்கு ஓர் உதவியாளரை நியமித்து அரசாங்கத்தினுடைய பணத்தை வீணாக்க அரசு விரும்பவில்லை. பல் மருத்துவச் சிகிச்சைக்காக அந்த மருத்துவமனைக்குப் போகக்கூடிய மக்களின் எண்ணிக்கை உயருமானால், அப்போது ஓர் உதவியாளரை நியமிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும். இரவுக் காவலரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 705, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**705—**

### புயல் பாதுகாப்பு இல்லம்

***15984*—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆண்டுதோறும் புயல், வெள்ளம் வருவதால் மக்களைப் பாதுகாக்க புயல் பாதுகாப்பு இல்லம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஏற்கெனவே 22 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் புயல் பாதுகாப்பு இல்லம் ஏதுமில்லை. மேலும் திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் புயல் வெள்ளக் காலங்களில் பள்ளிகளில் மற்றும் பொதுக்கட்டடங்களில் பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்படுகின்றனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் தற்போதுள்ள 22 புயல் பாதுகாப்பு இல்லங்களைப் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூ.14,63,000/- (ரூபாய் பதினான்கு இலட்சத்து அறுபத்து மூவாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணிகள் ரூ.13,32,057/- செலவில் மேற்கொள்ளப்பட்டு அவ்வில்லங்கள் தற்போது உபயோகப்படுத்தப்படும் நிலையில் உள்ளன. மேலும், புயல் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகும் நாகப்பட்டினம் மாவட்டம் உட்பட கடற்கரையோர மாவட்டங்களில் கூடுதலாகப் புயல் பாதுகாப்பு இலலங்கள் கட்டும் திட்டத்திற்காக, நிதியுதவி கோரி வெளிநாட்டு நிதிநிறுவனத்தினைக் கண்டறியும் முயற்சி மேற்கொளளப்பட்டுள்ளது. மத்திய அரசையும் இதற்கான நிதியினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் டெல்லியிலுள்ள HUDCO நிறுவனத்திடமும் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு மற்றும் HUDCO நிறுவனத்திடமிருந்து பதில் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக பதில் அளித்து இருக்கிறார்கள். அதற்கு நன்றி. இருந்தபோதும், திருவாரூர் மாவட்டத்தில் புயல், வெள்ளக் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக எத்தனை இல்லங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப் பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் பாதுகாப்பு மையங்களில் 91 புயல் பாதுகாப்பு மையங்கள் பழுதுபார்க்க வேண்டியவை எனக் கண்டறிந்து அவற்றைப் பழுதுபார்க்கும் பணிகளுக்காக அரசு 87.50 இலட்சம் ரூபாய் வழங்கி பழுது பார்க்கப்பட்டுள்ளது. கூடுதலாகப் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டும் திட்டத்திற்காக வெளிநாட்டு நிதி நிறுவனத்திடமிருந்து உதவியைப் பெறலாம் என்ற நோக்கத்துடன், இத்திட்டத்திற்காக நிதியுதவி தரும் வெளிநாட்டு நிறுவனங்களைக் கண்டறியுமாறு இவ்வரசு மத்திய அரசினைக் கோரியுள்ளது. அவ்வாறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் ஏதுமில்லையெனில், மத்திய அரசே அதற்கான நிதியுதவியினை வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் டெல்லியிலுள்ள HUDCO நிறுவனத்திடமும் இத்திட்டத்திற்கான நிதியுதவியை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு மற்றும் HUDCO நிறுவனத்திடமிருந்து அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேற்படி நிறுவனங்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்றபின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழையூரிலும், மேலும், இந்த மாவட்டத்தில் பாதிக்கப்படும் பகுதிகளைக் கண்டறிந்து கூடுதலாகவும் மற்றும் திருவாரூர் மாவட்டம் உள்ளிட்ட இதர கடலோர மாவட்டங்களிலேயும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிலக்கோட்டையிலே என்ன புயல் பாதுகாப்பு? அதெல்லாம் அனுமதிக்க முடியாது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச் சுவர் கட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் வருசநாட்டுப் பகுதியிலேயிருந்து மழைபெய்தால், நிலக்கோட்டைத் தொகுதி பாதிக்கப்படுகிறது என்று இங்கே விடாமல் பேசிக்கொண்டு இருக்கிறேன். அதிலும்கூட, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால், அந்தப் பகுதியிலே 802 வீடுகள் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. அங்குள்ள விவசாய நிலங்களெல்லாம் மண் மேடிட்டு பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையிலே, அங்கே தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் என நான் பலமுறை எடுத்துச் சொல்லியுள்ளேன். அத்தகைய வெள்ளத் தடுப்புச் சுவரை குன்னாளம் கோட்டையிலிருந்து சோழவந்தான் வரைக்கும் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

தயவுசெய்து அங்குள்ள ஏழை மக்களின்மீது இரக்கப்பட்டு, வெள்ள நிவாரண நிதியிலிருந்து தடுப்புச் சுவரைக் கட்டுவதற்கு வழிவகை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *9-40*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் கேட்கும்போது நான் மறுத்ததில்லை. இப்போது, யோசித்து ஆவன செய்யப்படும் என்ற உறுதியை அளிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 706, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**706—**

### டீசல் விற்பனை நிலையம்

***[illegible]—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் வேளாண்மைப் பொறியியல் சங்கத்தின் மூலம் டீசல் விற்பனை நிலையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அமைக்கப்படமாட்டாது.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டுப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்தடிநீர்ப் பாசனத்தை நம்பியே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்பு பெறுவதென்றால் பெரும் அரிதாக இருக்கிறது. Oil Engine வைத்து விவசாயத்தைச் செய்கின்ற அந்த விவசாயப் பெருங்குடிமக்கள் diesel பெறுவதற்கு திருவண்ணாமலைக்கு வர வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். எனவே தண்டராம்பட்டில் ஒரு தனியார் diesel விற்பனை நிலையம்





இருந்தும், போதுமான அளவுக்கு விவசாயிகளுக்கு diesel விநியோகம் செய்ய முடியாத நிலையிலே அந்த விற்பனை நிலைய அதிபர்கள் இருக்கிறார்கள். திருவண்ணாமலையிலிருந்து diesel-ஐ பேருந்துகளிலே எடுத்து வருவதற்கும் வாய்ப்பு இல்லாத நிலையிலே விவசாயிகள் திண்டாடிக்கொண்டும், விவசாயத்தைச் செய்ய முடியாத நிலையிலேயும் இருக்கிற காரணத்தால் தண்டராம்பட்டில் வேளாண்மைத் துறையின்மூலம் விவசாயிகள் பயன்பெறுவதற்கு diesel விற்பனை நிலையம் அமைத்து விவசாயிகளுக்கு நன்மை செய்வார்களா, இதனை மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் வேளாண்மைப் பொறியியல் சங்கத்தின் மூலம் diesel விற்பனை நிலையம் அமைக்கப்பட இயலாது என்றுதான் நான் பதில் சொல்லியிருக்கின்றேன். ஏனெனில், தண்டராம்பட்டு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையம் நட்டத்தில் இயங்கி வந்ததால் அரசாணை எண் 1248, வேளாண்மைத் துறை, நாள் 24-6-1986-ல் அது கலைக்கப்பட்டுவிட்டது. தற்போது அந்தச் சங்கம் செயல்படவில்லை. இந்த நிலையில் வேளாண்மைப் பொறியியல் சங்கத்தின்மூலம் diesel விற்பனை நிலையம் அமைத்து, விற்பதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 707, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**707—**

### திராட்சைக் கொடிகளுக்குப் பாதுகாப்பு

***24215—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் திராட்சைக் கொடிகளுக்குச் சாம்பல் நோய், பொறிவண்டுத் தாக்குதல் அதிகமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

[1999 மே 11

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திராட்சை சாகுபடியாகும் தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் சாம்பல் நோய் மற்றும் பொறிவண்டுத் தாக்குதல் அவ்வப்போது குறைந்த அளவில் காணப்படுகிறது. இத்தாக்குதல் அதிகமான சேதாரம் ஏற்படுத்தும் அளவுக்குக் காணப்படவில்லை. இதனைக் கட்டுப்படுத்த, தேவையான தொழில்நுட்ப அறிவுரைகள் விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்று தமிழகத்திலே திராட்சை பயிரிடப்படக்கூடிய மதுரை, திண்டுக்கல் தேனி மற்றும் கோவை மாவட்டங்களிலேயும் அதேபோல நீண்டகாலப் பயிராக இருக்கக்கூடிய, தென்னையிலேயும் 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள்வரை பலன் தருவதாக இருக்கக்கூடிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 'Prevention is better than cure' என்பதுபோல எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நோய்கள் வராமல் இருப்பதற்குத் தடுப்பு நடவடிக்கை எடுத்து, நீண்ட காலப் பயிர்களான தென்னை, திராட்சை போன்ற பயிர்களுக்கு நோய்கள் வராமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திட அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நோய் வரும் என்று யாருக்கும் தெரியாது. வந்த பின்னர்தான் நோயைக் கண்டறிந்து அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை நாம் எடுக்கின்றோம். சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 4 கிராம் கந்தக மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்கக்கூடிய ஆலோசனையும், அதைப்போல பொறிவண்டுகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த பாசலோன் மருந்தினை கவாத்து செய்த பிறகு ஒரு முறையும், 17 நாட்கள் இடைவெளியில் ஒரு முறையும் திராட்சைக்குத் தெளிக்கலாம்; இவ்வாறு தெளித்தால் அந்த நோயைக் கட்டுப்படுத்தலாம் என்கின்ற தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் திராட்சைக் கொடிகளில் சாம்பல் நோய் மற்றும் பொறிவண்டுகள் தாக்குவதால் ஏற்படும் நோய்



1999 மே 11]

போன்றவை வராமல் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அப்பகுதி விவசாயிகள் வருமானம் குறைவாக வருவதாகவும், விலை வீழ்ச்சியாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள், ஆந்திர மாநிலத்திலே ஹைதராபாத் திராட்சை என பல கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்வதாக இங்கே கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திராட்சைப் பழ வகைச் செடிகளை, தமிழ்நாட்டிலும் பயிரிடச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் இத்தகைய கேள்வி எழுந்தபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழகாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில், ஹைதராபாத்திலுள்ள திராட்சைத் தோட்டத்திலே அத்தகைய அதிசயம்--10 இலட்சம் ரூபாய்---மாயாஜால வித்தையெல்லாம் நடைபெறுகிறது; தமிழகத்திலே அந்த அளவுக்கு வருமானம் வரக்கூடிய திராட்சை இல்லை என்று பதிலளித்திருக்கிறார்கள். அதே பதிலை; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir, the Powdery Mildew disease is the most dangerous disease and imported medicine is being sprayed to cure that Powdery Mildew disease. That medicine is very costly. So, may I know from the Hon'ble Minister whether concession will be given to the ryots for purchasing that foreign medicine? Or an equivalent medicine may be introduced in Tamil Nadu, Sir.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இறக்குமதி செய்த அந்த மருந்துகளைக் கொண்டு இப்போது கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இப்போது சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 4 கிராம் கந்தக மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரிலே கலந்து தெளித்தாலே போய்விடுகிறது. அதேபோல் பொறிவண்டுகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த பாசலோன் மருந்தை, கவாத்து செய்தபிறகு ஒருமுறையும், பின்பு 17 நாட்கள் இடைவெளியில் ஒருமுறையும் தெளித்தாலே

பொறிவண்டுத் தாக்குதலிலேயிருந்து பாதுகாக்கப்படுகிறது. ஆகவே இறக்குமதி செய்த மருந்தைக் கொண்டு அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 708, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**708—**

## கரைகளைப் பலப்படுத்துதல்

***7346—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, மருதூர் கீழக்காலின் கரைகளைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வினாவிற்குத் திருத்திய விடையைப் படிக்க நான் தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

மருதூர் கீழக்கால் கரைகளைப் புனரமைத்து, நவீனப்படுத்துவதற்காக 93,28,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவையும் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கின்றன.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதூர் கீழக்கால் கரைகளெல்லாம் தூர்ந்திருந்த நிலையில், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான நிதி ஒதுக்கீட்டினைச் செய்து, இப்போது அப்பணிகள் எல்லாம் நடந்துகொண்டு உள்ளதால் விவசாயிகள் மத்தியிலே பெரிய வரவேற்பினைப் பெற்றிருக்கிறது. இப்போது வாய்க்கால்கள் எல்லாம் தூர் வாரப்படுகின்றன. அதேபோல சரித்திரப் புகழ்வாய்ந்த கொற்கை மண்ணிலே, இந்த முறை குளம் தூர் வாருவதற்கும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். பட்டர்குளத்தைத் தூர் வாருவதற்கும் அனுமதி தர இருக்கிறார்கள். இந்தநேரத்தில், பல்வேறு வடிகால்கள் மிகவும் தூர்ந்துபோயுள்ளதால் விவசாயம் செய்கின்ற நேரத்தில், வயல்கள் எல்லாம் நீரிலே மிதந்து கொண்டிருக்கின்றன. இந்த வடிகால்கள் எல்லாம் 1989ஆம் ஆண்டு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தந்த வடிகால்கள்தான். இவற்றை, கடந்த ஆட்சிக்காலத்திலே, அப்படியே போட்டுவிட்டார்கள். எனவே மருதூர் கீழக்காலிலே உள்ள ஆலங்கால் பெரிய வடிகால், சந்தைப்பாதிக்கால் வடிகால், ஆலங்கால் சிறிய வடிகால் மற்றும் திருவைகுண்டம் வாய்க்காலில் உள்ள உமரிக்கேடு வடிகால் ஆகிய வடிகால்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூர் வாரி, புதுப்பித்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வடிகால்களையெல்லாம் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஒருகாலத்திலே செய்தோம். அந்தத் திட்டம் இப்போது இல்லாத காரணத்தினால், அந்த வேலைகள் சில இடங்களிலே பாதியிலே நிற்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைபோல, மருதூர் கீழக்காலிலே வருகிற அந்த வடிகால்களையும், மாண்புமிகு உறுப்பினர் இதிலே குறிப்பிடாத திருவைகுண்டம் அணைக்கட்டு வடிகாலிலிருந்து பிரிகின்ற ஏரல் வடிகால் மற்றும் இதர வடிகால்கள் ஆகிய திட்டங்களுக்குச்சேர்த்து மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது. இதுகுறித்து அரசு விரைவில் முடிவெடுத்து பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் உள்ள கடம்பா குளத்தை "கடம்பா குளம் கடலில் பாதி" என்று சொல்வார்கள். அந்தக் குளத்தினுடைய கரைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்தக் கரைகளைச் செம்மைப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல தென்கரை பெரிய குளத்திற்கு 2,000 ஏக்கர் அளவில் ஆயக்கட்டுகள் இருக்கின்றன. அந்தக் குளத்தின் கரைகளும் வெள்ளையர் காலத்திலேதான் செம்மைப்படுத்தப்பட்டன. மிகவும் மோசமான நிலையிலே உள்ள அது எந்த நேரத்திலும் குளம் பெருகினால் உடைந்துவிடும் என்ற அளவில் உள்ளதால் அங்கே இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் பயந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு குளங்களின்

[1999 மே 11

கரைகளையும் 1999 ஆம் ஆண்டிலே நீங்கள் செம்மைப்படுத்தித் தந்தால் மிக நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக நீங்கள் அதைச் செம்மைப்படுத்தித் தருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வியிலே இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று, கடம்பா குளத்தினுடைய கரை பலப்படுத்தப்படுமா என்பது. கடம்பா குளத்திலிருந்துதான் கீழப்பகுதியிலே 12 குளங்களுக்குத் தண்ணீரை எடுத்துப்போய் கடம்பா பை-பாஸ் அமைக்கிறோம். கடம்பா குளம் கடல் பாதி என்று சொன்னால் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் கடம்பா குளத்தில் தண்ணீரை வற்றவிடுகிற அளவிற்கு உங்கள் விவசாயிகள் தயாராக இருப்பார்களா என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். காரணம், குளத்தைத் திறக்கின்ற, மூடுகின்ற உரிமையைக்கூட அவர்கள்தான் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கரையை பலப்படுத்தினால்தான் கீழே தண்ணீரை எடுக்க முடியும். கடம்பாவினுடைய கரைகளை பலப்படுத்துவதற்காகவும் மற்றும் புறவழிச்சாலை அமைப்பதற்காகவும் 4 கோடியே 95 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் எல்லாம் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. இது முதல் கேள்விக்கான பதில். இரண்டாவது கேள்வி என்னவென்று புரியவில்லை. அதை எழுதிக் கொடுத்துவிட்டால் அரசின் நிலை என்ன என்பதைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 709, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**709—**

## கண்மாய்க் கரையைச் சீர்செய்தல்

***7679—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, குலசேகரப்பேரி கண்மாய்க் கரையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?



1999 மே 11]

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குலசேகரப்பேரி கண்மாயில் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணி ரூ.9.25 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படியாவது தினம் ஒரு கேள்வியாவது கேட்டாக வேண்டும் உங்களுக்கு. வாசுதேவநல்லூருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?

**திரு. சி. ஞானசேகரன்:** வாசுதேவநல்லூரில் ஏற்கெனவே பணி முடிக்கப்பட்டுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் வேலூர் நகரில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாசுதேவநல்லூர் என்ற பெயரைச் சொல்லி என்னை ஏமாற்றாதீர்கள். நீங்கள் கேட்க வேண்டிய கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில், தோட்டபாளையம், சைதாப்பேட்டை, old town, கஸ்பா, இராமநாயக்கன்பாளையம், பர்மா காலனி, அம்பேத்கர் நகர் போன்ற இடங்களிலே இருக்கக்கூடிய மழை நீர்க் கால்வாய்கள் எல்லாம் இப்போது தூர்ந்து போய் உள்ளதால் பாலாற்றுக்கு வர வேண்டிய நீர் எல்லாம் வீட்டிற்குள்ளே புகுந்து விடுகின்றது. பல ஆண்டுகளாக இந்த மழைநீர்க் கால்வாய்கள் செப்பனிடப்படாமல் இருப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்றரை கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கித் தந்தால் கால்வாய்களையெல்லாம் சீரமைத்து அந்தத் தண்ணீரை பாலாற்றிலே முழுமையாகக் கொண்டுபோய்ச் சேர்க்க முடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கான நிதியை ஒதுக்கி கால்வாயைச் சீரமைத்து பாலாற்றுக்கு நீர் பெற ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் பலமுறை திருப்பித் திருப்பிச்

சொல்லிவிட்டேன். நகராட்சிக்குள், மாநகராட்சிக்குள், பல நகரங்களுக்கு உள்ளேயும் ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆறுகளைச் சீரமைக்கும் பணி பொதுப் பணித் துறையினுடையது அல்ல. பொது பணித் துறைக்கு என்று பாசனம் இருக்க வேண்டும். பாசனம் இருந்தாலதான், ஆற்றின் மூலமாக பல ஏக்கர்கள் பாசனம் பெற்றால்தான், அவைகளைச் சீரமைக்கிற பணியை பொதுப் பணித் துறை ஏற்றுக்கொள்ளும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திருப்பித் திருப்பி ஓடுகிற ஆறுகளை எல்லாம் பொதுப் பணித் துறைதான் சீரமைக்க வேண்டும் என்று கேட்பது முடியாதது ஆகும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். தூத்துக்குடியிலே பக்கிள் இருக்கிறது; அதுபோல மற்ற ஊர்களிலும் பல ஆறுகள் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்ட கேள்வியைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட ஆறுகள் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் நீர் கொண்டுவரப்படுமானால் அதுகுறித்து பொதுப் பணித் துறை யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 710, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**710—**

## இரயில் பாதை அமைத்தல்

***6399—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் முதல் கர்நாடக மாநிலம் பெங்களூர்வரை இரயில் பாதை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதை மாநில அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பழனியிலிருந்து பெங்களூர்வரை என மாற்றியமைத்து திருப்பூர், அவினாசி, சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளையும் உள்ளடக்குமாறு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. பழனி வரை நீட்டிக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் சாத்தியக் கூறுகளும் ஆராயப்படாத நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம்வரை வருகிற அந்தப் புதிய இரயில் பாதை சத்தியமங்கலத்தை அடுத்து, அவினாசி, திருப்பூர், தாராபுரம், பழனி என்று வருமானால் பல்வேறு வகைகளில் தமிழ்நாட்டில் சமூகத்திற்கு அது பயன் அளிக்கும் என்பதோடு தொழில் துறைக்கும் அது மிகுந்த முக்கியத்துவமாக அமைய வாய்ப்பாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்வதுடன், மத்திய அரசைப் பொருத்தமான முறையில் நிர்பந்திப்பதன் மூலம் இந்தத் திட்டத்தை சத்தியமங்கலத்திலிருந்து பழனிவரை, நீட்டிக்க வேண்டுமென்கிற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதை மறுபரிசீலனை செய்வதற்கு ஏதுமில்லை. நாங்கள் எழுதத்தான் முடியும். வேண்டுமானால் மறுபடியும் எழுதலாம். ஆனால் இந்தத் திட்டத்திற்கு 275 கோடி ரூபாயை மத்திய அரசு திட்டச் செலவாக ஒதுக்கியிருக்கிறது; திட்டச் செலவாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் இதை survey செய்வதற்காக token-ஆக 1 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. ஆகவே இந்தப் பணி தொடங்குகிற காலத்திலே நீங்கள் சொன்னதைக் கருத்தில் கொண்டு survey செய்யும்போது இதையும் செய்யலாம் என்று மாநில அரசு வலியுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பல அகல இரயில் பாதைத் திட்டங்களை இந்த ஆண்டு

அறிவித்துவிட்டு, சுமார் 20 கோடி ரூபாய்தான் ஒதுக்கி இருக்கிறது. ஆகையால் இந்த ஆண்டு அதிகமாக நிதி பெறுவதற்கு மாநில அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இத் துறையின் மூலமாகவும் பல கடிதங்களை நாங்கள் எழுதிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரயில்வே அமைச்சரைச் சந்திக்கிறபோதும், மற்ற நேரங்களிலும் இந்த மாநிலத்தினுடைய இரயில்வே திட்டங்களைப்பற்றி வற்புறுத்தி இருக்கிறார்கள், வலியுறுத்தி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 711, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**711—**

## மேம்பாலம் கட்டுதல்

***3170—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவபுரம், திருநீர்மலை சாலையிலுள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல்லவபுரம், திருநீர்மலை சாலையிலுள்ள பாலத்தை மேம்பாலமாகக் கட்டும் திட்டம் தற்போது இல்லை. எனினும், தற்போதுள்ள தரைப பாலத்தை R.C.C. குழாய்கள் 25 வரிசை வைத்து புதுப்பித்துக் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.





**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெறுகிற பணி மிகவும் சீரிய முறையிலே நடைபெறுகிறது. இதுவே போதுமானது. என்றாலும் அந்தக் கால்வாய்க்குப் பக்கத்திலே பெரும அளவிற்கு வியாபாரிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதை அப்புறப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டுவதோடு, அந்தச் சாலையை அகலப்படுத்தும் பணிகளும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆக்கிரமிப்பு இருக்குமானால் அவற்றை அப்புறப் படுத்துவதற்கும் துறை நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 712, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**712—**

## புறவழிச்சாலை அமைத்தல்

***13580—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அபுல்கலாம் ஆசாத் நகரப் பாலத்தை விரிவுபடுத்தி, தென்காசி புதிய பேருந்து நிலையம் வரை புறவழிச்சாலை அமைத்து போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகரில் அபுல்கலாம் ஆசாத் நகரப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது இல்லை. கேரள மாநிலம் புனலூர் கொல்லம்) - தென்காசி, இராஜபாளையம்—திருவில்லிப்புத்தூர் —திருமங்கலம் வழியாகச் செல்லும் சாலையானது தேசிய

நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளதால் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவின் மூலம் மைய அரசின் நிதியிலிருந்து தென்காசி நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் வாய்ப்புகள் உள்ளன.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி நகராட்சிப் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. குறிப்பாக குற்றால season நாட்களில் சுற்றுலாப் பயணிகள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே அபுல்கலாம் ஆசாத் நகரப் பாலத்தை விரிவுபடுத்தவும், புறவழிச்சாலை அமைக்கும் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அபுல்கலாம் ஆசாத் பாலம் என்பது தூத்துக்குடி-திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலையில் இருக்கிறது. தென்காசி நகருக்கு உத்தேசமாக புறவழிச்சாலை அமைப்பதற்கான நேர்பாடு (Alignment) எல்லாம் துறையால் எடுக்கப்பட்டிருக்கிறது. தென்காசி-இராஜபாளையம்-திருவில்லிப்புத்தூர்-திருமங்கலம்-மதுரை சாலை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்த தென்காசி-மதுரை சாலையிலிருந்து திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம் சாலையை இணைக்கக்கூடிய புறவழிச்சாலையாகத்தான் இது அமைய இருக்கிறது. இது 4.80 கிலோ மீட்டர் நீளம் இருக்கிறது. இதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். ஏறத்தாழ 200 இலட்சம் ரூபாய் இதற்குத் தேவைபபடுகிறது. இந்த மதிப்பீடுகள் எல்லாம் தயாராக இருக்கின்றன. மத்திய அரசிலிருந்து நிதி ஆதாரம் கிடைக்கிறபோது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-தென்காசி சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றதே. அதுபற்றிய விவரம் என்ன? அதற்கு எண் எலலாம் கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்கள். அதுபற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்திலேயிருந்து-தென்காசி, அதாவது மதுரை-தென்காசி சாலைதான் தேசிய நெடுஞ்சாலையாக மாறியிருக்கிறது. நீங்கள் சொன்னதுபோல் தென்காசி—திருநெல்வேலி சாலை அல்ல.





முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 713, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**713—**

### கோயிலைப் புதுப்பித்தல்

***21269—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

மன்னார்குடி வட்டம், திருராமேஸ்வரம் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோயிலின் வருமானம் அன்றாடச் செலவினங்களுக்கே பற்றாக்குறையாக இருப்பதனாலும், திருப்பணிக்குத் தேவையான தொகை நிதியுதவியாகக் கிடைத்தால் மட்டுமே திருப்புணி செய்ய இயலும் என்பதனாலும், தற்போது இத்திருப்பணியினை மேற்கொள்ள இயலாது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி வட்டம், திருராமேஸ்வரம் கோயில் பிரசித்திபெற்ற கோயிலாக இருக்கிறது. இப்போது ஏனோ தெரியவில்லை ஓராண்டுகாலமாக இந்தக் கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. அதிலே சில பக்தர்களும், சில முக்கியஸ்தர்களும் ஆர்வத்தோடு கோயில் நிகழ்ச்சிகளைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். ஆகவே அது மிகப் பழமையான கோயில் என்ற காரணத்தினாலே அதைப் புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்தும் வந்திருக்கிறது; வருமானம் இல்லையென்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

தெரிவித்திருக்கிறார்கள். வருமானத்திற்குரிய நல்ல யோசனைகள் ஒரு வாரகாலமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தக் கோயிலைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு மக்கள் பங்குத் தொகையாக ஏதாவது செலுத்துவதற்குரிய வாய்ப்பு இருக்குமானால்கூட அதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே சிறப்பு நேர்வாகக் கருதி அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை, அதற்கு உதவி செய்வதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை முழுவதுமாகச் சீர் செய்து திருப்பணி செய்ய வேண்டுமென்றால் ரூ. 40 இலட்சம் செலவாகும். அதே நேரத்தில், இந்தக் கோயிலுக்கு வருகிற வருமானம் வெறும் 65,000 ரூபாய் மட்டும்தான். எனவே ஆண்டு முழுவதும் நடைபெறுகின்ற— ஒரு நாளைக்கு 5 கால பூஜை நடைபெறுகிறது. எனவே, ஆண்டு முழுவதும் நடைபெறுகிற—இந்தச் செலவுகளுக்கே சரியாக இருக்கிறது. முறைப்படி நம்முடைய உறுப்பினர் அவர்களும் முயற்சி எடுக்க வேண்டும். ஏனென்றால் அவருக்கு அதனுடைய முக்கியத்துவம் தெரியும். 'சீதாபிராட்டியாரே வணங்கிய கோயில்' என்று சொல்கிறார்கள். எனவே அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அவர் அதற்கான உபயதாரர்கள நன்கொடை தொடர்பான முடிவை எடுத்து எங்களுக்குத் தெரிவிப்பாரேயானால் அரசு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும். இரண்டாவது, இதற்கு இருக்கிற பல ஏக்கர் நிலம் குறித்து ஏற்கெனவே இப்போது செய்திகள் அலசப்படுகின்றன, வாக்குவாதத்தில் இருக்கிறது என்று அவர் சொல்கிறார். முதல் யோசனை. கொடுக்க வேண்டிய குத்தகையை ஒழுங்காகக் கொடுக்கச் செய்வது. அங்கு, 42.61 ஏக்கர் புன்செய்க்கு வெறும் 202 ரூபாய்தான் வருமானம் வருகிறது. மேலும், 10 ஏக்கர் நன்செய்க்கு 225 குவிண்டால் நெல் வருகிறது. இதைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு நம்முடைய உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். உபயதாரர்களின் நன்கொடையையும் அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு முயற்சி செய்தால் அரசு அதுபற்றிச் சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 714, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.





**714—**

## தமிழகத்தில் பால் உற்பத்தி

***12618—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் உற்பத்தியாகும் பால் எவ்வளவு?

(ஆ) அதில் தமிழக அரசு கொள்முதல் செய்யும் பாலின் அளவு என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் 1997-98ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 108.04 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகியுள்ளது.

(ஆ) பால்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக நாள் ஒன்றுக்கு சராசரியாகக் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு 15 இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர்கள் ஆகும்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் பால் கொள்முதலை அதிகப்படுத்துவதற்காக, பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கின்ற வகையில் அரசு என்னென்ன சலுகைகள் செய்கின்றன? பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியானதற்கு முக்கிய காரணம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் பால் கொள்முதல் விலையை ரூ. 1.50 காசு உயர்த்தியுள்ளார்கள். மேலும் கால்நடைத் தீவனத்திற்கான விலையும் உயர்த்தாமல் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுக்கு வேண்டிய கறவை மாட்டுக் கடன்கள், can-கள், Milk testers போன்றவைகளெல்லாம்

வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சொல்லப்போனால் 12 ஆண்டுகாலத்தைக் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது 1998-99-ல்தான் அதிக பால் உற்பத்தி அடைந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 715, திரு. டி. அமரமூர்த்தி, திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**715—**

## நீதிபதி பணியிடங்கள்

***16193—திரு. டி. அமரமூர்த்தி:**
**திரு. ஐ. கணேசன்:**
**திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்திலுள்ள பெரும்பாலான நீதிமன்றங்களில் காலியாகவுள்ள சார்பு நீதிபதிகள் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகளின் பணியிடங்கள் நிரப்பப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிரப்பப்படும்?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

தற்சமயம் தமிழகத்தில் சார்பு நீதிமன்றங்களில் உள்ள மொத்தப் பணியிடங்கள் 125 ஆகும். அவற்றில் 16 இடங்களே நிரப்பப்படாமல் உள்ளன. இக்காலியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாவட்ட உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களில் உள்ள மொத்தப் பணியிடங்கள் 410. அவற்றில் 44 பணியிடங்கள் காலியாக உள்ளன. மேற்படி காலியிடங்களை அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்ப தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





*முற்பகல் 10-05*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள சார்பு நீதிமன்றங்களிலேயும், மாவட்ட உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களிலேயும் காலிப் பணியிடங்கள் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். இப்படி மாவட்ட அளவிலே உள்ள நீதிமன்றங்களிலே நீதிபதிகளினுடைய பணியிடங்கள் காலியாக இருக்கிற காரணத்தாலே வழக்குகள் எல்லாம் முடிக்க முடியாமல் தேங்கியிருக்கின்றன. ஆகவே இதைக் கருத்திலே கொண்டு நடப்பு ஆண்டிலேயே அந்த காலிப் பணியிடங்களை அரசு உடனடியாக நிரப்புமா? அப்படி நீதிபதிகளினுடைய பணியிடங்களை நிரப்புகின்ற நேரத்திலே தேர்வு செய்கின்ற முறையிலே இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்பு நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில் இவை எல்லாம் உயர் நீதிமன்றத்தினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்டவை. பணி மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வாக சார்பு நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். District Munsiff Court, Magistrate Court இவற்றிற்கு நடுவர்கள், இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில்தான் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்படுகின்றனர்; தகுதியாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 716, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**716—**

## கிளைச் சிறைச்சாலைக்கு வசதிகள்

***18128—திரு. இரா. மணிமாறன்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் கிளைச் சிறைச்சாலையில் போதுமான இடவசதி மற்றும் சுகாதார வசதியில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் கிளைச் சிறைச்சாலைக்கு இட வசதியை அதிகரிக்கவும், இதர வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் மற்றும் சிறையினை விரிவுபடுத்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுச் சுகாதார வசதி நன்முறையில் பராமரிக்கப்படுகிறது.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையை விரிவுபடுத்த ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது நீண்ட நாட்களாக இருக்கக்கூடிய பிரச்சினை. 1989—91 ஆகிய வருடங்களில் மறைந்துவிட்ட அண்ணன் சாதிக் பாட்சா அவர்கள் அமைச்சராக இருந்தபோது இந்தக் கிளைச் சிறைச்சாலைக்கு அவரை அழைத்துச் சென்று பார்வையிட்டோம். அப்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது. கடந்த 8 ஆண்டுகாலமாக அதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அங்கே பெண்களுக்கு என்றுகூட தனியாகச் சிறைச்சாலை இல்லை. வட்டாட்சியர் அலுவலகத்தில் மிகவும் சிறியதான இடத்தில் அந்தச் சிறைச்சாலை இருக்கின்ற காரணத்தால் நவீன கழிப்பறை மற்றும் சுகாதார வசதிகள் இல்லாமல் காடுபோல் இருக்கிறது. எனவே இந்த ஆண்டே அதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் கிளைச் சிறையில் இட நெருக்கடி இருக்கிறது என்பது உண்மை. அங்கேயுள்ள மொத்த இடம் 40. சராசரி 100 கைதிகள் அங்கே அடைக்கப்படுகிறார்கள். இதற்காக திண்டுக்கல் அருகே உள்ள பள்ளிப்பட்டு என்கிற கிராமத்தில் இரண்டு ஏக்கர், 28,584 சதுர அடி நிலத்தை அரசு கையகப்படுத்தியிருக்கிறது. இது சிறைத் துறைக்கு 8-9-1998-ல்தான் வருவாய்த் துறையிலிருந்து கிடைத்திருக்கிறது. இதற்காக மத்திய அரசிடமிருந்து 15 இலட்சம் ரூபாயும், அதற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்காக தமிழக அரசு 7 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறது என்றாலும் சிறைத் துறைத் தலைவர் 93 இலட்சம் ரூபாயிலே ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். அதை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். நிதித் துறையினுடைய ஒப்புதலுக்குப் பிறகு அதனுடைய ஏற்பாடுகள் துரிதமாக்கப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 717, திரு. ஜி.கே. மணி. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**717—**

## பெண்களுக்கு முன்னுரிமை

***20880—திரு. ஜி.கே. மணி :**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு படிப்பு, வேலைவாய்ப்பு முதலியவற்றில் முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்வி நிலையங்களில் அனுமதி மற்றும் அரசுப் பணிகளில் நியமனம் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடின்றி தகுதியுடைய அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இது தவிர நேரடி நியமனங்களின் மூலம் நிரப்பப்படும் 30 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கும் அவசியம் எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெண்கள் இந்த நாட்டினுடைய கண்கள்' என்ற அளவிலே தந்தை பெரியார் அவர்கள் சொன்ன பெண்ணுரிமையைப் பேணி, அவர்கள் சொல்லிவந்த கருத்துகளை எல்லாம் நிறைவேற்றக்கூடிய வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளிலே 33 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கி பெண்களுக்குப் பெருமையைச் சேர்த்திருக்கிறார்கள். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இந்தநேரத்திலே வேண்டி

[1999 மே 11

விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு குடும்பம் முன்னேறுவதற்கு ஆண்களைவிட பெண்கள் மிக முக்கிய பங்காக இருக்கிற காரணத்தால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை இனப் பெண்கள் முன்னேறுவதற்கு அவர்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீட்டு முறையை வழங்குவதற்கு ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டில் முதல்வராகப் பொறுப்பேற்ற நேரத்தில், நேரடி நியமனங்கள் மூலம் நியமிக்கப்படும் பணியிடங்களில் 30 விழுக்காடு பெண்களுக்கு வழங்கப்பட வேண்டுமென உத்தரவிட்டு அது நடைமுறையில் உள்ளது. மீதமுள்ள 70 விழுக்காட்டிலும் போட்டியிடப் பெண்களுக்கு வாய்ப்புகள் உள்ளன. மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 30 விழுக்காட்டிலும் ஆண்கள், பெண்கள் பாகுபாடின்றி நியமனங்கள் அளிக்கப்படுவதால் இவற்றின் மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பெண்கள் பயனடைய வாய்ப்புகள் உள்ளன. இது தவிர, ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர் பணியிடங்களில் பெண் ஆசிரியைகளையே நியமனம் செய்ய வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. இதேபோன்று சத்துணவுக் கூடங்களில் சத்துணவு அமைப்பாளர், உதவியாளர், சமையலர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களைப் பெண்களைக் கொண்டே நிரப்ப வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் சமூக நலத் துறையின்கீழ் மாவட்ட சமூக நல அலுவலர், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர், மண்டல ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர், பார்வையற்ற பெண்களுக்கான தொழில் கூடத்துடன்கூடிய அரசு மறுவாழ்வு மையக் கண்காணிப்பாளர் ஆகிய பணியிடங்கள் யாவும் பெண்களைக் கொண்டே நியமனம் செய்யப்படுகின்றன. எனவே கல்வி, வேலைவாய்ப்பிலும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 718, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.



1999 மே 11]

**718—**

## நிலத்தடி நீர் பாதிப்பு

***5282—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம், சிதம்பரம் நகரக் கழிவு நீரால் வளர்க்கப்பட்டு வரும் லால்புரம் புல் பண்ணையினால் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரம் நகரக் கழிவு நீரால் வளர்க்கப்பட்டு வரும் லால்புரம் புல் பண்ணையினால் நிலத்தடி நீர் மாசுபடுகிறது என்பது உண்மை. எனவே கழிவு நீரை வெளியேற்றுவதற்கும் மற்றும நகராட்சி திடக் கழிவுகளை வெளியேற்றுவதற்கும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவினைப் பெறும்படியும், கழிவு நீரைச் சுத்திகரித்த பின்னர் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கும், சிதம்பரம் நகராட்சி, வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரக் கழிவு நீரை சுத்திகரித்து விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு அறிவுறுத்தியிருந்தாலும் இன்றைக்கும் பழைய சூழ்நிலைதான் நிலவுகின்றது. இதனால் அங்கேயிருக்கக்கூடிய குடிநீர் மிகவும் நாற்றம் உள்ளதாலும் கருப்புக் கலரில் இருக்கின்ற காரணத்தினாலும் அந்தக் குடிநீரைச் சுத்தமாகப் பயன்படுத்த முடியவில்லை. அதுமட்டுமல்ல. சிதம்பரம் நகரிலிருந்தும் வெளியேற்றப்படக்கூடிய பாதாளச் சாக்கடைக் கழிவு நீர் கான்சாகிப் வாய்க்கால் என்ற வாய்க்காலிலே கலக்கின்றது. அந்த வாய்க்கால் நீரை குடிநீருக்காகக்கூட சில கிராமங்களில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதிலே ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுகின்றார்கள். இதனால் விவசாயிகளின் கைகளிலே அரிப்பு, கால்களிலே அரிப்பு ஏற்படுகின்றது. எனவே இவற்றைத் தடுக்கின்ற

வகையிலே எந்த விதத்திலும் பயன்படாமல் நேராகக் கடலில் சென்று கலக்கின்ற வெள்ளாற்றில் இந்தக் கழிவு நீரைக் கலப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சியில் நாள் ஒன்றுக்கு சுமார் 29 இலட்சத்து 37 ஆயிரம் லிட்டர் கழிவு நீர் எடத்தெருப் பகுதி, கனகசபை நகர்ப் பகுதி, தில்லையம்மன் கோயில் பகுதி ஆகிய இடங்களிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் அமையப்பெற்றுள்ள லால்புரம் பகுதியில் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் அமையப்பெற்ற கழிவு நீர் சேகரிப்புக் குட்டையில் பாதாளக் கழிவு நீர்க் குழாய் மூலம் சேகரிக்கப்படுகிறது. சிதம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட லால்புரம் பகுதியில் புல் பண்ணை சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ளது. சிதம்பரம் நகராட்சியிலிருந்து வெளியாகும் கழிவு நீரானது கழிவு நீர்க் குட்டையில் சேகரிக்கப்பட்டு பின் 25 ஏக்கர் பரப்பில் மட்டுமே புல் பண்ணைக்குப் பயன்படுத்தப்படுகிறது. மீதியுள்ள நிலங்கள் பயிரிடப்படாமல் உள்ளன. இங்கு வளர்க்கப்படும் தென்னை, யூகலிப்டஸ் மரங்கள் இக்கழிவு நீரால் பயன் பெறுகின்றன. இக்கழிவு நீர்க் குட்டையானது 1966 முதல் நடைமுறையில் உள்ளது என அறியப்பட்டது. கழிவு நீரைச் சுத்திகரிக்க எல்லாவிதமான நவீன சுத்திகரிப்பு முறைகளையும் மேற்கொள்ள வேண்டுமென சிதம்பரம் நகராட்சி பலமுறை அறிவுறுத்தப்பட்டும் மேற்கொள்ளப்படவில்லை. இக்கழிவு நீரானது மழைக் காலங்களில் மழை நீருடன் கலந்து சுமார் 750 மீட்டர் தொலைவிலுள்ள பாசிமுத்தான் கால்வாயில் கலப்பதாக அறியப்படுகிறது. பின்னர் இந்த ஓடையானது பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை வழியாகச் சென்று கடலில் கலக்கிறது. பாசிமுத்தான் ஓடையில் இந்த நீர் செல்லும் வழியில் கசிவு ஏற்பட்டு நிலத்தடி நீர் மாசுபட்டதாகப் புகார் ஏதும் தற்சமயம் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அலுவலகத்தில் பெறப்படவில்லை. எனினும் சிதம்பரம் நகராட்சி, கழிவு நீரை சுத்திகரித்த பின்னர் பாசனத்திற்கு பயன்படுத்தும்படி அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 10-15

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் பெறப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நான் அங்கே நேரில் சென்று பார்த்தபோதுகூட





என்னிடம் அந்தக் குடிநீரைக் காண்பித்தார்கள். அந்தக் குடிநீர் மிகவும் மாசுபட்டிருக்கிறது. எனவே சற்று கடுமையான நடவடிக்கை எடுத்து இந்தக் கழிவு நீரை புல் பண்ணைக்கு அனுப்பாமல் வேறு வழியில் வெளியேற்ற முடியுமா என்பதை அரசு ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 719, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**719—**

## நடமாடும் கால்நடை மருத்துவமனை

***11660—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், வாழமரக்கோட்டை கிராமத்தில் நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரக்கோட்டையில் கால்நடை மருந்தகம் இருக்கிறது. வாழமரக்கோட்டை என்பது சுந்தரவள நாட்டினுடைய 14 கிராமங்களுக்குத் தலைமையிடமாக இருக்கிற இடம். அந்தப் பகுதியில் ஒரு நடமாடும் மருத்துவமனைதான் (Mobile Unit) இருக்கிறது. நிரந்தர மருத்துவமனையோ அல்லது துணை மருத்துவமனையோ அல்ல அது. ஒரு நடமாடும் மருத்துவமனை தொடங்குவதற்கு அரசிடம் கருத்துரு இருக்கிறதா என்ற இந்தக்

[1999 மே 11

கேள்வியைப் போட்ட பின்னாலேகூட அத்தகைய கருத்துரு உருவாகியிருக்கலாம். அப்படியில்லாவிட்டாலும் அதை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மாரியம்மன்கோயில் என்னும் ஊரில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குப் பார்வைக் கிளை நிலையம் ஒன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற வாழமரககோட்டையில் தற்போது செயல்பட்டு வருகிறது. பார்வைக் கிளை நிலையம் மேற்படி ஊர்களில் உள்ள கால்நடைகளின் சிகிச்சைத் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றது. மேலும் தஞ்சாவூரில் உள்ள நடமாடும் வாகனப் பிரிவின் கால்நடை மருந்தகம் தடம் எண் 2 வாழமரக்கோட்டை என்ற ஊருக்கு ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை சென்று கால்நடைகளுக்கான சிகிச்சைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடமாடும் மருத்துவமனை பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதுவே நடமாடும் மருத்துவமனைதான். நடமாடிக்கொண்டேதான் இருக்கும். அதை ஒரே இடத்தில் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 720. திரு. டி. மணி. மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**720—**

## மாட்டுத் தீவனம்

***14620—திரு. டி. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மாட்டுத் தீவனங்களில் கலப்படத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால்நடைத் தீவனத்தில் கலப்படத்தைத் தடுப்பதற்கு ஏதுவாக தக்க சட்டமுன்வடிவு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1999 மே 11]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கிலோ மாட்டுத் தீவனத்தை வாங்கி தண்ணீரில் கரைத்துப் பார்க்கிறபோது 100 கிராம் அல்லது 200 கிராம் வரை மணல் அதில் சேர்க்கப்பட்டிருப்பது தெரிகிறது. இந்தத் தீவனத்தை மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கிறபோது கால்நடைகளுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற தீவனங்களை அவசரமாக தடை செய்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குத் தேவைப்படும் கால்நடைத் தீவனங்கள் கால்நடைத் துறை மூலம் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அவை 'ஆவின்' மூலமாகவும், அங்கீகாரம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் தீவனங்கள் அனைத்தும், அவ்வப்போது தர நிர்ணயம் செய்யப்பட்டு பகுப்பாய்வு நடத்தப்பட்டு கண்டறியப்படுகிறது. மேலும், பொதுமக்கள், விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளுக்குத் தனிப்பட்ட முறையில் தேவைப்படும் தீவனத்தைத் தனியாரிடம் வாங்குவதன்மூலம் பயனடைகிறார்கள். அவ்வாறு தனியாரிடம் பெறப்படும் தீவனங்கள், கலப்படமாகவோ அல்லது தரமற்றதாகவோ உள்ளது என அவர்களிடமிருந்து அரசுக்கு இதுவரை புகார்கள் வரவில்லை. ஆகவே, கால்நடைத் தீவனத்தில் கலப்படத்தைத் தடுக்க சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் சூழ்நிலை இதுவரை எழவில்லை. என்றாலும் இந்த அரசு கலப்படமற்ற, தரமான தீவனங்களைத் தனியாரிடம் வாங்கி பொதுமக்களுக்கு வழங்கிடத் தேவையான சட்ட முன்வடிவை இயற்றி மைய அரசின் ஒப்புதலுக்காக 10-12-1998 ஆம் தேதி அனுப்பி வைத்திருக்கிறது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் சட்டம் முறைப்படி செயலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

[1999 மே 11

## 2. விதி 111-ன்கீழ் வேளாண்மைத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

**கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் நிர்ணயிக்கக் கோரி விவசாயிகள் போராடுவது குறித்து 22-3-1999 அன்று எழுப்பிய சிறப்புக் கவன ஈர்ப்பு மீதான விளக்கத்திற்குத் திருத்த அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை அளித்தல். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22-3-1999 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 'கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கேட்டு விவசாயிகள் போராடுவது குறித்த' சிறப்புக் கவன ஈர்ப்பு விவாதிக்கப்பட்டபோது, அதில் நான் அளித்த விளக்கத்தில், சில திருத்தங்களைக் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்:

"1995-96 ஆம் ஆண்டு, முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்த விலை ரூ. 475 – 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானத்திற்குக் கொடுக்கவேண்டும் என்பது மத்திய அரசினுடைய சட்டபூர்வமான விலை. ஆனால் மைய அரசு பரிந்துரை செய்தது 391 ரூபாய்" என்று இருப்பதில் கீழ்க்கண்டவாறு திருத்தம் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

"1995-96 ஆம் ஆண்டு, கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்த விலை ரூ. 475. ஆனால் மத்திய அரசு நிர்ணயம் செய்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலை 425 ரூபாயாகும்."

(2) "1997-98-ல் கழக ஆட்சியில் மீண்டும் 630 ரூபாய். 8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு ரூ. 630 கொடுகக வேண்டும், விவசாயிகளுக்கு என்று மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யலாம் என்பது நம்முடைய சிபாரிசு என்றே இருக்கிறது." அதைக் கீழ்க்கண்டவாறு திருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்:



1999 மே 11] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

"1997-98-ல் கழக ஆட்சியில் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்த விலை ரூ. 633 ஆகும்".

(3) "அதைப்போலவே, 1997-98 ஆம் ஆண்டிலும் ஆலைகள் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் 82 கோடி ரூபாய் பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, அதிலே 6 கோடி ரூபாயை வங்கிக் கடனாக அந்த ஆலைகளே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியது போக, 76 கோடி ரூபாயை இந்த அரசு ஆலைகளுக்குக் கடனாக வழங்கியது. அந்தத் தொகை, பொங்கலுக்கு முன்னதாகவே விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று முதலமைச்சரவர்கள் உத்தரவிட்டு—ஏனென்றால், பொங்கல் திருநாளிலே பணம் இல்லை என்ற சிரமத்திற்கு அவர்கள் ஆளாகக்கூடாது என்று எண்ணி—பொங்கலுக்கு முன்னதாகவே அந்தப் பணம் வழங்கப்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்" என்பது கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப்படுகிறது:

"அதைப்போலவே 1997-98 ஆம் ஆண்டிலும், ஆலைகள், விவசாயிகளுக்கு உரிய காலத்தில் 82 கோடி ரூபாய் பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, அதிலே 6 கோடி ரூபாயை வங்கிக் கடனாக இந்த ஆலைகளே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியதுபோக, 76 கோடி ரூபாயை இந்த அரசு ஆலைகளுக்குக் கடனாக வழங்கியது. அந்தத் தொகை தீபாவளிக்கு முன்னதாகவே இந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று முதலமைச்சரவர்கள் உத்தரவிட்டு—ஏனென்றால், தீபாவளித் திருநாளில் பணம் இல்லை என்று அவர்கள் சிரமத்திற்கு ஆளாகக்கூடாது என்று எண்ணி—தீபாவளிக்கு முன்னதாகவே இந்தப் பணம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்."

(4) "ஆக உச்சநீதிமன்றத்தின தீர்ப்பு வந்ததும், மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை எந்த அளவுக்கு இந்த ஆண்டு [illegible] அரசாங்கம் முடிவு செய்யும்" என்பதைக் கீழ்க்[illegible] செய்யக் கேட்டுக்கொள்கிறேன்:

"ஆக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்ததும், மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை [illegible] அளவுக்கு இந்த ஆண்டு கொடுக்க முடியும் என்று மாநில [illegible] முடிவு செய்யும்."

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1999 மே 11

(5) "கரும்பு விலை நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கத்திற்குத்தான் முழுமையான அதிகாரம் இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கு இல்லை. அவர்கள் உச்ச நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு, தடையாணை பெற்றிருக்கிறார்கள்" என்று இருப்பது கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப்படுகிறது :

"கரும்பு விலை நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரை மத்திய அரசாங்கத்திற்குத்தான் முழுமையான அதிகாரம் இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கு இல்லை. அவர்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்குப்போட்டு தடையாணை பெற்றிருக்கிறார்கள்." என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) தண்டராம்பட்டு தொகுதி, கொளமஞ்சனூர் அருகே பெண்ணாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மணிவர்மா அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. க. மணிவர்மா.

***திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டு தொகுதி, தாணிப்பாடி சாலையில், கொளமஞ்சனூர் அருகே பெண்ணாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



1999 மே 11] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

**விவர அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம், திருவண்ணாமலை—தாணிப்பாடி சாலை (அரசு பெரிய மாவட்டச் சாலை) கி.மீ. 22/6-8-ல் தென்பெண்ணையாற்றின் குறுக்கே அமைந்துள்ளது. இவ்விடத்தில் ஆற்றின் நீர்வழிப்பாதை அகலம் 92.60 மீட்டராகும். இவ்விடத்தில் தற்போது ஒவ்வொன்றும் 3.20 மீ. அகலமுடைய 28 கண்களும், 3.00 மீ. அகலமுடைய ஒரு கண்ணும் ஆக மொத்தம் 29 கண்கள் கொண்ட மூழ்குபாலம் ஒன்று அமைந்துள்ளது. பெரும் மழைக்காலங்களிலும், இம்மூழ்கு பாலத்தின் மேல்படுகையில் அமைந்துள்ள சாத்தனூர் அணை திறந்து விடப்படும்போதும், இந்த மூழ்கு பாலத்தின் மீது வெள்ளம் செல்வதால் போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் ஒன்று கட்டுவதற்குத தோராயமாக ரூ. 300.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசு ஆண்டுதோறும் நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்திற்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ளும் வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10-25

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்தப் பாலம் மூழ்குபாலம் என்றும், 300 இலட்சம் ரூபாய் செலவு செய்தால்தான் உயர்மட்டப் பாலம் அமைக்க முடியும் என்ற நிலையையும், அரசு பகுதி-2 திட்டத்தின்கீழ் இந்தப் பணியை எடுத்துச் செயல்படுத்த முடியாது என்ற நிலையையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருவது, தண்டராம்பட்டு—தாணிப்பாடி சாலையில் அமைந்திருக்கிற கொளமஞ்சனூர் அருகே பெண்ணாறு ஓடுகின்றது. பெண்ணாற்றின் குறுக்கே தரைப்பாலம் இருக்கின்றது. அந்தச் சாலையில் அரூர்—சேலம் மற்றும் சேலம்—கோயம்புத்தூர் வரையிலே ஏராளமான பேருந்துகள் செல்வதால், போக்குவரத்தும் நிறைய இருக்கின்றது. சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், தாணிப்பாடி, பெருங்களத்தூர், மோத்துக்கல, ரெட்டியார்பாளையம், நாராயணக்குப்பம் போன்ற பகுதிகளிலே வாழ்கின்ற மக்கள் எல்லாம் மழைக்காலங்களிலும் மற்றும்

சாத்தனூர் அணையிலிருந்து அதிகமான அளவிலே தண்ணீர் திறந்து விடுகின்ற நேரத்திலேயும் வெளி மாவட்டத்தோடு தொடர்பு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். கடந்த ஆண்டுகூட 60 நாட்கள் வெளிமாவட்டத்தோடு தொடர்பு இல்லாமல் அந்த மக்கள் அல்லல்பட்டு, அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பாகக்கூட, வங்கி அதிகாரி—ஆடிட்டர்—அவர்களை அடித்துச் சென்று, அவர் இறந்தே போய்விட்டார். திருக்கோவிலூர் அருகே சுமார் 40, 50 கிலோ மீட்டர் தூரம் வரையில் அந்த வங்கி அதிகாரி அடித்துச் செல்லப்பட்டு இறந்து கிடந்த சம்பவம் 2, 3 மாதங்களுக்கு முன்பாக நடந்திருக்கிறது. மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வரும்போதெல்லாம், அந்தப் பகுதியிலே வருகின்ற வெள்ளத்தின் காரணமாக வேறு வழியாக 45, 50 கிலோ மீட்டர் சென்றுதான் அந்தப் பகுதியிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொற்பொழிவா ஆற்றுகிறீர்கள்? சுருக்கமாக வினாவைக் கேளுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** பல்வேறு நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றார். கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு பாலங்களை அறிவித்து தொடங்கி வைத்திருக்கிறார்கள். NABARD திட்டத்தின் மூலமாவது இந்த மேம்பாலத்தை எடுத்து, இந்தத் திட்டத்தை முடித்துக் கொடுப்பீர்களா? கொடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக புதிய பாலங்கள் கட்டுவதற்கும், பழைய பாலங்களைப் புதுப்பிப்பதற்குமான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது. பெண்ணாற்றில் எந்த இடத்திலே பாலம் கட்டினாலும் கோடிக்கணக்கான ரூபாய் அதற்குத் தேவைப்படுகிறது. எனவே இந்தத் திட்டத்தை பகுதி-2 திட்டத்திலே இணைக்க முடியவில்லை என்றாலும்கூட, வரும் காலங்களில் பல்வேறு வகைகளில் நிதியாதாரங்களைப் பெறுகின்ற நம்முடைய அரசு இந்தத் திட்டத்தையும் பரிசீலிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) விளாகம்—எடையாத்தூர் இடையில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சண்முகம், திரு. வீ. தமிழ்மணி, திரு. கே. சுந்தர்





ஆகியோர்களில் ஒருவர் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. வீ. தமிழ்மணி.

***திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாகம்—எடையாத்தூர் இடையில் பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைப்பதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

நெரும்பூர்—கன்னிகோயில் சாலையானது (கி.மீ. 0/0-8/2) கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டச் சாலையாகும். இச்சாலை நெரும்பூர் புதுப்பட்டினம் சாலை (அரசு இதர மாவட்டச் சாலை) கி.மீ. 0/2-ல் பிரிந்து சென்று நெல்வாய்—திருக்கழுக்குன்றம் சாலை (அரசு இதர மாவட்டச் சாலை) கி.மீ. 23/6-ல் இணைகிறது. நெரும்பூர்—கன்னிகோயில் சாலை கி.மீ. 4/10-ல் விளாகம் எனும் கிராமம் பாலாற்றின் இடது கரையிலும் எடையாத்தூர் எனும் கிராமம் பாலாற்றின் வலது கரையிலும் அமைந்துள்ளன. மேற்கூறிய இரண்டு கிராமங்களையும் இணைக்கும் வகையில் பாலாற்றின் பழைய வண்டிப்பாதை உள்ளது. தற்சமயம் கவன ஈர்ப்பு அறிவிப்பில் சொல்லப்பட்ட மேற்கூறிய பாலாற்றில் உள்ள வண்டிப்பாதைக்கு மாற்றாக தரைப்பாலம் அமைத்துத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கூறிய தரைப்பாலம் அமைக்கக் கோரிய இடத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தூரத்தில் பாலாற்றின் கீழ்படுகையில் இரும்புலிச்சேரி கிராமத்தினருகில் நெருமபூர் - புதுப்பட்டினம் சாலையில் பிரிந்து இரும்புலிச்சேரி வழியாக எடையாத்தூர் செல்லும் சாலை (இதர மாவட்டச் சாலை) கி.மீ. 1/2-ல் பாலாற்றின் குறுக்கே ஏற்கெனவே தரைப்பாலம் ஒன்று உள்ளது. ஆனால் எடையாத்தூர் கிராம மக்கள் இரும்புலிச்சேரி வரை 3 கி.மீ. நடந்து சென்ற பிறகு பேருந்துகளில் சென்று திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கற்பட்டு செல்ல வேண்டும்.

கவன ஈர்ப்பு அறிவிப்பில் கோரியுள்ளபடி விளாகத்திற்கும் எடையாத்தூருக்கும் இடையில் பாலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்பட்டால் எளிதில் ஆற்றைக் கடந்து செங்கற்பட்டுக்கும் திருக்கழுக்குன்றத்திற்கும் செல்ல முடியும். மேற்கூறிய இடத்தில் ஆற்றின் நீர்வழிப்பாதையின் அகலம் 800 மீட்டராகும். இவ்விடத்தில் குழாய்கள் பதித்த தரைப்பாலம் அமைக்கத் தோராயமாக ரூ. 12 கோடி (ரூபாய் பன்னிரண்டு கோடி மட்டும்) தேவைப்படும். மேற்கூறிய இடத்தில் பாலம் அமைக்கும் பணியானது அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

ஏற்கெனவே தற்போது தரைப்பாலம் அமைக்கக் கோரிய இடத்திற்கு அருகாமையிலேயே (சுமார் 4 கி.மீ. தொலைவில்) மற்றுமொரு தரைப்பாலம் உள்ளதால் இவ்விடத்தில் குறைந்த செலவில் கருங்கல் பலகைகளைக் கொண்டு தரைப்பாலம் அமைக்கலாம். இதற்குத் தோராயமாக ரூ. 20.00 இலட்சம் (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) தேவைப்படும். இப்பணியைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் அதிக அளவில் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், இத்தரைப்பாலம் அமைப்பதால் ஏற்படும் செலவிற்கும் பயனுக்கும் இடையேயான விழுக்காடு மிகவும் குறைவானது என்பதாலும், இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். மேம்பாலம் கட்டுவதற்காக 12 கோடி ரூபாய் தேவைபடுகிறது என்று அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். நான் கேட்டது தரைப்பாலம். அந்தத் தரைப்பாலம் அமைப்பதற்கு சுமார் 1-1/2 கோடி ரூபாயில் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மதிப்பீடு தயார் செய்திருக்கிறார்கள். இந்த 1-1/2 கோடி ரூபாயைக் கொடுத்தாலே அந்த மக்களுடைய குறைகளைப் போக்குகின்ற வகையில் அது அமையும். பொதுவாக, நேராக வருகின்ற பாலாறானது எடையாத்தூர் கிராமம் வரும்போது இரண்டாகப் பிரிந்து எடையாத்தூரை நான்கு பகுதிகளிலேயும் சூழ்ந்துகொள்கிற காரணத்தால், மழைக்காலங்களில், பாலாற்றிலே தண்ணீர் வருகின்ற காலங்களில், அந்தக் கிராமம் மற்ற கிராமங்களிலே இருந்து துண்டிக்கப்பட்டு எந்தவிதமான போக்குவரத்தோ, வசதியோ இல்லாமல் ஒரு தீவுபோல அமைந்திருக்கிற கிராமம்தான் எடையாத்தூர் கிராமம். அதுமட்டுமல்ல, பக்கத்திலே ஒரு பாலம் இருப்பதாக இந்தக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். அந்தப் பாலத்தை கடந்து வரவேண்டுமென்றால் சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வர வேண்டிய சூழ்நிலை





இருக்கிறது. மேலும் அந்தக் கிராமத்திலே சுமார் 3,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடுகிறார்கள். அங்கே கரும்பு மிகச் சிறப்பாக விளைகிறது. ஓர் ஏக்கருக்கு 80 டன் கரும்பு அங்கே விளைச்சல் ஆகிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவைக் கேளுங்கள்

**திரு. வீ. தமிழ்மணி:** அந்தக் கரும்பை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாகவும், அந்த மக்கள் அன்றாடம் மற்ற கிராமங்களோடு தொடர்பு கொள்வதற்கும் இந்தத் தரைப்பாலம் மிக அவசியம் என்ற காரணத்தால் இந்தக் குறைந்த தொகையை—106 பாலங்கள் Tender விட்டதிலே 56 கோடி ரூபாய் மீதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணத்திலாவது 2 கோடி ரூபாயை ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, பாலாற்றிலே பாலம் கட்டுவதற்கு பல கோடி ரூபாய் ஒவ்வொரு பாலத்திற்கும் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 106 பாலங்கள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்த தொகையிலே மிச்சம் இருக்கிறது. அந்தத் தொகையில் ஒதுக்கலாம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே ஏற்பட்ட வெள்ளச் சேதத்திலே இடிந்துபோன பாலங்களைத் திரும்பக் கட்டுவதற்குத்தான் அதிலே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் வண்டிப் பாதை இருக்கின்ற இடத்திலே பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கிறார். இதுகுறித்து பரிசீலிக்கலாம்.

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து ஒன்பதாவது முதல் நூற்றுத் தொண்ணூற்று மூன்றாவது வரையிலான (பதினோராவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. விதி 110- ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

### நெசவாளர் குழந்தைகளுக்கு தேசிய ஆடை வடிவமைப்பு மையம் அளிக்கவுள்ள தொழில்நுட்பக் கல்விப் பயிற்சி குறித்து கைத்தறித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து விதி 110-ன்கீழ் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு வைக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் :

நெசவாளர் குழந்தைகள் நெசவாளர்களாகவே தொடர்ந்து தொழில் செய்வதைத் தவிர்க்க நெசவாளர் குழந்தைகளுக்கும் தொழில்நுட்பக் கல்வி அளிப்பதற்கு 510 நெசவாளர் குழந்தைகளுக்கு ரூ. 36.60 இலட்சம் செலவில் தேசிய ஆடை வடிவமைப்பு மையம், சென்னை N.I.F.T. கூட்டுறவுக் கல்வி நிதியின் உதவியினால் வரும் கல்வி ஆண்டிலிருந்து பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### *தமிழ்நாடு நகரகப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரகப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"1999ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரகப் பரப்பிடங்களில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்படுத்துதலும் ஒழுங்குமுறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1999-2000 விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 1999-2000 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 30-பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 334,58,78,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *4699*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் தொகுதியில் உள்ள பெருமுகை ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.334,58,78,000/-*ல் *ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4314*, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை வட்டம், கருமாண்டிசெல்லிபாளையம் சுள்ளிப்பாளையம், எல்லீஸ் பேட்டை, தாளக்கரைபுதூர், வெட்டையண் கிணறு, பாண்டியம்பாளையம், கொளத்துப்பாளையம் ஆகிய இடங்களில் வீட்டுமனை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு வீட்டுமனை வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.334,58,78,000/-*ல் *ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4033*, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.334,58,78,000/-*ல் *ரூ.100/-* குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3358*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ரங்காபுரம் ஆதிதிராவிடர் காலனியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.334,58,78,000/-*ல் *ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2369*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியிலுள்ள வீடு இல்லாத அருந்ததியர், ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.334,58,78,000/-*ல் *ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4486*, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திஜையூர் ஒன்றியம், பிரதாபராமபுரத்தில் வாழும் பழங்குடியினருக்கு மனைப் பட்டாக்கள் வழங்கி, அங்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.334,58,78,000/-*ல் *ரூ.100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4376, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் மாணவியர் விடுதி ஒன்று சொந்தக் கட்டடத்தில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3008, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களில் வாழும் ஏழை ஆதிதிராவிட மக்களின் குடிசைகளுக்கு ஒற்றை மின் விளக்கு அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 477, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நகரிலுள்ள கே.வி.ஆர். நகர் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள 50-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4533, திரு. பி. வெங்கடசாமி.



**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, 'To discuss the need to provide house sites, Pattas and to allot Houses to the Scheduled Castes and Scheduled Tribes people in Tamil Nadu, I Move—

"That the sum of Rs. 334,58,78,000/- allocated under Demand No. 30-Welfare of the Scheduled Tribes and Castes, etc. be reduced by Rs.100/"-.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3946, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் செயல்படும் மன்னார்குடி தொகுதி, சித்தமல்லி கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2544, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1305, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3720, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கோட்டை நகராட்சி, ஆதிதிராவிட மாணவர் விடுதியைச் செப்பனிட்டு குடிநீர் வசதி செய்து தா வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4259, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சி ஆதிதிராவிட இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3551, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கையை வருடத்திற்கு 500 என்று இலக்கு நிர்ணயித்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4099, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், வெங்கடாசலபுரம் ஊராட்சியில் வாழும் ஆதிதிராவிடர்கள் குடியிருக்க குடியிருப்புகளும் சமுதாயக் கூடமும் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற. ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1191, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 3887, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் மனைப் பட்டா வேண்டி விண்ணப்பித்த அனைத்து ஆதிதிராவிடர்களுக்கும் இலவச மனைப் பட்டாக்கள் துரிதமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4559, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருங்குளத்தூர், குயிலம், இளயாங்கன்னி, சதகுப்பம், கொட்டையூர், பெருந்துறைப்பட்டு, பேராம்பட்டு ஆகிய கிராமங்களில் வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3966, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாங்குநேரி தொகுதி, மருகால்குறிச்சியிலிருந்து வில்வராயகுளம் ஆதிதிராவிடர் கிராமத்திற்குச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.334,58,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[1999 மே 11

## 8. அரசினர் தீர்மானம்

### (அ) விதி 185(2)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 185(2)-ஐத் தளர்த்தி 1993 ஆம் ஆண்டு மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்பு) சட்டமானது (மையச் சட்டம் 46/1993) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்று பயன்படுத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் இன்றே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 9. அரசினர் தனித் தீர்மானம்

***மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்பு) சட்டம், 1993-ஐ (மையச் சட்டம் 46/1993) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுப் பயன்படுத்தப்படுத்துதல்***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்



1999 மே 11]

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மனிதக் கழிவுகளை மனிதர்களைக் கொண்டே அகற்றச் செய்வதான, மனிதரை இழிவுபடுத்தும் பழக்கத்தை ஒழிக்கும் பொருட்டு, மனிதர்களை அதற்கான பணியில் அமர்த்துகின்ற செயலையே ஒரு குற்றச் செயலாக அறிவிப்பதற்காகவும், அதன்மூலம் உலர்ந்த வகைக் கழிவறைகள் மேற்கொண்டும் பெருகாமல் தடுப்பதற்காகவும், வடிநீர்த் தடுக்கு அமைவுள்ள கழிவறைகள் கட்டப்படுவதையும் பேணி வரப்படுவதையும் முறைப்படுத்துவதற்காகவும் மற்றும் அவை தொடர்பான அல்லது அவற்றின் இடைவிளைவான பிற விஷயங்களுக்கும் வகை செய்வதற்காகவும் இந்தியா முழுவதிலும் ஒரே மாதிரியான சட்டமொன்று இருப்பது விரும்பத்தக்கது என இந்தப் பேரவை கருதுவதாலும்;

அப்பொருளானது முக்கியமாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஏழாம் இணைப்புப் பட்டியலில் உள்ள மாநிலப் பட்டியலின் பதிவு 6-இன் (மக்கள் நல்வாழ்வு, மற்றும் துப்புரவுப் பணி....) வீச்சி எல்லைக்குள் வருவதாலும் நாடாளுமன்றம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 249,250, 252(1) ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறல்லாமல், மேற்சொன்ன பொருள் குறித்து மாநிலத்திற்காக அத்தகைய சட்டமொன்றை இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்பதாலும்;

மேற்சொன்னவற்றை நாடாளுமன்றம் சட்டத்தின் மூலமாக முறைப்படுத்த வேண்டும் என்பதற்கான தீர்மானமொன்றை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) ஆம் கூறின்படி ஆந்திரப் பிரதேசம், கோவா, கர்நாடகம், மஹாராஷ்டிரம், திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்கள் நிறைவேற்றியுள்ளதன் விளைவாக 1993ஆம் ஆண்டு மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்பு) சட்டம் (மையச் சட்டம் 46/1993) என்கிற சட்டமொன்றை நாடாளுமன்றம் இயற்றியுள்ளதாலும்;

மேற்சொன்ன 1993ஆம் ஆண்டு மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்பு) சட்டத்தினை (மையச் சட்டம் 46/1993) தமிழ்நாடு மாநிலமும் ஏற்றுப் பயன்படுத்துவதற்கு இந்தப் பேரவை விரும்புவதாலும்;

[திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு] [1999 மே 11

இப்போது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) ஆம் கூறின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, இந்தப் பேரவையானது, 1993 ஆம் ஆண்டு மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்பு) சட்டமானது (மையச் சட்டம் 46/1993) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று இதன்மூலம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 30—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. அதோடு சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள அரசினர் தனித் தீர்மானமும் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர்கள் பேச இருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையின் மீதும், தனித் தீர்மானத்தின் மீதும் இரண்டையும் சேர்த்துதான் விவாதம் நடக்கின்றது என்பதை மீண்டும் அறிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கிறேன்.

@285 ஆம் முதல் 296 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1999 மே 11]

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்கு முதலிலே நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பல பேர் வெளியிலே என்ன நினைக்கிறார்கள் என்றால், எந்தச் சலுகையாக இருந்தாலும் அரிசனங்களுக்குதான் — ஆதிதிராவிட நலத் துறையைச் சேர்ந்ததாகத்தான் — இருக்கிறது, எந்தத் துறையில் வேலை கொடுத்தாலும் அவர்களுக்குத்தான் என்று சொல்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் உயர்மட்ட இட ஒதுக்கீடு கண்காணிப்புக் குழு என்று ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழுவிற்குத் தலைவர் அமைச்சர் அவர்கள்தான். அதற்கு ஆதிதிராவிடர் நலத் துறையைச் சேர்ந்த செயலாளர் அவர்கள்தான் காரியதரிசி. இந்தக் குழுவின் கூட்டத்திலே சம்பந்தப்பட்ட 172 அலுவலர்களை, ஒவ்வொரு துறையிலும் பணியாற்றக்கூடியவர்களை அழைத்து நாங்கள் விசாரணை செய்தோம். அப்படி விசாரணை செய்யும்போது 18 சதவீதம் இட ஒதுக்கீடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறதா என்று அவர்களிடத்திலே கேட்கும்போது, ஒரு துறையிலேகூட 18 சதவீதம் நிரப்பப்படவில்லை. ரொம்ப அதிகமாக, கூட்டுறவுத் துறையிலே 10 சதவீதம் இருந்தது. மற்றவற்றில் எல்லாம் 5 சதவீதம், 7 சதவீதம் என்ற அளவிற்குத்தான் இருந்தது இட ஒதுக்கீட்டுக் கொள்கையை கடந்த 50 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்தியதிலே இவ்வளவுதான் நடந்திருக்கிறது. ஆனால் வெளியிலே பார்வைக்கு, அவர்களுக்கு என்ன எந்த வேலையாக இருந்தாலும் 100-க்கு 18 பேருக்கு வேலை கிடைக்கிறது, வேலை கிடைக்கிறது என்று சொல்லி, மற்றவர்கள் இவர்கள் மேலே ஒரு காழ்ப்புணர்ச்சி கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் கண்காணிப்புக் குழுவின் மூலமாக ஓர் அறிக்கையைக் கொடுத்தோம். அந்த அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்திருப்பார்கள் என்று கருதுகின்றேன். நாங்கள் சொன்னோம், இவ்வளவு backlog இருக்கின்றதே; இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றதே; இவற்றை வரக்கூடிய காலங்களில் பூர்த்தி செய்யுங்கள் என்றுகூட அந்த அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டோம்; அவர்களும் சரி என்று சொல்லி, முதல்வர் அவர்களிடத்திலே கலந்தாலோசனை செய்த பிறகு அதைச் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அந்தக் குழு அமைத்தும் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. நாங்கள் கொடுத்த அந்தத் தீர்மானங்களும் ஏதுமில்லாமல் போய்விட்டது என்று அச்சப்படக்கூடிய நிலைமைதான் உள்ளது

என்பதை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகையினாலே உயர்நிலைக் குழு கொடுத்த அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இப்போது ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறோம்; மனிதக் கழிவை அப்புறப்படுத்தும் செயலை மனிதனே, செய்யக்கூடாது என்று. உண்மையிலேயே நான் அதை வரவேற்கின்றேன்; பாராட்டுகின்றேன். ஏனென்றால் மனிதனே அதை எடுத்துக்கொண்டு போவது என்பது வேதனைப்படக்கூடிய விஷயம்தான். அதற்கு ஒரு சட்டத்தை இத்தனை ஆண்டுகாலம் யாரும் கொண்டுவரவில்லை. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மனதில் அது பதிந்து, அந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டுமென்ற ஒரு நிலைமையை உருவாக்கி இருக்கின்றார்கள். அதற்காக அவர்களை, அவர்களுடைய அமைச்சரவையை நான் பாராட்டுகின்றேன். ஆனால் ஒன்று. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். அந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு நாம் வீடுகள் கட்டிக் கொடுத்து இருக்கின்றோம். அவர்கள் இந்தப் பணியில் இல்லாவிட்டால், அவர்களுக்கு வருமானம் எப்படி வரும்? அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு அரசு என்ன திட்டம் வைத்து இருக்கிறது என்பதைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு ஏற்கெனவே கட்டிக் கொடுத்திருக்கின்ற அந்த வீடுகளிலிருந்து அவர்களைக் காலி செய்யாமல், அந்த வீடுகளிலேயே அவர்கள் குடியிருப்பதற்கான சூழ்நிலையை தயவுசெய்து உருவாக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

நான் நேற்றும் முந்தையதினமும் நடைபெற்ற மானியக் கோரிக்கைகளில் பேச முடியாவிட்டாலும்கூட, இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் அது முழுமையாக அமல் செய்யப்படவில்லை. 18 சதவீத இட ஒதுக்கீடு முறையைக் கொண்டுவந்து 1949 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தை டெல்லியில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இயற்றும்போது, அகில உலக மேதை, ஆசியாவின் ஜோதி, பத்தரைமாற்றுத் தங்கம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எல்லாம் சேர்ந்து பேசி, இந்த மக்களுக்கு இட ஒதுக்கீடு கட்டாயம் தேவை;



காரணம், அவர்கள் எல்லாத் துறைகளிலும் தாழ்ந்த நிலைமையிலே இருக்கிறார்கள்; இருப்பதற்கு இடமில்லாமல், கட்டிக்கொள்வதற்கு துணி இல்லாமல், உண்பதற்கு உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறானே, அவனை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவா, அவனுக்கு அறிவு கொடுக்க, அவனைப் படிக்க வைத்து வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினாலேதான் அன்றைக்கு இட ஒதுக்கீடு முறை கொண்டுவரப்பட்டது. இன்றைக்கு ஒவ்வொரு மதத்திற்கும் இட ஒதுக்கீடு வேண்டுமென்றால், கிருத்தவ மதத்திற்கு இத்தனை, முஸ்லிம் மதத்திற்கு இத்தனை, சீக்கிய மதத்திற்கு இத்தனை என்று மதத்தின் அடிப்படையிலே இட ஒதுக்கீடு என்று சொல்வோமேயானால், இந்த நாட்டிலே எத்தனை மதங்கள் இருக்கின்றன? இந்த நாட்டிலே எத்தனை சமுதாயங்கள் இருக்கின்றன? அரிசன மக்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 112 பிரிவுகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 112 பிரிவுகளிலும் இருக்கிற நாங்கள் இந்தப் பிரிவுக்கு வேலை வேண்டும், அந்தப் பிரிவுக்கு வேலை வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருப்போமேயானால், அது நியாயமும் அல்ல, தர்மமும் அல்ல. எனவே மத அடிப்படையிலே இட ஒதுக்கீடு செய்வதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்டிப்பாக நிராகரிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதற்காக இட ஒதுக்கீடு செய்கின்றோம்? வேலைவாய்ப்புக்காக இட ஒதுக்கீடு கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். முஸ்லிமாக இருந்தாலும் சரி, கிருத்துவராக இருந்தாலும் சரி, சீக்கியராக இருந்தாலும் சரி அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை விடுத்து, தனி மதத்திற்கு இட ஒதுக்கீடு கொடுப்பது என்பது நியாயம் அல்ல, தர்மம் அல்ல என்பதை மீண்டும் அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கோயில் நிலங்களைப்பற்றி இன்று காலையில்கூட நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய அண்ணன் கந்தசாமி அவர்கள் என்னிடம் தொலைபேசியிலே சொன்னார்கள். அந்த Subject இன்றைக்கு இல்லையே என்று நான் அவர்களிடம் சொன்னேன். இருந்தாலும்கூட என்னுடைய பெயரைச் சொல்லிவிட்டு, பிறகு பேசு அம்மா என்று கூறினார்கள். அவர்கள் சொன்னதை நான் மீறமுடியவில்லை. ஆகையினாலே இதற்கு அப்பாற்பட்ட விஷயமாக இருந்தாலும்கூட அதுபற்றிச் சொல்ல விரும்புகிறேன். விலை உயர்ந்த கோயில் நிலங்களை குத்தகைக்கு விடுகின்றார்கள். அந்தக் கோயில் நிலங்களை குத்தகைக்கு

விடும்போது அதை சில வசதிபடைத்தவர்கள் எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதை Sub-lease-க்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை நாம் விற்றுவிடுவோமேயானால், யார் அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்து இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அந்த நிலம் போய்ச் சேரும். பின்னர் கோயில் நிர்வாகம் கெட்டுவிடும். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, கோயில் நிலங்களிலே கை வைக்கக்கூடாது. அவர்களிடத்திலே கிஸ்தி வசூல் செய்கின்றபோது, 10 ரூபாய் கொடுக்காவிட்டால்கூட, வீட்டிலே இருக்கும் தண்ணீர்ப் பானையை வெளியே கொண்டுவந்து வைத்துவிடுகிறார்கள். 20 ரூபாய் கொடுக்க முடியாவிட்டால்கூட மாட்டினைப் பிடித்துக் கொண்டு சென்று வீதியிலே கட்டிவிடுகிறார்கள். ஆகவே கிஸ்தி வசூல் செய்யும்போது எப்படி நடவடிக்கை எடுக்கின்றோமோ, அதேபோன்று இந்த...(குறுக்கீடு)

*முற்பகல் 10-45*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அக்காள் பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது முஸ்லிம்களுக்கு எதற்கு ஒரு இட ஒதுக்கீடு என்று கேள்வியைக் கேட்டார்கள். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் வழக்கு உச்சநீதிமன்றத்திலே இருக்கிற காரணத்தால், அது முடிந்த பிறகு, அதைப் பரிசீலிக்கிறேன் என்ற ஓர் உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தநேரத்தில் இதை ஒரு பிரச்சினையாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியே இருந்தால்கூட அது அவர்களுடைய தனிக் கருத்து எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய கருத்து அல்ல என்பதை நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி வருவது நியாயமில்லை. என் மனதில்பட்டதைத்தான் நான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. யாருக்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் இடம் ஒதுக்கட்டும் என்பதற்காகத்தான் இதைச்



சொன்னேனே தவிர அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்ற அந்த அடிப்படையிலே பேசவில்லை என்பதை மதிப்பிற்குரிய எங்கள் தலைவர் தம்பி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு)

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் கூறிக்கொள்கின்றேன். அடுத்து சமத்துவபுரம். அதிலே..

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கோயில் நிலங்களைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாகவே விடை சொல்லியிருக்கிறார்கள். 'இது பற்றி அனைத்துத் தரப்பினரையும் கலந்து, இதனுடைய சாதக, பாதகங்களையெல்லாம் முற்றிலும உணர்ந்து, அதற்குப் பிறகுதான் முடிவெடுக்கப்படுமே தவிர, இப்போது இந்த அரசு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காது' என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் தெரிவிக்கிற கருத்துக்கள் மட்டுமல்ல, வெளியிலிருந்து தெரிவிக்கப்படுகிற ஆதரவுக் கருத்துக்கள், எதிர்ப்புக் கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அதற்குப் பிறகு அரசு மட்டத்தில், அமைச்சரவை மட்டத்தில் முடிவு செய்து. பிறகு உயர்மட்டக் குழுவிலும் முடிவு செய்த பிறகுதான் இதற்கு ஒரு முடிவு வருமே தவிர இப்போது எந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். அடுத்து சமத்துவபுரம். 10 ஏக்கர் நிலப் பரப்பில் எல்லா சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் 100 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, அதிலே எல்லாவிதமான வசதிகளையும் செய்யக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த அமைச்சரவையும் உருவாக்கியிருக்கின்றது. இதன் மூலமாக, இந்த சாதியொழிப்புத் திட்டத்தின் மூலமாக பக்கத்து பக்கத்து வீடுகளிலே குடியிருப்பார்களேயானால், நிச்சயமாக காலப்போக்கிலே சாதிகளை மறக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்க முடியும் என்ற காரணத்தினாலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதற்காக என்னுடைய

நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அளவிற்கு, அதிக அளவிற்கு இலக்கு நிர்ணயித்து, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக்கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாணவர்களுக்கு உண்மையிலேயே பலவிதமான சலுகைகளைச் செய்து வருகிறோம். அவர்களின் படிப்புக்கு உதவித் தொகை, Hostel வசதி என்று பலவிதமான சலுகைகளைச் செய்து வருகின்றோம். கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கென 30 மாணவ, மாணவியர் விடுதிகளை நடத்தி வருகின்றோம். அதற்காக 10.5.43 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது.

என்னுடைய நிலக்கோட்டை தொகுதியில் பெண்களுக்கு ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டும், அங்கு படிக்கின்ற மாணவிகள் தங்குவதற்கு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் நடப்பாண்டிலே 17 பெண்கள் தங்கும் விடுதிகள் கட்ட வேண்டுமென்கிற இலக்கினை நாம் நிர்ணயித்து இருக்கின்றோம். பெண்களுக்கு 17, ஆண்களுக்கு 9 விடுதிகள் கட்ட இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். அந்த விடுதிகள் கட்டுகிறபோது, நிலக்கோட்டை பெண்கள் கல்லூரிக்கும் ஒரு தங்கும் விடுதி வசதி செய்துகொடுக்க வேண்டும். அதற்கான கட்டடம் கட்டுவதற்குப் பணமும் ஒதுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உணவுக் கட்டணம் 300 ரூபாய் என்றிருந்ததை 400 ரூபாயாக உயர்த்திருக்கின்றோம். அது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்று. அந்தத் தொகை போதாது. இதை இன்னும் சிறிது அதிகமாக ஒதுக்குமாறு நான் அன்புடன் வேண்டுகின்றேன். Plus 2 படித்த மாணவிகள் நிறைய பேர் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு தொழிலும் செய்துகொடுக்க முடியவில்லை. அவர்களுக்குத் திருமணமும் செய்ய முடியவில்லை (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு வேலையும் கொடுக்க முடியவில்லை. வெளிநாடுகளிலெல்லாம் நிறைய ஆயத்த ஆடைகளுக்கு மிக்க கிராக்கி இருக்கின்றதாம். அப்படி கிராக்கி இருக்கின்ற காரணத்தினாலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மூலமாக 10 பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து, நல்ல துணிகளை வாங்கிக் கொடுத்து—அதாவது Bleeching Madras துணி என்று முன்னர்



இருந்தது — அதில் தைத்து மேலைநாடுகளுக்கு அனுப்புவோமேயானால் — அதற்கு மிக்க கிராக்கி இருப்பதாக வெங்கட்ராமனே இங்கே சொல்லி இருக்கிறார் — அந்த அடிப்படையிலே இந்த ஆயத்த ஆடைகளைத் தயார் செய்து, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கக்கூடிய அந்தத் தொழிலைச் செய்வோம் என்று சொன்னால், பெண்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சூழ்நிலை இருக்கும் என்பதை இந்தநேரத்திலே கூறிக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

பிறகு ஆசிரியர்களுக்குக் கேட்காமலேயே உத்தியோகம் வந்திருக்கிறது. அதையெல்லாம் ரொம்பப் பாராட்டினார்கள். இப்பொழுது என்னுடைய தொகுதியில் நிறைய பெண்கள் படித்துவிட்டும் ஆசிரியர் பயிற்சியில் சேரமுடியவில்லை. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் Plus 2 முடித்துவிட்டு எந்தவிதமான பயனும் இல்லாமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் நடப்பு ஆண்டில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றை வத்தலகுண்டுக்கு sanction செய்து கொடுத்தால் நான் இனாமாக இடம் கொடுக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள், கடந்த ஆண்டிலே அறிவிக்கப்பட்டு, செயல்படுகிற ஒரு காரியத்தை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்களிலும், தகுந்த பயிற்சி வழங்குவதற்கு, மத்திய அரசின் உதவியோடு நடத்துகிற அந்த அமைப்பு மூலமாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களில் Secondary Grade பயிற்சி பெற்றவர்கள் போதுமான எண்ணிக்கையில் வேலைக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, அந்த மையங்களில் எவ்வளவு மாணவர்கள் ஏற்கெனவே பயிற்சி பெறுகிறார்களோ அதற்கு ஈடான அளவுக்குத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஆண்டுக்கு 850 பேர் சிறப்புப் பயிற்சி பெற, ஆதிதிராவிடர் நலத் துறை செலவு பொறுப்பேற்றுக் கொண்டு, கல்வித் துறை மூலமாக இப்பொழுது நடைபெறுகிறது. ஒரு பள்ளிக்கூடம் அல்ல, 20 பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் என்ற அளவுக்கு இப்பொழுது பயிற்சி நடைபெறுகிறது. ஆகவே அதைப்

பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர, அதற்கு மேலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடம் வேண்டுமென்று கேட்டால், பயிற்சி பெற்றவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை வரவேற்கின்றோம் என்று அர்த்தம் ஆகிவிடும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உடனே கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஒரு advance booking. 17 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. படித்துவிட்டு வெளியே வந்தவுடனேயே வேலைவாய்ப்பு கிடைத்துவிடுகிறது. அதேமாதிரி என் தொகுதியில் நிறைய பேர் இருக்கிறார்கள். நான் நீண்டகாலம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். எனக்கு அதனால் கஷ்டம், இந்தக் கொடுமை

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Secondary Grade பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் வேலையில் சேர்ந்துவிடுவதில்லை. 35 ஆயிரம் பேர் காத்திருக்கின்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களில், ஆதிதிராவிடர் சமூகத்தில் குறை இருக்கிறது என்பதற்காக, நிறைவு செய்கிறோம். இந்தமுறையிலே நிறைவு செய்தாலே, ஏற்கெனவே உள்ள அந்த விகிதாச்சார அடிப்படையில் அதுவும் சேர்ந்து 2, 3 ஆண்டுகளில் அந்த இடங்கள் நிரப்பப்பட்டுவிடும். அப்புறம் எல்லோரையும் போல 18 விழுக்காடு இடம். அதற்கும் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** நான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கேட்கின்றேன். இன்றைக்கு இல்லாவிட்டாலும், நாளைக்குக் கொடுங்கள். அதுதான் என்னுடைய வேண்டுகோள். On behalf of the poor people. அதுதான் வேறு ஒன்றுமில்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை இந்த ஆண்டு இல்லாவிட்டாலும்கூட, அரிசன நலத் துறையின் மூலமாக வரக்கூடிய ஆண்டிலாவது, ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, உரையை முடித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கொ.வீ. நன்னன்.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு



உங்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*விண்ணுறங்கும் விண்ணிலூறும் மீனு றங்கும்*
*விடிந்தபின்னே விடிவெள்ளி விழியு றங்கும்*
*வெண்ணிலவும் தன்னொளியில் மிதந்து றங்கும்*
*வண்ணமுகிற் கூட்டங்கள் உறங்கும்; இந்த*
*மண்ணுறங்கும் மண்சார்ந்த மலையு றங்கும்*
*மலர்த் தேனை வண்டினங்கள் உண்டு றங்கும்*
*கண்ணுறங்கும் நேரமின்றி உழைக்கும் எங்கள்*
*கலைஞரே! தலைவரே! முதல்வரே! வாழ்க வாழ்க!!!*

என்று அவருக்கு வணக்கத்தைச் சொல்லி, இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கும் வணக்கம் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம் சொல்லி, நான் பேச ஆரம்பிக்கின்றேன்.

*சாதித் திமிருக்கு சாட்டை யடி கொடுத்து*
*சாத்திரப் பேய்களுக்கு சமாதியைக் கட்டி வைத்து*
*ஆதித் திமிரின் அடிச்சுவடே இல்லாமல்*
*அழித்து ஒழித்து அன்பின் வழி நடந்து*
*மீதித் திமிருக்கு முடியிட்டு அரக்கு வைத்து*
*மொத்தத் திமிருக்கும் முக்காடு போட்டுவிட்டு*
*நீதிப் பயிருக்கு நல்ல எண்ண நீர்ப் பாய்ச்சி*
*நம் முதல்வர் துணையோடு நித்தமும் நாமுழைப்போம்!*

என்று சொல்லி, தீண்டாமையைப் பற்றி பாடல் ஒன்றை எழுதியிருக்கின்றேன். அந்தப் பாடலை இசை வடிவில் பாடுகின்றேன். கொஞ்சம் கேளுங்கள் என்று உங்களுக்கு வணக்கம் சொல்லி கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-55

ஆமை இருக்கும் வீடு என்றும் நிலை பெறாது (ஆமை)
தீண்டாமை இருக்கும் நாடு உலகில் வளர்ச்சியுறாது...(ஆமை)
என்றும் வளர்ச்சியுறாது...(ஆமை)
ஆமையிலே பலவிதம்—நான்
சொல்லுறேன் கேளுங்கோ சிலவிதம்....(ஆமையிலே)
பொறுமை பொறுமையில்லாமை
கல்லாமை கனிவறியாமை
நம்பாமை நன்றியில்லாமை —
நீதிநெறியில் நில்லாமை - இன்னும் ...(நம்பாமை)
நல்லது கெட்டது புரிஞ்சுக்காமை —
நாட்டின் நடப்பை தெரிஞ்சுக்காமை...(ஆமை இருக்கும்)
கண்ணீரை பெருகவைக்கும் கல்லாமை
கடும்பசியால் உருகவைக்கும் இல்லாமை...(கண்ணீரை)
உண்மைதனை உணராது அறியாமை - தனி
உள்ளத்தையே கெடுத்துவிடும் பொறாமை,
பொறாமை (உண்மைதனை)
...(ஆமை இருக்கும்)
எய்ட்ஸ் நோய் இருப்பவரையும் தீண்டலாம் - தொழுநோய்
இருப்பவரை தீண்டி சேவை புரியலாம்
மாடு நாயைத் தீண்டித்தடவி மகிழலாம் - இன
மனிதரிலே தீண்டாமையை காரி உமிழலாம்
உண்மைதனை (ஆமை இருக்கும்)



இந்தச் சொன்னா கோபம்வரும் அண்ணாச்சி-உண்மையைச்
சொன்னவங்க கதியெல்லாம் என்னாச்சி
முகமது நபிக்கு கல்வீச்சு - ஏசு
மகானை சிலுவையில் அறைஞ்சாச்சு...(இதைச் சொன்னா)
பெரியார் அண்ணா கலைஞர் சொன்ன
புரட்சிக் கருத்துக்கள் பொன்னாச்சி...(பெரியார்)
உரிமையை இழந்து தவிப்போர்க்கு எல்லாம்
உறுதுணை கலைஞரின் நல்லாட்சி-இதைச் சொன்னா...(உரிமையை)
ஆமை இருக்கும் வீடு என்றும் நிலை பெறாது
தீண்டாமை இருக்கும் நாடு உலகில் வளர்ச்சியுறாது
என்றும் வளர்ச்சியுறாது.

என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா ஆமைகளையும் பற்றிச் சொன்னீர்கள். நேரம் இல்லாமை என்று ஒன்று இருக்கிறது, அதையும் பார்த்துக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கொ.வீ. நன்னன்:** அடுத்து, ஆட்சியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கையை மக்களுக்கு அளிப்பதும், அதில் கிளைகள் பலவானாலும் வேர் ஒன்றான ஆதி திராவிடர் சமுதாயத்திற்குச் சிலபல திட்டங்களை அறிவிப்பதும், சில அரசுகள் செயல்படுத்துவதாக பாவனை செய்து பயனாளிகள் பயன் பெறாததைப் பார்த்தும் பார்க்காதது போல் இருப்பதும், ஆண்டுதோறும் நடக்கும் அரசியல் சடங்காகும். ஆனால் இப்போதைய அரசு சொல்வதைக் குறைத்தும் செயல்படுத்துவதை அதிகமாக்குவதை விரும்புகிற அரசாகும்.

முற்பகல் 11-00

எல்லா ஆண்டுகளையும்விட இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆதி திராவிடர் இனத்தவருக்கு அதிக இனிப்பானது என்பதில் ஐயமே

இல்லை. காரணம் இந்த ஆண்டில் நிதி அதிகம் வழங்குவதோடு, தன்மானத்தையும், தலைநிமிர்த்தும் மரியாதையையும் தருகின்ற தீண்டாமை ஒழிப்பு ஆண்டாக அறிவித்திருப்பது கூடுதல் மானியமாகவும், அரவணைப்போடு கூடிய அன்பை வெளிப்படுத்தும் ஆண்டாகவும் அமைந்துள்ளது. ஆகவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குத் தாயாக, ஆதரவற்ற சமுதாயத்திற்கு அன்னையாக, துன்பத்தையே துணையாகக் கொண்ட எனது சமுதாயத்திற்குத் தோழனாக, மனதால், வாழ்க்கை முறையால், ஊனமுற்ற எனது சமுதாயத்திற்கு ஊன்றுகோலாக என்றும் எப்பொழுதும் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள எங்களின் அன்புத் தலைவர், அரசின் முதல்வர் அவர்களின் பாதங்களுக்கு நான் சார்ந்த சமுதாயத்தின் சார்பில் நன்றி கலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்கி என் பேச்சைத் தொடங்குகிறேன்.

ஆதிதிராவிடர் நலனில் மற்றவர்களைவிட அதிக அக்கறையும் உளப் பூர்வமான நாட்டமும் உடையவர் நமது முதல்வர் என்பது நாடறிந்த உண்மை. திறமையுள்ள ஆதிதிராவிட இனம், தரணி முழுதும் போற்றிப் புகழ் பாடத் தகுதி படைத்த தமிழினம், முன்னேற முடியாமல் முட்டுக்கட்டையாக இருப்பது வர்ணாசிரமப் பிரிவுதான் என்பதைப் பகுத்தறிவாளர்கள் அனைவரும் அறிவார்கள். ஆகவே ஆதிக்க இனத்தையும், ஆதிதிராவிடர் இனத்தையும் சமாதானப்படுத்தி சமப்படுத்தினால் தமிழ்ச் சமுதாயம் உலக இனங்களிலே உத்தம இனமாக நிச்சயமாக மாறும். அந்த மாற்றத்தை நமது இயக்கத்தின் மூலமாக தன் காலத்திலேயே சாதித்துவிட வேண்டும் என்ற தணியாத தாகமுள்ளவர் நம் முதல்வர். அதனால்தான் எத்தனையோ பொருளாதார நெருக்கடி இருந்தபோதும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனுக்காக வரும் நிதியாண்டில் 509 கோடி ரூபாயாக உயர்த்தி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி உள்ளது இந்த அரசு.

சென்ற ஆட்சியில் இந்த நிதி ஒதுக்கீட்டின் அளவு என்ன என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஆதிதிராவிடர் நலனில் அக்கறையில்லாத, தற்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்ற அம்மையார் ஆட்சி செய்த 1991-92-ல் ஆதிதிராவிடர்களுக்கு மானியமாக ஒதுக்கிய தொகை 97 கோடியே 85 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய்தான். அது 1992-93 ஆம் ஆண்டு 114 கோடியாகி, 1993-94-ல் 135 கோடியாகி, 1994-95-ல் 150 கோடியாகவும், 1995-96-ல் 193 கோடியாகவும் ஒதுக்கிய நிதி, ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சென்றடையாமல் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கிய நிதியானது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்



பொறுப்பேற்றதும், 1996-97 நிதிநிலை அறிக்கையில் 245 கோடியே 57 இலட்சத்து 33 ஆயிரமாக உயர்ந்து, 1999-2000 ஆண்டில் ஏறத்தாழ 335 கோடியாக வளர்ந்துள்ளது. பின்னாளில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாராளமாக நிதி வழங்கும் தயாள சிந்தனையுள்ளவராகப் பொறுப்பேற்றுக்கொள்ளுவார் என்று தெரிந்துதானோ என்னவோ, தலைவரின் தந்தை முத்து வேலர் அவர்கள் தலைவரின் பெயரிலேயே அன்றே நிதியைச் சேர்த்து வைத்துள்ளார்.

ஔவை மூதாட்டி, 'வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயரும்' எனக் கூறியதைப்போல, ஆதிதிராவிட மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதி உயர உயர, அவர்களின் நிலை உயரும்; அவர்களின் நிலை உயர்ந்தால்தான் மற்றவர்களிடமிருந்து அவர்களைப் பிரிக்கும் நிலை மறையும் என்ற நோக்கத்தோடு சனாதன சாதிப்பூசல் ஒழிந்து சமத்துவம் சமுதாயத்தில் பரவலாக்கப்பட்டுவிடும் என்பதுதான், நமது முதல்வர் அவர்களின் எண்ணம், செயல், எல்லாமுமாகும். அதை இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. தொகுப்பு வீடுகள் கட்டும் வேகத்தில்கூட சென்ற ஆட்சியாளரை நாம் புறம் தள்ளியிருக்கின்றோம். அவர்களின் ஆட்சிக் காலமான 5 ஆண்டுக்காலங்களில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து நான்காயிரத்து நூற்றியெண்பத்தியேழு ஆகும். ஆனால் நமது ஆட்சியில் ஐந்தாண்டுகளின் சாதனையை மூன்றே ஆண்டுகளில் எட்டிப் பிடித்திருக்கின்றோம். மாவட்ட அளவில் ஆதிதிராவிடர் நல அலுவலகத்தில் உள்ள மாறுதல் குழுவை நீக்க வேண்டும் என்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரி, வட்ட நல அதிகாரி இவர்களையெல்லாம் வருவாய்த் துறை மூலமாகப் போடாமல், தேர்வாணைக் குழு மூலமாகப் போடும்படி கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியைப் பற்றி ஒன்றிரண்டைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பணிபுரியும் அளவிற்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையையும், பரமனந்தல், சவ்வாது மலை, மேல்பட்டு வரைக்கும் தார்ச்சாலையையும், எனது ஊராகிய கொட்டகுளம், செய்யாற்றில் ஒரு மேம்பாலமும், அரியாக்குஞ்சூர் செல்லும் காட்டுப்பாதையில் ஒரு தார்ச்சாலையையும், மேல்செங்கத்தில் இருக்கும் மத்திய மாநில விதைப் பண்ணை செழிக்க பெண்ணை ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி தண்ணீரைத் திருப்பிவிட்டு, அந்தப்

பண்ணையை மூடாமலிருக்க வழி பிறக்கவும் ஏற்பாடு செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நீப்பத்துரை—அம்மாபேட்டை சாலையில் பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டியும் சவ்வாது மலைவாழ் மக்களின் உயர்வுக்காக பல நலத்திட்டங்களை அறிவித்தும், செங்கம் ஆதிதிராவிடர் மாணவர் தங்கும் விடுதியைப் புதுப்பித்துத் தரும்படிக் கேட்டுக்கொண்டும், பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், தங்கத் தலைவர் முதல்வர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

*முற்பகல் 11-05*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆதிதிராவிடருடைய சமுதாய மேம்பாட்டிற்காக சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுக்காலமாக பல்வேறு நலத் திட்டங்களை, முன்னேற்றத்திற்கான சிந்தனையை நாம் உருவாக்கி இருந்தபோதிலும்கூட ஆதிதிராவிட மக்களுக்கு வாழ்க்கையே ஒரு சவாலாக அமைந்திருக்கிற நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக சமீபகாலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த சிந்தனையால் சமன்செய்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் வாழ்ந்த தமிழ்நாட்டில் சாதிய மோதல்களற்ற சமத்துவத்தை உருவாக்க வேண்டும் என்கின்ற அவர்களின் நல்ல இலட்சியங்களையும், நோக்கங்களையும் கொண்டு இப்போது தந்தை பெரியார் பெயராலே சமத்துவபுரத்தை உருவாக்கி, அனைத்து இன மக்களையும் ஒரே இடத்தில் குடியிருக்கச் செய்து, அவர்கள் பேசிப் பழகி, பேதமில்லாமல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று இப்போது சமுதாயத்திலே பல்வேறு பொருளாதார தளங்களிலே இருப்போரிடையே நிலவுகின்ற அரசியல் பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கிற முயற்சிகளை அந்த மக்களுக்காக மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதிதிராவிட மக்களுடைய

31/1/99 N99.80:2



வரவு-செலவுத் திட்டம் என்பது அந்த மக்களுக்குப் புரியாத ஒரு புதிராக, சமயத்திலே அது மாறிவிடுகிறது. சமீபகாலங்களில் உருவாக்கப்படுகிற திட்டங்கள் அனைத்துப் பகுதி மக்களிடத்திலும் சென்றடைகிறதா என்று ஆய்வு நடத்திப் பார்த்தால் அது முழுமை பெறவில்லை; தெரிவிக்கப்படவில்லை. தெரிந்தவர்களுக்கு மட்டுமே அது முற்றிலும் பயன்படக்கூடிய விதத்தில் அமைந்துவிடுகிறது. இல்லையென்று சொன்னால் இந்தத் திட்டத்தை மனமில்லாமல் நிறைவேற்றாவிட்டால் நிதி திரும்பி வந்துவிடுகிறது. இந்த நிலைதான் மத்திய, மாநில அரசுகள் உருவாக்குகிற திட்டங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால் இந்த நாட்டிலே அந்த மக்கள் தங்கள் வாழ்க்கையிலே ஒரு தகுதியை, அந்தஸ்தைப் பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தை நாம் உருவாக்க வேண்டும். தமிழகத்திலே இருக்கிற வணிக வளர்ச்சியிலே, வியாபாரத் துறையிலே — அவர்களுடைய வாழ்க்கையிலே மாற்றங்களைக் காண வேண்டும் என்பதற்கு அவர்களுடைய விகிதாச்சாரத்தையும் நாம் சரி பார்த்தோம் என்று சொன்னால் — எங்கேயாவது ஒரு சிற்றூரிலே, கிராமத்திலே, ஒரு சிறிய இடத்தில் தான் சார்ந்திருக்கின்ற சமுதாய மக்களோடு சேர்ந்து வாழ்கிற இடங்களில் மட்டும் சில பெட்டிக் கடைகள் வைத்திருப்பதை நாம் காண முடிகிறது. இவ்வளவு பெரிய பரந்த பிரதேசத்தில், நம்முடைய இந்திய நாட்டில் வணிக வளாகங்கள் பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு வளர்ந்திருக்கிற இந்தச் சமூக அமைப்பிலே தமிழகத்தில் அவர்களுடைய வாழ்க்கை நிலைமை, அந்தஸ்து எப்படி இருக்கிறது என்பதைக் குறித்து நம்முடைய அரசு ஒரு கொள்கை நிலை எடுத்து சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மத்திய அரசு, மாநில அரசு திட்டங்கள் எப்படி இருக்கின்றன என்று சொன்னால், அது ஏட்டளவிலே முடிந்துவிடுகிறது. நடைமுறையில் இருக்கின்ற சிறிய சிக்கல்களை மட்டும் போக்குகின்ற அளவுக்குத்தான் நம்முடைய நடவடிக்கை அமைந்திருக்கிறது. எனவே அடிப்படையில் தீர்வு காணுகின்ற முயற்சியில் மாநில அரசு பங்கு பெற வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கிராமப்புறங்களிலே ஆதிதிராவிட மக்கள் 70, 80 சதவிகிதம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், குடிதண்ணீர், சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளைக்கூட அவர்களுக்கு நிறைவு செய்யமுடியாத நிலையிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை நம்மால் காண முடிகிறது. ஆகையினால் இந்தத்

221198

துறைக்கு நிதியை அதிகமாக ஒதுக்கக்கூடிய விதத்தில் நம்முடைய மாநில அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-10*

தமிழ்நாட்டிலே ஆதிதிராவிட மக்கள் நிறைந்த, சுமார் 27 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம் வரையிலே வாழக்கூடிய மாவட்டங்கள் என சில மாவட்டங்கள் இருக்கின்றன. நீலகிரி, தென்னாற்காடு, விழுப்புரம், கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை ஆகிய இந்த மாவட்டங்களிலே இருக்கக்கூடிய ஆதிதிராவிட மக்களுடைய வாழ்க்கை நலனிலே, பிரதானமான, ஒட்டுமொத்தமான நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று சொல்வதற்கு மாறாக, இதுபோன்ற மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு வருவோம் என்று சொல்வது மிக அவசியமாக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது புதிய பொருளாதார நிலைமையெல்லாம் வந்திருக்கிறது. புதிய பொருளாதாரம், தாராளமயமாக்குதல், தனியார் மயமாக்குதல் ஆகிய திட்டங்கள் எல்லாம் இப்போது வந்திருக்கின்றன. இப்படி வந்திருக்கிறபோது, ஆதிதிராவிட மக்களுக்கு வரக்கூடிய வேலைவாய்ப்பை வெட்டுகிற திட்டங்கள் இன்றையதினத்திலே வந்திருக்கின்றன. ஒருபுறத்திலே இட ஒதுக்கீடு என்ற கொள்கை இருந்தாலும், இன்னொரு புறத்திலே அவர்கள் பாதிக்கக்கூடிய அளவிற்கு மத்திய மாநில அரசுகள் உருவாக்கக்கூடிய திட்டங்கள் இப்போது வந்திருப்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து இருக்கக்கூடியவர்கள். அதற்கு ஒரு மாற்றான திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், தனியார் துறையிலேயும் இவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீட்டை அளித்தால்தான் இவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு முன்னேற்றத்தைக் காணமுடியும். அதற்கான திட்டத்தை, சட்டமுன்வடிவின் மூலமாக நம் மாநிலத்தில் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பொது ஏலங்கள். பொது tender என்று அரசாங்கத்தால் கொண்டு வரக்கூடிய திட்டங்களில் எல்லாம், ஆதிதிராவிட மக்களுக்கு,



அவர்களில் படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, சமுதாயத்திலே அவர்களைத் தூக்கிவிடுகிற விதத்தில் அந்த tender-லும் இட ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு கொடுமையான நிகழ்ச்சி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு 30 ஆண்டுகாலம் தமிழ்நாட்டில், திராவிட இயக்கம் மட்டுமே ஆட்சி நடத்தி வந்திருக்கிறது. அதை இல்லையென்று மறுக்க முடியாது; யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. 30 ஆண்டுகாலம் திராவிடக் கட்சிகள் ஆட்சி நடத்தி வந்திருக்கின்ற இந்தப் புனிதமான பூமியில் இன்னும் தனி வகுப்பு இருக்கிறது என்பதை நாம் சொல்கிறபோது, வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமை இப்போது இருக்கிறது. தீண்டாமை இன்னும் இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அது மிகவும் வெட்கி வேதனைப்படக்கூடிய விஷயமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், சாதிய மோதல்கள் எல்லாம் சில சமூகவிரோத சக்திகளால் வருகிறது என்று சொன்னாலும் அது எவ்வளவு வேதனைப்படக் கூடிய விஷயமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமீபத்திலேகூட, சாதிய மோதல்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக பல்வேறு தொழில்களைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அளவுக்கு முயற்சி எடுத்தாலும்கூட, அதை எந்த அளவுக்கு சீரமைக்க முடியும் என்பதை அவர்கள் காலப்போக்கிலே சிந்திக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் 13 இலட்சம் பேர்கள் தமிழ்நாட்டில் அரசுப் பணிகளிலே, அரசுத் துறைகளிலே பணியாற்றக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களைப் பார்த்தோம் என்று சொன்னால், சுமார் 2.5 இலட்சம் பேர்களாவது ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அரசுத் துறைகளிலே பணியாற்ற வேண்டும். அந்த அளவுக்கு இப்போது பணியாற்றுகிறார்களா? பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறதா? வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், முற்றிலும் கொடுக்கப்படாத நிலையைத்தான் என்னால் காண முடிகிறது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நல்ல

சிந்தனையோடு இருந்த காரணத்தினால், ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தார்கள். பல்வேறு தரப்பட்ட நபர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட அந்த உயர்மட்டக் குழு ஒவ்வொரு துறையாக அழைத்து, ஒவ்வொரு செயலாளரையும் அழைத்து, பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளை அழைத்து, அந்தந்தத் துறைகளில் யார் யாரெல்லாம் பணி புரிந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் எந்தெந்த விகிதாச்சாரத்திலே பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கான காலியிடங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறார்களா, பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று ஆய்வு செய்தபோது, முழுமையான அளவுக்கு அது நடைமுறையில் இல்லாத அளவை என்னால் காண முடிகிறது. அந்தக் குழுவினுடைய வெள்ளை அறிக்கையைப் பற்றியும் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அது அமைச்சருடைய பரிசீலனையில் இருக்கிறது; அதிகாரிகளினுடைய பரிசீலனையில் இருக்கிறது; விரைவாக அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அது தெரிகிறது. இந்து சமய அறநிலையத் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற பல்வேறு துறைகளில் பெருமளவுக்கு வேலைவாய்ப்பும் பதவி உயர்வும் கிடைக்காமல் மறுக்கப்படுவதற்கு என்ன காரணம் என்பதை அறிந்து அந்த அறிக்கை மூலமாக நடவடிக்கை எடுப்பதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-15*

அதேபோன்று TAHDCO. படித்த ஆதிதிராவிட மாணவர்களுக்கு TAHDCO கடன் உதவி செய்கிறது. ஆனால் அந்த அலுவலகம் எப்படி இருக்கிறது? படித்த இளைஞர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வரை கடன் கொடுக்கலாம் என்று இருந்தாலும், அந்தக் கடனே அவர்களுக்குக் கிடைக்காத அளவிற்கும், அவர்கள் வாழ்க்கையில் வெறுத்துப் போகக்கூடிய அளவிற்கும் அதனுடைய செயல்பாடுகள் இன்று உருவாகியிருக்கின்றன. அதே நேரத்தில் பல்வேறு வகையில் செல்வாக்கு படைத்த மாணவர்கள், ஆதிதிராவிட வகுப்பிலே உயர்ந்த பதவியிலே இருக்கக்கூடியவர்கள் மட்டுமே அதனைப் பயனபடுத்தக்கூடிய விதத்தில் அது அமைந்துவிடுகிறது. ஆக தாழ்ந்த நிலையிலே இருக்கக்கூடிய, சமுதாயத்தின் கடைக்கோடியிலே இருக்கக்கூடிய, படித்த இளைஞர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றம் அடையச் செய்யும் விதத்தில் அரசாங்கமே இந்தக் கடன்களைக் கொடுக்க வேண்டும்; அல்லது கூட்டுறவு முறையிலாவது அந்தக் கடன்களைக் கொடுத்து



அவர்களை வாழ்க்கையிலே முன்னேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல பல்வேறு இனங்களைச். சார்ந்த, குறிப்பாக குறவர் இனத்தைச் சார்ந்த பலபேர்களுக்குச் சான்றிதழ்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் மலையிலே வாழ்கிறார்களா, தரையிலே வாழ்கிறார்களா, என்ன தொழில் செய்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து கொடுக்கக்கூடிய சான்றிதழ்களைப் பொறுத்தவரையில், பலர் போலித்தனமாக அந்தச் சான்றிதழ்களைப் பெற்று வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை பெற்று வந்துவிடுகிறார்கள். ஆனால் உண்மையானவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவது மறுக்கப்படுகிறது. இதையெல்லாம் பரிசீலித்து அதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல ஆதிதிராவிடர் நலத் துறைக்கான தாசில்தார்களை எடுத்துக்கொண்டால், என்னுடைய திருத்துறைப்பூண்டியிலே பணிபுரியக்கூடிய தாசில்தார்கள் ஆறு மாதத்திற்கு மேல் இருப்பதே கிடையாது. அந்த தாசில்தாருடைய அலுவலகம் எங்கே இருக்கிறது என்று சொன்னால், ஊருக்கு அப்பாற்பட்ட இடத்தில் யாருக்கும் தெரியாமல் இருக்கிறது. அந்தத் துறை தண்டனை அளிக்கும் துறை மாதிரி இயங்கிக் கொண்டு இருக்கிறது. தொலைபேசி வசதி கிடையாது; அலுவலர்கள் வாகனம் கிடையாது; தட்டச்சு இயந்திரம் கிடையாது; இப்படிப்பட்ட கிடையாது. இது என்ன கொடுமையாக இருக்கிறது? இப்படிப்பட்ட நிலையில் அந்தத் துறையிருந்தால், அந்த மக்களை எப்படி மேம்பாட்டிற்குக் கொண்டு வரப்போகிறோம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதிதிராவிடர் நலத் துறையில் இன்று நாம் சமத்துவபுரத்தை உருவாக்கி இருக்கிறோம். சமத்துவபுரத்தை உருவாக்கியிருக்கிற அதேநேரத்தில், பிற்படுத்தப்பட்ட மாணவர்களையும். ஆதிதிராவிட மாணவர்களையும் விடுதிகளில் நாம் தனித்தனியாகப் பிரித்து வைத்திருக்கிறோம். அப்படிப பிரிக்கவே கூடாது. ஆதிதிராவிட மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் ஒரே கலாச்சாரத்தில் வளரக்கூடிய அளவிற்கு நாம் ஒரே இடத்தில் அவர்களை விடுதிகளில் படிக்க வைக்கின்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இல்லையென்று சொன்னால் நாமே இரண்டு பேரையும் பிரிக்கின்ற நிலை உருவாகிவிடும். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று ஆதிதிராவிட மாணவர்களுக்கு உணவு அளிப்பதைப் பொறுத்தவரையில் அது இன்றைக்குத் தனியாரிடத்தில் விடப்பட்டிருக்கிறது. இதனை தனியாரிடத்திலே கண்டிப்பாக விடக்கூடாது. இலாப நோக்கத்தைப் பார்க்கக்கூடிய அந்த ஒப்பந்தக்காரர்கள் சரியாக உணவு அளிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அதனை மீண்டும் பரிசீலனை செய்து அரசாங்கமே அதனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. உ. திசைவீரன்.

***திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒரே தலைவர், சமத்துவபுரம் கண்டு சாதனை படைத்திட்ட சரித்திர நாயகர், தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு, என் கருத்துக்களைக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய சிற்றுரையைத் தொடங்குகின்றேன்.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதும், தொகுப்பு வீடுகள் கட்டித் தருவதும்தான் ஆதிதிராவிடர் நலத் துறையின் வேலை என்ற நிலையைப் போக்கி, மக்களின் கல்வி, பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற துறையாக மாற்றி, கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக 60 கோடி ரூபாயில் இயங்கிவந்த துறைக்கு 509 கோடி ரூபாயாக உயர்த்தி இத்துறைக்கு உயிரோட்டம் அளித்து வெற்றி நடை பயில வைத்த, என்றைக்கும் ஆதிதிராவிட மக்களின் அரணாக விளங்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்திட்ட சிறந்ததொரு திட்டமாகிய மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இழிநிலையை, அவலநிலையைப் போக்கிட புதிய திட்டம் அறிவித்து, சட்டமாக்கிய நமது முதல்வர் அவர்களை மனித நேயமிக்க மகான் கலைஞர் என பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்நிதியாண்டில் 50 புதிய சமத்துவபுரங்களை அமைக்க ரூ. 18.81 கோடி அனுமதி வழங்கியதை வரவேற்கிறேன்.

ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது தானாக இருப்பினும், சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க, தன்னை பகுத்தறிவுப் பாதையில்



வளர்த்து ஆளாக்கிய பகுத்தறிவு ஆசான் தந்தை பெரியார் பெயரில் சமத்துவபுரம் அமைத்த தங்களின் நன்றி மறவாத தன்மையை மக்கள் பெரிதும் புகழ்கின்றனர்.

மேலும் சமத்துவபுரம் அமையும் இடங்களில் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு புதிய தொழிற்சாலைகள் அமைக்கவும், கட்டப்படும் வீடுகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆதிதிராவிட மக்களின் கல்வியில் இன்று சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. அதேபோல பொருளாதாரத்திலும் அவர்களை முன்னேற்ற, அரசின் ஒப்பந்தங்களை வழங்குதல், (Contracts) தனியார் பேருந்து உரிமம், மதுபானக் கடைகள் ஏலம் போன்ற இனங்களில் இட ஒதுக்கீடு முறையில் உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு 12 கோடியே 40 இலட்ச ரூபாய்க்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதைப் பொறுத்தவரையில், பள்ளி திறந்தவுடனேயே இந்தப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். இந்நிதியாண்டிலிருந்து தொழிற்கல்வி மற்றும் அனைத்துப் படிப்புகளிலும் பதிவுக் கட்டணம் மற்றும் சேர்க்கைக் கட்டணம் ஆகியவற்றில் முழு விலக்கு அளித்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல அனைத்து கல்லூரிகளிலும் புத்தக வங்கி அமைத்து, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதையும் வரவேற்கின்றேன்.

*முற்பகல் 11-20*

உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பாடம் நடத்த வழிவகை, பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல், தொழில் கல்வி படிக்கும் மாணவர்களின் கடன் தொகை ரூ. 7,000 ஆக உயர்வு, மாணவர்கள் வெளிநாடுகள் சென்று படிக்க உதவி போன்ற சிறப்பான அம்சங்கள் இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவப் பட்ட மேற்படிப்புகளில் பல்வேறு இனங்களில் இட ஒதுக்கீடு இல்லை. பாண்டிச்சேரியில் மிகக் குறைந்த அளவு இடங்கள் இருப்பினும் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதேபோல மருந்தாளுநர் பட்ட மேற்படிப்பிலும் 25 இடங்கள் இருந்தும்கூட இட ஒதுக்கீடுமுறை இன்றி மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. எனவே அரசு கவனத்தோடு பரிசீலனை செய்து தேவையான ஆணைகள் வெளியிட அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுக்கு சுமார் 7½ கோடி ரூபாய்ச் செலவிலே இலவச சீருடை வழங்குவதை வரவேற்கிறேன். இதில் 6 வகை சீருடையை 9 வகை சீருடையாக மாற்றியிருக்கின்றீர்கள். அதற்கும் நன்றி. அந்த விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியருக்கு பள்ளியினால் அனுமதிக்கப்பட்ட வண்ணத்திலே டெரிகாட்டன் சீருடைகள் வழங்க வேண்டும். தற்பொழுது வழங்கப்படும் சீருடைகள் விடுதியில் படிக்கின்றோர் என்று அடையாளம் காட்டுமேயொழிய, பள்ளிகளில் பயன்படுத்த இயலாது. எனவே அரசு சிறப்புக் கவனத்தில் எடுத்துச் செய்ய வேண்டும். அதேபோல விடுதிகளில் பணிபுரியும் முடிதிருத்துவோர், சலவை செய்வோரின் ஊதியத்தையும் உயர்த்தித்தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தற்பொழுது வாகனங்கள் மட்டும்தான் வழங்கப்படுகின்றன. எனவே மற்ற இனங்களிலும் கடன் வழங்க மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளவேண்டும். அதேபோல ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாநில அளவில் வங்கி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதை TAHDCO மூலம் செயற்படுத்த வேண்டும் என்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1996-க்குப்பின் மிகவும் திறமையாகவும், சிறப்பாகவும் புதிய தொழில்நுட்பத்துடன் செயல்படும் தாட்கோ மூலம் தனது பெயருக்கு ஏற்றவாறு வீடுகள் கட்டும் பணியை அவர்கள் தொடர வேண்டும் என்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களை வேலையில் பணியமர்த்திக்கொள்ளும் தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றன. அதேநேரத்தில் உள்ளத்திலே ஊனமுற்று சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்குத் தனியார் நிறுவனங்களும், தனியார் கல்வி நிறுவனங்களும் இட ஒதுக்கீடு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஆண்டறிக்கையைப் படிக்கின்றபோது ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களில் தகுதியான நபர்கள் இல்லை என்று காரணம் காட்டி சுமார் 207 பணியிடங்கள் காலியாக இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி இப்பணியிடங்களை நிரப்ப வேண்டும். நானும் வால்பாறை



சட்டமன்ற உறுப்பினரும்கூட இதுகுறித்து சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கின்றோம் என்பதை இந்தநேரத்தில் கூறிக்கொள்வது எனது கடமை என்று நினைக்கின்றேன்.

முகவை மாவட்டத்தில் கலவர நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி கூறி, அதிகமான நிதியை வழங்கிய நம் அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில் தீப்பிடித்த வீடுகளை சிறப்பு இனமாகக் கருதி புதிய வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

தென் மாவட்டங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்ததற்கு எனது மாவட்ட மக்களின் சார்பாக நன்றி. இக்குழுவில் தென்பகுதி பற்றி அதிகம் தெரிந்தவரும், மூத்த I.A.S. அதிகாரியுமான மரியாதைக்குரிய சீதாராம்தாஸ் அவர்களைக் குழுவில் இடம் பெறச் செய்த தங்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறவும், மதுரை-இராமேஸ்வரம் அகல இரயில்பாதை அமைக்கவும் மத்திய அரசை துரிதப்படுத்த வேண்டும்.

அதேபோல பரமக்குடியில் ஒரு சிறு இனப் பிரச்சினை ஏற்பட்டாலும்கூட, உடனே போக்குவரத்து தடைபடுகிறது. எனவே இதை கவனத்தில் கொண்டு பரமக்குடியிலே, கமுதக்குடி, மேலாயார்குடி, மஞ்சூர் வழியாக தேசிய நெடுஞ்சாலையில் ஒரு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய கூட்டுறவு வங்கிப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஆதிதிராவிடர்களுக்கு Co-option முறையில் இயக்குநர் நியமிப்பதைப் போல மத்திய கூட்டுறவு வங்கியிலும் Co-option முறையிலே இயக்குநர்களை நீங்கள் பணியமர்த்தவேண்டும். 1999 ஆம் ஆண்டை தீண்டாமை ஒழிப்பு மற்றும் மத நல்லிணக்க ஆண்டாகக் கடைப்பிடிக்கின்றோம். இவ்வேளையில் ஒவ்வொரு கிராமத்திலும் துறையின் சார்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமபந்தி விருந்து போன்ற நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். கோயில்களில் உயர் வகுப்பினர் சமைத்த உணவை அனைவரும் சமமாக உட்கார்ந்து

சாப்பிடுவது உண்மையான சமபந்தி அல்ல. கிராமங்களில் உள்ள பொது மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சமைக்கின்ற உணவை அரசியல்வாதிகள், அதிகாரிகள், அந்த கிராமத்திற்கே சென்று உணவு அருந்த வேண்டும். அதுதான் உண்மையான சமபந்தி. இதைச் செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே தீண்டாமை ஒழிப்புப் பிரிவிலே பணியாற்றுகின்ற காவல் துறையினருக்கு சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்தநேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆதிதிராவிட குடியிருப்புக்கும் மயான அறை, மயான சாலை, மயானக் கொட்டகை, தண்ணீர் வசதி, மின் விளக்கு போன்ற வசதிகள் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆதிதிராவிட அலுவலர்கள் மூலம் செயல்படுத்தும் திட்டங்களுக்குக் குறைந்தது ஆண்டிற்கு ரூ. 10 இலட்சமாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நீங்கள் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் சில அடிப்படை வசதிகளை நாம் செய்து கொடுக்க முடியும்.

50 ஆண்டுகளாக வீட்டுமனைப் பட்டா வழங்கி வருகின்றோம். எனவே வீட்டுமனைப் பட்டா வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட்டு, ஏற்கென்வே பட்டா கொடுத்த அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கக் கூடிய ஒரு சிறப்புத் திட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும்.

மாவட்ட ஆதிதிராவிட அலுவலர், TAHDCO மேலாளர் போன்ற பதவிகளில் யாரும் நீண்டநாள் பணிபுரிய விரும்புவது இல்லை. எனவே துறையில் பணிபுரியும் அலுவலர்களை பதவி மூப்பின் அடிப்படையிலே அவர்களுக்கு ஒரு வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துறையின் சார்பில் ஏற்கெனவே இலவசமாக வழங்கிய தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டி போன்ற கருவிகளை மீண்டும் வழங்க வேண்டும். தற்பொழுது அது நிறுத்தப்பட்டுள்ளதாக நான் அறிகின்றேன். மாணவிகள் விடுதிக்குக் கட்டடங்களைக் கட்ட ஒவ்வொரு ஆண்டுக்கும் நீங்கள் நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். மாணவர் விடுதிக்கு யாருமே வாடகைக்குக் கட்டடம் தர முன்வருவதில்லை. எனவே அதை கவனத்தில் கொண்டு மாணவர்களுக்கும் நீங்கள் விடுதிக் கட்டடம் கட்டித்தர வேண்டும். அதேபோல தூத்துக்குடி மாவட்டம், சில்லாங்குளம் கிராமத்தில் இயங்கும் முத்துகருப்பன் நினைவு அறக்கட்டளை மேல்நிலைப்பள்ளி ஓர் ஆதிதிராவிடரால் நடத்தப்படும் பள்ளி. இதில் சுமார் 4000 மாணவர்கள் இலவசக் கல்வி, இலவச உணவு பெறுகின்றனர். இதில் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1500 மாணவர்கள் படிக்கின்றனர். சிறப்பாகச் செயல்படும் இப்பள்ளியில் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது I.T.I. ஒன்றை துறையின் சார்பாகவே நீங்கள் ஆரம்பிக்க வேண்டும்.



முற்பகல் 11-25

அரசு விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாத உணவுக் கட்டணமாக ரூ. 225 நீங்கள் வழங்குகின்றீர்கள். அதேபோல தொண்டு நிறுவனங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு ரூ. 150 மட்டும்தான் வழங்குவதாக அறிகின்றேன். அனைத்திலும் சமத்துவம் காணும் நாம் இம்மாணவர்களின் பிரச்சினையிலும் பாரபட்சமின்றி உணவுக் கட்டணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

துறையின் மொத்த ஒதுக்கீட்டில் சுமார் 61 சதவீதம் துறையின்கீழ் இயங்கும் 1258 பள்ளிகளுக்காகச் செலவிடப்படுகின்றன. வரவேற்கிறேன். ஆனால் மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 இலட்சம் ஆதிதிராவிட மக்கள் வாழ்ந்தாலும் துறையின் சார்பாக 7 தொடக்கப் பள்ளிகள்தான் இயக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு காட்டுப் பரமக்குடி பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்திய நம் அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. வகுப்பறைகள் கட்ட 3.10 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளீர்கள். காட்டுப் பரமக்குடி பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பாம்பு விழுந்தான், செங்கற்படை போன்ற இடங்களில் உள்ள பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த வேண்டும்.

50 ஆண்டுகளாக இருந்துவந்த, புதிய விடுதிகள் திறக்கப்படுகின்ற திட்டத்தை இந்தக் கொள்கைக் குறிப்பிலே பார்க்கின்றபோது இல்லை. மிகவும் வருத்தமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு வரலாற்றுப் பிழையை நாம் செய்ததாக இருக்கக்கூடாது. எனவே புதிய விடுதிகள் திறக்கப்படல் வேண்டும். பரமக்குடி தொகுதியில், கிளியூர், மேலாய்குடியில் புதிய விடுதிகள் திறக்கப்பட வேண்டும்.

அதேபோல சமுதாய நலக்கூடம் கட்ட மிகக் குறைந்த ஒதுக்கீடே உள்ளது. வருடத்திற்கு 4 சமுதாயக் கூடங்கள்தான் கட்டப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். குறைந்தது 25 சமுதாயக் கூடங்களாவது கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கின்றேன்.

மதுரையில் I.A.S. free coaching centre தொடங்கப்படும் என்று 1996 ஆம் ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்தது. ஆனால் இதுவரையிலும் அந்த coaching centre திறக்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டு நீங்கள் மதுரையில் ஒரு கிளையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று இந்நிதியாண்டில் 42 விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்காக 13.86 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். அதை வரவேற்கிறேன். அதேபோல பரமக்குடி தொகுதியிலே பல விடுதிக் கட்டடங்கள் இன்னும் கட்டப்படவில்லை. சத்திரக்குடி மாணவியர் விடுதி, பார்த்திபனூர் மாணவர் விடுதி, பாம்பூர் மாணவியர் விடுதி, திருஉத்திரகோசமங்கை மாணவியர் விடுதி, மஞ்சூர் மாணவர் விடுதி, காமன்கோட்டை மாணவர் விடுதி போன்ற பல விடுதிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழக்கூடிய பரமக்குடி போன்ற பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டை நீங்கள் உயர்த்திட வணிக வளாகம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காரைக்குடி அரசு போக்குவரத்துக் கழகத்திலேயிருந்து சென்னைக்குச் செல்கின்ற அதிவிரைவுப் பேருந்துகளுக்கு சமாதானம், சமத்துவம், நல்லிணக்கம் போன்ற அருமையான மனித நேயத்தை வளர்க்கும் பெயர்களை வைத்திருக்கிறார்கள். இதேபோன்று மற்ற துறைகளிலும் இம்முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய பெருமைமிகு அண்ணல் அம்பேத்கருக்கு, இரண்டாம் அம்பேத்கராகத் திகழும் டாக்டர் கலைஞர் அவர்களால் மணி மண்டபம் கட்ட ஆணையிட்டு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அப்பணியைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல வெள்ளையரை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவையிலே உளவுப்படைத் தலைவனாய், தற்கொலைப் படைத் தலைவனாய் பணியாற்றி வீரமரணம் எய்திய வீரன் சுந்தரலிங்க தேவேந்திரன் பிறந்த கவர்ணகிரியிலே அவ்வீரனின் வாரிசுகளுக்கு இலவச வீடுகளை நீங்கள் கட்டிக் கொடுத்தீர்கள். நன்றி. அதேவேளையிலே அவர்கள் பிறந்த கவர்ணகிரியிலே, மணிமண்டபமும், சிலையும் அமைக்க வேண்டுமென இந்தநேரத்திலே நான் கோரிக்கை விடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட இன மக்கள் அதிகம் வாழும் பல பகுதிகளில் இன்னும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே தனித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியை இரட்டிப்பாக்கி நீங்கள் ஆண்டுக்கு ஒரு கோடி வழங்கிட வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல ஆதிதிராவிடர் பொறுப்பில் இருக்கக்கூடிய ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று பேசுகின்றபோது கமுதியிலுள்ள மகளிர் காவல் நிலையம் பரமக்குடிக்கு மாற்றப்பட்டுவிட்டதாக குறைபட்டுக் கொண்டார்கள். உண்மையிலேயே மாற்றப்படவில்லை. கிளை ஒன்றுதான் பரமக்குடியிலே திறக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தொகுதிக்கு மட்டுமல்ல தமிழகத்திற்கே சொந்தமானவர். எனவே கருணை கூர்ந்து அந்தக் கோரிக்கையை அவர்கள் மீண்டும் வலியுறுத்த வேண்டாம் என்று இந்தநேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) இறுதியாக ஒன்று. இன்று தமிழகத்தில் பல நபர்கள் தாங்கள்தான் தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு தங்கள் சுய லாபத்திற்காக மக்களை திசை திருப்பினாலும்கூட ஆதிதிராவிட மக்களின் ஒளிவிளக்காகவும், கலங்கரை விளக்கமாகவும் விளங்கும் டாக்டர் கலைஞரின் பின்னால் இச்சமுதாயம் விசுவாசமாக வீறுநடை போடும் என்று கூறி, மானியக் கோரிக்கையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு நன்றி கூறி, இதிலே என்னுடைய கருத்துக்களைப் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றேன். பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காகவும், தாழ்த்தப்பட்டவர்களின் அடிமை நிலையையும், தீண்டாமையையும் ஒழித்தெறிய வேண்டும் என்பதற்காகவும் தந்தை பெரியார் அவர்கள் கடுமையாகப் பாடுபட்டு அதிலே வெற்றியும் கண்டார்கள். அந்த வகையிலே அந்தக் கொள்கைகளை ஏற்று, இன்றுள்ள திராவிடக் கட்சிகளும், தமிழகத்திலேயுள்ள பல்வேறு கட்சிகளும் அதை நடைமுறைப்படுத்தவும் மேலும் வெற்றியடையவும் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டு வருகின்றன. அனைவருக்கும் முறையான பிரதிநிதித்துவத்தை வழங்குவதையும் இக்கட்சிகள் வரவேற்று அதற்காக முயன்று கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே, எந்த இனத்திற்காக, எந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இனத்திற்காக தமிழகத்திலேயுள்ள கட்சிகளெல்லாம் போராடுகின்றனவோ அந்த நிலைக்குச் சற்று மாறாக இன்று பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் மோதிக்கொள்வது ஒரு கஷ்டமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. எந்தச் சமுதாயங்கள் முன்னேறி சம அந்தஸ்து பெற்றவைகளாக வர வேண்டுமென்று பெரியார் மற்றும் காந்தி போன்ற பல்வேறு தலைவர்கள் நினைத்தார்களோ அந்த நிலை மாறி, அந்தப் பின்தங்கிய சமுதாயங்கள் இன்று தங்களுக்குள்ளேயே மோதி மீண்டும் ஒரு பின்னடைவை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழி, ஒரு நிலை இன்று தென் மாவட்டங்களில் மட்டுமல்ல, பல இடங்களில் உருவாகி வருகின்றது. இந்த நிலை ஏன் ஏற்படுகின்றது என்பதை அரசு ஆய்ந்து ஒரு முடிவிற்கு வர வேண்டும். இந்த மோதலைத் தவிர்ப்பதற்குப் பல்வேறு ஆராய்ச்சிகள் மூலமாக என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்பது குறித்தும் கருத்துப் பரிமாற்றம் செய்து இதற்கு ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டும். ஏன் என்று சொன்னால், இது அந்தச் சமுதாயம் ஒன்றை மட்டுமல்ல, ஒரு மாநிலத்தினுடைய தலைவிதியையே பின்தள்ளுகின்ற நிலையாக, இருப்பதால் இந்த மோதல்கள் வாராமல் பார்த்துக் கொள்வதற்கு, இதற்கு யார் காரணமாக இருந்தாலும், அல்லது எவர் காரணமாக இருந்தாலும், என்ன கொள்கை காரணமாக இருந்தாலும் அவற்றையெல்லாம் தடுத்து அந்த மக்களை சம அந்தஸ்து, சம வாய்ப்பு பெற்றவர்களாக மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



முற்பகல் 11-30

அதுபோல சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு, அண்ணா பிறந்தநாளில் அனைத்து ஆதிதிராவிட மக்களுக்கும் வீட்டும்னைப் பட்டா வழங்கப்படும் என்று நமது அரசு அறிவித்தது. ஆனால் இதுவரை அந்த மாதிரி வழங்கப்படவில்லை. வழங்கப்பட்டதாகவும் தெரியவில்லை. ஏன் வழங்கப்படவில்லை? அதற்கான காரணங்கள் என்ன? அப்படி இலவசமாகப் பட்டா வழங்கப்படுவதில் என்ன தவறு இருக்கிறது என்பதை இந்த அரசு விளக்கிக்கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல 77-வது amendment-ஐ நடைமுறைப்படுத்தி உயர் பதவியில் உள்ளவர்களுக்கு இடஒதுக்கீடு முறையிலே பதவியில் அவர்களை நியமனம் செய்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும்போது நிலங்களை acquisition மூலம் எடுத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு acquisition மூலமாக நிலத்தை எடுக்கும்போது மிகக் குறைந்த தொகையை வழங்குகின்ற காரணத்தால் நில உரிமையாளர்கள் பெரும்பாலும் வழக்காடு மன்றங்களுக்குச் சென்று தடையாணை பெற்றுவிடுகின்றார்கள். இதனால் 15, 16 வருடங்கள் வரை வழக்குகள் நிலுவையிலே இருந்து, அந்தப் பணம், அதற்காகப் பயன்படாமலும், அதன் பயன் மக்களுக்குப் போய்ச் சேராமலும் தடைபட்டுவிடுகின்றது. மற்ற துறைகளுக்கு நிலம் எடுக்கும்போது பேச்சுவார்த்தை மூலமாக கையகப்படுத்தப்படும்போது இந்தத் துறைக்கு மட்டும் ஏன் acquisition முறையைப் பின்பற்ற வேண்டும். இந்தத் திட்டம் காலாவதியாக வேண்டும் என்ற நோக்கம் இருக்கக்கூடாது என்ற காரணத்தினால், இனியாவது இதுபோன்று நகர்ப்புறங்களிலே இருக்கின்ற மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்படும்போது நில ஆர்ஜித முறையை கைவிடுத்து, முறையாக அந்த நில உரிமையாளரிடம் பேசி, negotiation முறையிலே நிலங்களை எடுத்தால், அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்த பணத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க முடியும். இதன் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளையும் தவிர்க்க முடியும். அந்த மக்களை நாம் எவ்வளவு தூரம் உயர்த்த வேண்டும் என்று நினைக்கிறோமோ

அந்த இலக்கினையும் அடைய முடியும் என்று இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோல் ஆதிதிராவிட நல தாசில்தார் என ஒவ்வொரு இடத்திலும் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், அவர்களுக்கு முறையாக வாகனங்கள் வழங்கப்படவில்லை என்று. ஒரு மாவட்டத்தில் எத்தனை தாசில்தார்கள் இருக்கிறார்களோ அத்தனை தாசில்தார்களுக்கும் வழங்க வேண்டும். எனது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முழுமையான அளவிற்கு இல்லை. இரண்டை வைத்துக்கொண்டு மாவட்டம் முழுவதையும் பார்க்க வேண்டிய நிலைமை உள்ளது. அதனால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய....

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாட்சியர்களுக்கு ஈப்பு வழங்கப்படவில்லை என்று கூறினார்கள். மொத்தம் 80 தனி வட்டாட்சியர்கள் இந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு வரை 40 ஈப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதம் வழங்கப்பட வேண்டியது ·40. இந்த ஆண்டுகூட இந்தத் துணைத் திட்டத்திலே 10 ஈப்புகள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நன்றி. ஈப்புகள் வழங்குவது மட்டுமல்லாமல் நிரப்பப்படாமல் உள்ள வட்டாட்சியர் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும். ஏன் என்று சொன்னால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்கு வட்டாட்சியர்களின் உதவியை நாட வேண்டியிருக்கிறது. அதற்காக 100 கிலோமீட்டர், 50 கிலோமீட்டர் பயணம் செய்து அந்தச் சம்பளத்தைத் தர வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நிரப்பப்படாமல் உள்ள அனைத்து ஆதிதிராவிட நல வட்டாட்சியர் பதவிகளையும் உடனடியாக இந்த அரசு நிரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதுபோல மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுவதைத் தடை செய்யக்கூடிய திட்டத்தை இந்த அரசு முழுமையாகச் செயல்படுத்துவதை மனதாரவும் உளமாறவும் பாராட்டுகின்றோம். இந்த ஒரு நிலை



இந்தியாவில் அனைத்து இடங்களிலும் வரவேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குவதையும் வரவேற்கின்றோம்.

அதுபோல TAHDCO மூலம் ஆதிதிராவிடர்களுக்கு கடன் உதவி வழங்குவதாகக் கூறி அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய மனிதப் பயன்பாடு வீணாகிக்கொண்டிருக்கின்றது. இதற்கான நடைமுறைகளில் பல்வேறு சிக்கல்கள், சிரமங்கள் இருக்கின்றன. அந்த நடைமுறையை எளிமைப்படுத்த வேண்டும். ஒருவன் TAHDCO கடன் உதவிக்காக விண்ணப்பித்துவிட்டால் கிட்டத்தட்ட 6, 7, மாதங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும் மற்ற இடங்களுக்கும் அலைவதால் மனிதப் பயன்பாடு, உழைப்பு, கூலிகள் எல்லாம் இழந்து பின்னால் வருகின்ற தொகையைவிட அதிகமான நேரத்தை அதற்காக அவன் செலவு செய்து வருகின்றான். இதற்கு இடைத்தரகர்கள் நிறைய பேர் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் தாண்டிப்போக வேண்டிய நிலை உள்ளது. ஏழு கடலையும் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதைப் போன்று, சிந்துபாத் கதையிலே வருவதைப் போன்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதுபோன்ற நிகழ்வுகளை மாற்ற வேண்டும்; நடைமுறையை எளிமைப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, TAHDCO பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். கடந்த காலத்திலே நீங்கள் சொன்ன சிந்துபாத் கதையெல்லாம் நடந்தது உண்டு. இப்போது TAHDCO இடைத்தரகர்கள் பிடியிலேயிருந்து விடுவிக்கப்பட்டு விரைவாகவும், வேகமாகவும் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

**திரு. ஜி. நிஜாமுதீன்:** TAHDCO-வைப் பொறுத்தவரையில் வேகமாகச் செயல்படுத்த வைத்தாலும், அது வழங்குகின்ற கடனை வங்கி கொடுப்பதே இல்லை. இங்கிருந்து தப்பி, இது வாயிலேயிருந்து தப்பி அது வாயிலே மாட்டிய கதையாகப் போய் மாட்டிக் கொள்கிறார்கள். வங்கிக்குப் போனால் காலையிலே வா, சாயங்காலம் வா என்று அவர்கள் வீட்டு வேலைக்காரனைவிட மோசமாக நடத்துகிறார்கள். ஒன்று, உண்டு என்று சொல்ல வேண்டும் அல்லது இல்லை என்று

சொல்ல வேண்டும். வங்கிகளை நம்மாலே கட்டுப்படுத்த முடியாது என்ற நிலை இருப்பதை உணர்கின்றேன். அதற்காக இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படக்கூடாது. TAHDCO-விலேயே ஒரு வங்கியை ஆரம்பித்து விடலாம். அதன் மூலம் நாம் செயல்படுத்தி விடலாம். காலையிலே வா, சாயங்காலம் வா என்று சொல்லி 6, 7 மாத காலம் ஆன பிறகு அவன் வாழ்க்கையே வெறுத்துப்போய் அந்தத் தாளையே கிழித்துப் போட்டு விடுகிறான். அதற்கான சான்றிதழ்களைத் தயார் செய்வதற்கு அவன் கிட்டத்தட்ட இரண்டாயிரம், மூன்றாயிரம் ரூபாய் செலவு செய்கிறான். லஞ்சம் கொடுக்கிறான். எல்லாம் செய்தும், ஐந்தாயிரம் ரூபாய் வரை செலவு செய்தும் அந்தத் தொகை அவனுக்குக் கிடைக்காமலேயே போய்விடுகிறது. கடைசியிலே TAHDCO மனது வைத்தாலும், ரொம்பக் கஷ்டப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்க்கும்போது அவர் தூரத்திலே உட்கார்ந்திருப்பார் உள்ளே அறைக்குள் போனால் — அவரைப் பார்த்தாலே அந்த தூரத்தை வைத்துப் பயம் ஏற்படும் — அவன் நடுங்கிக்கொண்டே கிட்டே போனால் ஆடிப் போய்விடுவான். என்னய்யா என்று கேட்டு, போடா என்று விரட்டி விடுவார். இந்த நிலையையெல்லாம் தாண்டி அவன் வெளியே வந்தால் அங்கே வங்கி மேலாளர் அதைவிட மோசமாக நடந்து கொள்கிறார். ஆகவே இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். மனிதப் பயன்பாடு என்பது இப்படி அலைந்து அலைந்தே, தேடித் தேடிச் சென்றே, ஏக்கம் கொண்டே வீணாகிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே இதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான்கு சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. அதிகமாக சமுதாயக் கூடங்களைக் கட்டுவதற்கு முன்வர வேண்டும். ஏனென்றால் மக்கள் கலந்துரையாடக் கூடிய இடங்களாக அல்லது விழாக்களை நடத்தக்கூடிய இடங்களாக அவை இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதிகமாக சமுதாயக் கூடங்களைக் கட்டுவதற்கு முன்வர வேண்டும்.

நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அடிக்கடி புயல், மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய இடங்கள் இருப்பதனால், பழைய முறையிலே கட்டப்பட்டு வந்த புயல் பாதுகாப்பு இல்லங்களை மீண்டும் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும். அதைப் போதுமான அளவு ஒவ்வொரு பகுதியிலேயும் கட்ட வேண்டும். ஏனென்றால் அந்தக்



கூடங்கள் வீணாவதில்லை. பல வகைகளிலேயும் பயன்படுகின்றன. மற்ற நேரங்களிலே அங்கு பள்ளிகள் போன்றவை நடந்து கொண்டிருக்கின்றன. மற்றும் விழாக்களை நடத்துவதற்கு, அரசு அலுவலகங்களுக்கு என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். புயல் நேரங்களிலே அதில் சென்று தங்குவதற்கு வசதியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே புயல் பாதுகாப்பு இல்லங்களை மீண்டும் இந்த அரசு கட்டுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் துறையைச் சார்ந்த பள்ளிகள் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு மீண்டும் புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முடிந்தால் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளி என்று தற்போது உள்ள பள்ளியின் பெயரை மாற்றிவிட்டு, எல்லோருக்கும் பொதுவான பள்ளி என்று பெயரை வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். மீண்டும் மீண்டும் தனிப் பெயரைச சொல்லிச் சொல்லியே, தனிப்பட்ட இனத்திற்கான பள்ளி என்ற ஒதுக்கீட்டை நாமே செய்யாமல் அதை எல்லோரும் பயன்படுத்தும் பள்ளியைப்போல மாற்றி எல்லா மாணவர்களும் பயிலக்கூடிய வகையில் — பயில்கின்றார்கள், மிகவும் குறைவாகப் பயில்கின்றார்கள், ஏதோ வேண்டா வெறுப்பாகச் சென்று, தூரமாக இருக்கின்ற காரணத்தினால் மற்ற பிள்ளைகள் சேரக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது; அப்படி ஒரு நிலை இருக்கக்கூடாது— பொதுவான ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

எனது சக சட்டமன்ற உறுப்பினர் அப்துல் நாசர் அவர்கள் சார்பாக ஒன்று. சிதம்பரம் அரசு நந்தனார் ஆதிதிராவிடர் நலப் பள்ளியிலே ஆண்கள், பெண்கள் விடுதிகளிலே — ஆசியாவிலேயே மிகவும் பெரியது — மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டி தரமான குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவரவர்களே, கொஞ்சம் நேரம் கொடுங்கள். நான் சொல்ல வேண்டிய முக்கியமான கருத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. எனவே பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு நேரம் நாகப்பட்டினத்தைப் பற்றிதான் பேசினீர்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நாகப்பட்டினத்தைப் பற்றி நான் பொதுவான கருத்தைத்தான் பேசினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தொகுதியைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருக்கும் நீங்கள் வாய்ப்பு கொடுக்கப் போவதில்லை அல்லவா? அதனாலே பேசிவிடுகிறேன். அந்தப் பள்ளியிலே மாணவர் விடுதிக்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி வழங்க வேண்டும்; தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பள்ளியிலும், விடுதியிலும் உருண்டை விளக்கைப் போட்டிருக்கிறார்கள். 40 watt bulb, 30 watt bulb என்று. அது படிப்பதற்குப் போதுமான வெளிச்சம் தருவதாக இல்லை. அதை குழல் விளக்குகளாக மாற்றிக் கொடுத்தால் படிப்பதற்கும், படித்து அவர்கள் முன்னேறி நீங்கள் எண்ணுகின்ற இலக்கை அடைவதற்கும்....

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த காலத்தில் மாணவர் விடுதியிலே வழங்கப்பட்ட - அவர் சொல்வது போன்ற பல்புகளை - உருண்டை பல்புகள் இப்பொழுது குழல் விளக்குகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நன்றி. புவனகிரி தொகுதியில் உள்ள சிதம்பரம் அரசு கலைக் கல்லூரி மாணவர் விடுதி, கல்லூரியிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதனால் மாணவர்கள் ரொம்ப தூரம் சென்று படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்தக் கல்லூரிக்குப் பக்கத்திலேயே போதுமான இடம் இருப்பதால் அந்த இடத்திற்கு விடுதியை மாற்றம் செய்து கொடுத்தால் அவர்களுக்குப் பயன்பட ஏதுவாக இருக்கும். ஆகவே அந்த விடுதியை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1967-லே ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த அரசு சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியிலே சுமார் 200 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்



பட்டாக்களை வழங்கியது. அங்கே அரசு இடம் இல்லை என்ற காரணத்தால் ஊராட்சிக்குச் சொந்தமான இடத்தை வழங்கினார்கள். ஆனால் 30 ஆண்டுகள் ஆகியும், அந்த இடத்தை அங்குள்ள மக்கள் சென்று பயன்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இதற்காக அந்தப் பகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் முயன்றும் இம்முயற்சியிலே வெற்றி பெற முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். 30 வருடமாகக் கொடுக்கப்பட்ட பட்டாவைப் பயன்படுத்த முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதைக் கவனத்தில் கொண்டு union-லிருந்து அந்த இடத்தைப் பெற்றோ அல்லது மாற்று இடம் வழங்கியோ — அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட பட்டா உண்மையானதுதான் — அந்த இடத்தைப் பயன்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் நேரத்தை ஒதுக்கி, சுறாராக நடந்து கொள்கிற தாங்கள், மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்களுக்கு மட்டும் அதிகமான நேரத்திற்கு அனுமதி அளிப்பது ஏன்? விசேஷ சலுகையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காரணம் தெரிந்தும் தெரியாதது மாதிரி கேட்கக் கூடாது. (சிரிப்பு)

**திரு. ஜி. நிஜாமுதீன்:** துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் நடைபெறும் மாதானம் தொடக்கப் பள்ளியும், காரைமேடு தொடக்கப் பள்ளியும் நடுநிலைப் பள்ளிகளாக சென்ற ஆண்டு நிலை உயர்த்தப்பட்டன. மேல் வகுப்பில மாணவர்கள் சேர்க்கப்பட்டும். ஆசிரியர்கள் நியமிக்க உத்தரவிடப்படவில்லை என்பதால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு அந்தப் பள்ளிகளுக்கு உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு சலுகைகளையும் திட்டங்களையும் ஒதுக்கீடுகளையும் வழங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த ஒதுக்கீடுகளைப் பெற்ற மக்கள் போதுமான அளவுக்கு முன்னேறியிருக்கிறார்களா அல்லது நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குச் சென்று புல் வளர்வதைப்போல, broker-களும் மற்றவர்களும் அதைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்களா என்பதைக் கண்டறிய வேண்டும். ஏனென்று சொன்னால், எங்களுடைய தொகுதியிலேயும் ஆதிதிராவிடர்கள் பகுதி இருக்கிறது. நானும் அந்தப் பகுதியைப் பார்க்கிறேன். எனக்கு 30-32 வயது ஆகிறது. நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அந்தப் பகுதியில் யாருமே முன்னேறிய மாதிரி தெரியவில்லை. இவ்வளவு சலுகைகளை வழங்கியும் ஏன் அவர்கள் முன்னேறவில்லை? அப்படி முன்னேறாததற்குக் காரணம் என்ன? போதிய முன்னேற்றம் இல்லாததற்கு அவர்களுக்கு தடை எங்கே இருக்கிறது என்பதை நாம் கண்டறிந்து, போதுமான அளவுக்கு முன்னேறியிருக்கிறார்களா என்பதை ஆய்வு செய்து, அதற்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால் வழங்கப்படுகிற மானியங்களோ ஒதுக்கீடுகளோ முறையாக அவர்களுக்குச் சென்றடைகிறதா என்பதைப் பார்ப்பதற்கு நாம் முறையான முயற்சிகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு என்று போராடிப் பெற்ற சலுகைகள், தந்தை பெரியார் போன்றவர்கள், திராவிட இயக்கங்களின் தலைவர்கள் போராடிப் பெற்றதன் விளைவுகள், அவர்களைச் சென்றடையவில்லை என்றால், இதற்காகப் போராடி என்ன பயன் என்ற நினைவு அவர்களுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எல்லாம் ஒழுங்காகச் சென்றடைகிறதா என்பதைக் கண்டறிந்து, அப்படிச் செல்லவில்லை என்று சொன்னால், அதற்கு மாற்று ஏற்பாடு செய்யுமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.ச. புரட்சிமணி.

**திரு. ச. புரட்சிமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் சார்ந்துள்ள தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1999-2000 ஆண்டுக்கு இந்தத் துறைக்கு ரூ. 509 கோடி ஒதுக்கியதை நான்



வரவேற்கிறேன். இந்தத் துறைக்கென தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஓர் இட ஒதுக்கீட்டு உயர்மட்டக் குழுவை அமைத்தார்கள். அந்த உயர்மட்டக் குழுவின் மூலம் கிட்டத்தட்ட 90 துறைகள் குறித்து தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. ஆனால் இதுவரை அந்தக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட அறிக்கை குறித்து எந்தவிதமான அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. அதனை திரும்பவும் அந்தத் துறைச் செயலாளரும் துறை அமைச்சரும் கொண்ட குழு மீண்டும் ஆய்வு செய்யும் என்று அறிவித்துள்ளார்கள். இந்த நிலை தொடர்ந்தால் இந்தக் குழுவை அமைத்ததற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். ஆதலால் மிக விரைவிலே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆய்வு அறிக்கையை மீண்டும் ஒரு முறை ஆய்வு செய்வதாகக் கூறுகின்றார். அதாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்ப வேண்டும் என்பதற்காக 9 ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்து - அதில் ஒருவராக திரு. புரட்சிமணி அவர்களும் அங்கம் பெற்றிருக்கிறார் - அந்தக் குழுவின் ஆய்வு அறிக்கை முடிந்துவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் அதை அமைச்சரவையில் ஆய்வு செய்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அந்தத் துறையின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து அது குறித்து கலந்தாலோசித்து விரைவில் அறிக்கை தாக்கல் செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்; அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே இந்தச் சட்டமன்றத்திலே சமர்ப்பிக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**திரு. ச. புரட்சிமணி:** துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் திரும்பவும் சொல்கிறேன். அதாவது, இதற்கு குழுவை அமைத்து,

அந்தக் குழுவின் மூலமாக எடுக்கப்பட்ட முடிவை மிக விரைவில் அறிவிப்பீர்களேயானால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ள படித்த பட்டதாரிகள் மிக விரைவில் இதன் மூலம் பயன்பெறுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களை இந்தக் கூட்டத் தொடருக்குள்ளாகவே அவையிலே வைப்பதற்காக இன்று மாலை 4.30 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் ஏற்பாடாகியிருக்கிறது.

**திரு. ச. புரட்சிமணி:** எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து TAHDCO வங்கி. 1998-99-லே, TAHDCO வங்கி ஒன்றை ஏற்படுத்தப் போகிறோம் என்று கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தீர்கள். ஆனால், இதுவரையில் அந்த வங்கி தொடங்கப்படவில்லை. TAHDCO வங்கியினுடைய நிலை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல. TAHDCO வங்கியை அமைக்கும்போது Reserve வங்கியிலே அவர்கள் 100 கோடி ரூபாய் அளவிற்கு Deposit இருந்தால்தான் TAHDCO வங்கி தொடங்க முடியும் என்று தெரிவித்ததாக நான் அறிகிறேன். இன்றைக்கு இந்தத் துறைக்கு 509 கோடி ரூபாயை நாம் ஒதுக்கியுள்ளோம். இந்த 509 கோடி ரூபாயில் TAHDCO வங்கியை அமைப்பதற்கு 100 கோடி ரூபாயை Deposit செய்து, அந்த வங்கியை அமைத்தால் அது இந்தச் சமுதாயத்திற்குச் செய்கின்ற மிகப் பெரிய நல்ல காரியம் என்று இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வீட்டுமனைப் பட்டா கொடுக்கும்போது, அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணையைப் பெற்று விடுகிறார்கள். இப்போது உயர் நீதிமன்றத்திலே, பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நிலுவையில் உள்ளன. நம்முடைய தமிழகத்தின் முதல்வரவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு தனி நீதிமன்றங்களை அமைத்துள்ளார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேபோன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கின்ற விஷயம் குறித்தும் தனி நீதிமன்றம் அமைத்தால் மிக நன்றாக இருக்கும் என்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று இப்போது தனியார் துறை மூலம் பல்வேறு தொழிற்சாலைகள், நிறுவனங்கள் தொடங்கப்படுகின்றன. தனியார் துறை மூலம் தொடங்கப்படுகின்ற தொழிற்சாலைகளிலும், தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அளிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்குகின்ற நேரத்திலே, இந்த இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிக்க அவர்களை வற்புறுத்த வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சமுதாயக் கூடங்கள். இந்த வருடத்திற்கு மிகக் குறைவாகத் தொடங்கப்படுவதாக அறிவித்துள்ளார்கள். குறைந்தபட்சம் 25 சமுதாயக் கூடங்களாவது தொடங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சமுதாயக் கூடங்களை அதிகமாகத் திறக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றார்கள். கடந்த காலங்களிலே ஆண்டுதோறும் இரண்டே இரண்டு சமுதாயக் கூடங்கள் திறந்து வைக்கப்பட்ட வரலாறு உண்டு. ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இப்போது தமிழ்நாடு முழுவதும் ஆண்டுதோறும் 10 சமுதாயக் கூடங்கள் திறந்து வைக்கப்படுகின்றன என்ற நல்ல செய்தியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ச. புரட்சிமணி:** சமுதாயக் கூடங்கள் பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. 1999-2000 ஆண்டிற்கு 4 சமுதாயக் கூடங்கள்தான் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதனால் இது போதாது, இன்னும் அதிகமாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினரை அரசமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் சேர்க்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, தமிழகத்தில் கிராம உதவியாளர்கள் 30 ஆயிரம் பேர் இருந்து வருகின்றார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும். ஏனென்றால் படித்தவர்கள் நிறைய பேர் கிராம உதவியாளர்களாக இருக்கின்றார்கள். எனவே அவர்களுடைய கல்வி அறிவைப் பொறுத்து பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, இரண்டு தாலுகா அலுவலகங்களுக்கு, ஒரு தனி தாசில்தார் அலுவலகம் உள்ளது. அதை மாற்றி ஒவ்வொரு தாலுகா அலுவலகத்திற்கும் தனி தாசில்தார் அலுவலகத்தை அறிவித்திட வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று ஆரம்பப் பள்ளியை நம்முடைய துறையின் மூலமாகத் தொடங்குவது இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் இந்தத் துறையின் மூலம் ஆரம்பப் பள்ளியைத் தொடங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று என்னுடைய தொகுதியிலுள்ளது தீவளூர் என்ற கிராமம். அந்தக் கிராமத்திற்கு அருகில் 5 ஏக்கா நிலம் உள்ளது. அந்நிலத்தை அந்தப் பள்ளிக்கு வழங்கிட வேண்டுமாய இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் சொல்வது நல்ல செய்தியாகக்கூட இருக்கலாம். மகிழ்ச்சியான செய்தியாகக்கூட இருக்கலாம். அதை முறைப்படி அவைக்குத் தெரிவிக்க வேண்டும். ஒன்று, என்னிடத்திலே தெரிவித்து என் மூலமாக இங்கே சொல்ல வேண்டும்; அல்லது அவை முன்னவரிடத்திலே தெரிவித்து அவர் மூலமாகச் சொல்ல வேண்டும்; அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மூலமாகச் சொல்லி இருக்க வேண்டும். எதையும் தனியாக—அவை நடந்து கொண்டிருக்கிறபோது, நிகழ்ச்சி நிரலின்படி நடந்து கொள்ள வேண்டுமே அல்லாமல் இடையிலே குறுக்கிட்டுச் சொல்வது என்றால் அதற்கு விதி 110ன்கீழ் அறிக்கை என்று இருக்கிறது. அதற்கான அனுமதியைப்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



பெற்றிருக்க வேண்டும். இந்த முறையை நீங்கள் இப்போது அனுமதித்தால் இதே முறையை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்கத் தொடங்குவார்கள். எனவே இந்த முறையை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, அவர் இங்கே சொன்ன அந்த வார்த்தைகளையெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டும் என்றும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்ட *அத்தனை வாக்கியங்களும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியத்தின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும பழங்குடியின மக்களுக்கு 509 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் மானியக் கோரிக்கையில் கொடுக்கப்படுகிறபோது, 334 கோடி ரூபாயாக மட்டுமே காட்டப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய அந்த 509 கோடி ரூபாய் என்ன என்பது விளக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறைக்கு 509 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களும் நிதிநிலை அறிக்கையில் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் 334 கோடி ரூபாய்தான் இந்தத் துறைக்கு செலவிடப்பட இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட 509 கோடியில், 334 கோடி ரூபாய் நேரடியாக இந்தத் துறையின் மூலமாகச் செலவிடப்பட்டு வருகிறது. மீதமுள்ள பணம் மற்ற துறைகளின் மூலமாகவே ஆதிதிராவிட மக்களுக்கு மட்டுமே செலவிடப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலேயும் அதற்குண்டான விளக்கம் இல்லை. அதை நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்வது என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட பணங்கள் பற்றி குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் பால் வளத் துறையின் மூலமாக கிடேரிக் கன்றுகள் வாங்குவதற்கும், கறவை மாடுகள் வாங்குவதற்கும்கூட, இந்த ஆண்டு 19.38 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல வேளாண் துறைக்கு 41.82 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இந்த ஆண்டு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல பால் வளத் துறைக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.. கால்நடைத் துறையின் மூலமாக மேய்ச்சல் நிலங்கள் உள்ள இடங்களில் ஆடுகள் வாங்குவதற்கும் மாடுகள் வாங்குவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. உள்ளாட்சித் துறையின் மூலமாக தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு இந்த ஆண்டு 44 கோடியே 14 இலட்ச ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதுவும் ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக 20 சதவீதம் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது பல்வேறு துறைகளின் மூலமாக ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பில் பழங்குடியினருக்காக பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் 509 கோடி ரூபாய் என்று போட்டுவிட்டு, மானியக் கோரிக்கையில் 362.49 கோடி மட்டும்தான் கணக்கு வருகிறது. இப்படி பொத்தாம்பொதுவிலே, ஆடு கொடுக்கிறோம், மாடு கொடுக்கிறோம், வண்டி கொடுக்கிறோம் என்று சொல்வது சரியானதல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கிய 509 கோடி ரூபாயில் 362 கோடி ரூபாய போக மீதமுள்ள 145 கோடி ரூபாய்க்குக் கணக்கு என்ன? அது எந்த இடத்தில் சரியாக செலவழிக்கப்படுகிறது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

அடுத்தபடியாக ஆதிதிராவிட மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கை விரைவிலே வெளியிடப்படுமென்று



சொல்லப்படுகிறது. அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளை அறிக்கையை கடந்த 3 ஆண்டுகாலமாக வலியுறுத்தி வருகின்ற நேரத்தில் சமீபத்தில் மின்சாரத் துறையின் சார்பாக 11000 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று இந்த அவையில் அறிவிக்கப்பட்டது. 11,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகின்றபோது. இட ஒதுக்கீடு முறையும் அமலாக்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லையே ஏன், என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே புதிதாக நியமனம் செய்கிற நேரத்திலேதான் இட ஒதுக்கீடு பிரச்சினை வரும். மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இட ஒதுக்கீடு பிரச்சினை வரும். இது ஏற்கெனவே 10 ஆண்டுகாலம், 12 ஆண்டுகாலம் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினை. தொழிலாளர்கள் 240 நாட்களுக்கு மேல் பணியாற்றினால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அப்படிப்பட்ட தீர்ப்புகள் வருகின்ற நேரத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் பல ஆண்டுகாலம் போராடி வருகின்ற சூழ்நிலையில் நம்முடைய முதல்வர் அவர்கள் அப்படிப்பட்ட தொழிலாளர்களை நிரந்தரமாக ஆக்குங்கள் என்று சொன்னார்கள். அந்த 11,000 தொழிலாளர்களில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கலாம். ஆனால் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற பட்டியல் என்னிடத்திலே இல்லை. தேவைப்பட்டால் தயாரித்தளிக்க மின் வாரியம் தயாராக இருக்கிறது. அப்படியே அவர்கள் இல்லை என்று சொன்னாலும், அதற்காக அந்த 11,000 பேரிலே விகிதாச்சார அடிப்படையில் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இட ஒதுக்கீடு தர முடியாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இப்படித்தானே கடந்த 50 ஆண்டு காலமாக இட ஒதுக்கீடு பறிபோய் இருக்கிறது. 11,000 பேரை நீங்கள் நிரந்தம் செய்கிறீர்கள். 4 சதவீதம்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்படி ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுத்துக் கொண்டே போனால்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள் என்று அமைச்சர் அவர்கள்

தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றபோதும், மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோதும், இட ஒதுக்கீடு முறை கையாளப்படும். இது ஏற்கெனவே பணியில் இருக்கிற தொழிலாளர்கள், அதுவும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பணி நிரந்தரம் செய்யப்படுகிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அந்தக் குழுவே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலித் கமிஷன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். புதிதாக நியமனம் செய்கிற நேரத்திலேதான் இட ஒதுக்கீடு பிரச்சினை வரும். இது 10 ஆண்டு காலம், அதற்கு மேலாக பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினை. ஏற்கெனவே மின்சார வாரியத்திலே கடந்த ஆண்டு 900 தொழில்நுட்ப உதவியாளர் பணிகளுக்கு ஆட்களை புதிதாக எடுக்கின்றபோது 6 ஆண்டுகாலமாக ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்களை எடுக்கவில்லை என்று கணக்கிட்டபோது அதிலே 450 பேர் எடுக்கப்படவில்லை என்று எனக்குத் தகவல் தெரிவித்தார்கள். உடனே 900 பணிகளிலே 450 பேரை தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளில் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைத் தேர்ந்தெடுங்கள் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்படிப் பார்த்தால் அது 50 சதவீதமாக ஆகிறது ஆக, ஏற்கெனவே இழைக்கப்பட்ட அநீதிக்கு ஒரு நீதி வழங்கியிருக்கிறோம். அதிலே இப்படிப்பட்ட தவறுகள் செய்ய முடியாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு நீர்த்துப் போனதற்கு காரணமே temporary appointment தான். Contract labour என்று முதலில் எடுப்பது; இரண்டு அண்டுகள், மூன்றாண்டுகள், நான்கு ஆண்டுகள் கழித்து இதுபோன்ற சில குழுவினுடைய பரிந்துரையின்பேரில் நிரந்தரமாக ஆக்குவது; இது போன்ற நடவடிக்கைகளால் — இட ஒதுக்கீடு பற்றி கவலைப்படாமல் — தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் இருக்கக்கூடிய இட ஒதுக்கீடே பறிபோகிறது. எனவே அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதமான உத்தரவை வழங்கியிருக்கிறது. இந்த உத்தரவுக்கு மாற்றாக — 11,000 பேரை நிரந்தரம் செய்யும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யக்கூடிய வகையில் கூடுதலாகப் பதவிகளை நீங்கள் சேர்க்க வழி



செய்ய வேண்டுமே தவிர, 11,000 பேரில் இட ஒதுக்கீட்டுக்கு இடமில்லை என்று சொன்னால் எப்படி? தாழ்த்தப்பட்டவர்களுக்காக பாடுபடக்கூடிய அரசாக இந்த அரசை நாங்கள் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? இதை எப்படி, எப்போது சரிக்கட்டுவீர்கள். ஒரு ஆள், இரண்டு ஆட்கள் என்று கிடையாது. 11,000 பேர் என்று வரும்போது, எப்போது, எப்படி நீங்கள் ஈடுகட்ட முடியும்? அதிலே 10 பேர்கள், 20 பேர்கள்கூட தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை என்று கேள்விப்படுகிறேன். அதுவும் ஆயிரம் ரூபாய்க்கு, 2 ஆயிரம் ரூபாய்க்கு போலிச் சான்றிதழ் வாங்கி வந்து....

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்க்க வேண்டும் என்று கேட்க உரிமை இருக்கிறது. அதற்காக 11 ஆண்டுகள், 12 ஆண்டுகள் பணியாற்றிய தொழிலாளர்கள், போலிச் சான்றிதழ் வாங்கி அவர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. அந்தக் குற்றச்சாட்டுக்கு அவர் பொறுப்பு ஏற்றுக்கொள்வதாக இருந்தால், நான் அந்த அமைச்சர் என்ற முறையிலே எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தை அமைச்சரிடத்திலே தரத் தயாராக இருக்கிறேன். ஆனால் இப்போது என்னுடைய வேண்டுகோள் அது அல்ல. 11 ஆயிரம் பேர்களை நீங்கள் நிரந்தரம் செய்வதுபற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது. அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யுங்கள், உண்மையாக 11 ஆயிரம் பேர்கள் வேலை செய்பவர்களாக இருந்தால். ஆனால் 11 ஆயிரம் பேர்கள் நிரந்தரம் செய்யப்படுகின்றபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்குண்டான இட ஒதுக்கீடும் கொடுக்கப்பட வேண்டும்; அவர்களுக்குக் கூடுதலாகக் கொடுங்கள் என்று சொல்கிறோம். அதுதான் என்னுடைய வேண்டுகோள்; மிக முக்கியம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார். புதிதாகப் பணிக்கு ஆள் எடுக்கும்போதுதான் இட ஒதுக்கீடு கொள்கை அமல்படுத்தப்படும் என்று. இவர்கள் ஏற்கெனவே பணியில் இருப்பவர்கள். இதுசம்பந்தமாக காலித் கமிஷன் தீர்ப்பு இருக்கிறது; உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறது. நீங்கள் வேறு subject-க்கு வாருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக கடந்த ஆண்டு TAHDCO வங்கி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அதுபற்றிச் சொல்லப்படவில்லை. எனவே TAHDCO வங்கி என்ன ஆயிற்று என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒட்டுமொத்தமாக கடந்த 50 ஆண்டுகாலத்தை பார்த்தீர்கள் என்றால், எத்தனை திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன; தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை நிலையை அந்தத் திட்டங்கள் எல்லாம் உயர்த்தியதா என்றால் உயர்த்தவே இல்லை. காரணம் உண்மையாகப் போடப்பட்ட எந்தத் திட்டங்களுமே தாழ்த்தப்பட்ட மக்களைச் சென்று அடைவது கிடையாது. என்னுடைய வேண்டுகோள், என்னுடைய கருத்து என்னவென்றால், நிதிநிலை அறிக்கையிலே திட்டங்களுக்கு 4,500 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்றால் அதிலே 18 சதவீதம், 20 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக, 800 கோடி அல்லது 850 கோடி ரூபாயை—ஆதிதிராவிடர் மற்றும் பட்டியல் இனப் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் கொடுத்து, அந்தத் துறையே அதை முழுமையாகக் கண்காணிக்கக்கூடிய சுயசார்புத் துறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இருக்க வேண்டும். என்று அப்படி அந்தத் துறை இருக்கிறதோ, அன்றைக்குத்தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அது இல்லாமல், ஒட்டுமொத்தத்தில் கல்வித் துறைக்குக் கொஞ்சம், வேளாண்மைத் துறைக்குக் கொஞ்சம், பொதுப் பணித் துறைக்குக் கொஞ்சம் கொடுத்துவிட்டு கணக்குப் பார்த்தால், கடைசியில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமை நிச்சயமாக உயராது.

அடுத்தபடியாக கல்வியிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்றபோது அதிகமான drop-outs இருக்கின்றது; 5 ஆம் வகுப்பு வரையிலும், 5 ஆம் வகுப்புக்கு மேலும் அதிகமான drop-outs



தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருக்கின்றது. அதைத் தடுப்பதற்கு ஒரு புதிய முறையைக் கையாளலாம். 50, 60 மாணவர்களை தனியாக குருகுல முறைப்படி ஓர் ஆசிரியரிடத்திலே பொறுப்பு ஒப்படைத்து, அவர் 5 ஆம் வகுப்பு வரையிலும் கட்டாயமாக அவர்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும்; அந்த ஓர் ஆசிரியரே மாணவர்களுடைய எல்லா விதமான கல்வியையும் கவனிக்கக்கூடிய அளவிற்கு புதிய முறையைக் கையாள வேண்டும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கல்லூரிகள், பள்ளிகளிலே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கான விடுதிக் கட்டணம் போதுமானதாக இல்லை. அவர்களுக்கு உணவு சரியாக வழங்கப்படுவது கிடையாது. இப்போது தனியார் துறைக்கு விடுதிகள் விடப்படுகின்றன. அந்த விடுதிகளைத் தனியாருக்கு விடுகின்ற காரணத்தால், லாபம் சம்பாதிக்கும் நோக்கத்தோடு அவைகள் நடத்தப்படுகின்றன. எனவே அந்த விடுதிகளைத் தனியாருக்கு விடாமல், அரசே நடத்த வேண்டும்....

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுக் கட்டணம் மிகவும் குறைவு என்று சொல்கின்றார்கள். கடந்த காலத்தில் மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் ரூ.138.75 ஆக இருந்ததை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த 3 ஆண்டுகளில் ரூ.225/- ஆக உயர்த்தி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. கல்லூரி, தொழிற் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு, விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் ரூ.197.50 ஆக இருந்ததை இன்றையதினம் ரூ.400/- ஆக உயர்த்தி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதுமட்டுமல்ல. அகில இந்தியப் பணிக்குப் படிக்கின்ற மாணவர்களுக்கு ரூ.400/- ஆக இருந்ததை ரூ.500/- ஆக உயர்த்தி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). விடுதிகளைத் தனியாரிடம் கொடுத்தால் உணவின் தரம் குறையும் என்று சொல்கிறார்கள். 25 விடுதிகள் மட்டும்தான், அதிலும் கல்லூரி விடுதிகளை மட்டும்தான் ஒரு முன்மாதிரியாக—ஆதிதிராவிட நலத் துறை விடுதிகளில் உள்ள பல விடுதிகளில் குறைபாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன; அதை நிவர்த்தி செய்வதற்காக—தற்காலிகமாக அரசின் சார்பாக தனியாரிடம் அவற்றை ஒப்படைத்து இருக்கின்றோம். 25 விடுதிகள் அல்ல; 19 விடுதிகள். மாணவர்களுக்குத் தரமான உணவை அவர்கள் தயார் செய்து கொடுக்கின்றார்கள் என்று அவர்கள் சொல்கின்றார்கள்; மாணவர்களும்

மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள். ஆகவே அவை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-05*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு சிறிது அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஏழையெளிய மக்களுக்கும் இந்திரா நிவாஸ் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஆனால் அந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு எந்தவிதமான நிதியும் கிடையாது. எனவே TAHDCO மூலமாக அந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு நிதியொதுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்தபடியாக தீண்டாமை ஒழிப்பு பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. தீண்டாமை ஒழிப்பு பற்றி சொல்கின்றபோது, தீண்டாமை எந்த வடிவில் இருக்கிறது என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டும். நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பல முறை சொல்லியிருக்கிறேன். இந்த நாட்டிலே இரட்டை tumbler-கள் இருக்கின்றன; இரட்டை சுடுகாடுகள் இருக்கின்றன. கோயிலுக்கு உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை என்று சொல்லியிருக்கிறேன். இன்னும் நூற்றுக்கணக்கான கிராமங்களிலே இரட்டை tumbler முறை இருக்கிறது. அவ்வாறு இருந்தால் அவற்றை criminal குற்றங்களாகக் கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, இன்னும் அங்கே மெத்தனப்போக்கைக் காட்டுவது சரியானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே கொத்தடிமைகள் 10 இலட்சத்திற்கும் மேலே இருப்பதாக, உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி அமைக்கப்பட்ட Commission சொல்லியிருக்கின்றது. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட கொத்தடிமைகளிலே தோட்டத் தொழிலாளர்களும் அடங்குவார்கள். இன்னும் சொல்லப்போனால், தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமையிலும் கொத்தடிமைகளாக நடத்தப்படக்கூடிய ஒரு அவலமான நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கான Scheduled Tribes status



கொடுத்து, எல்லாவிதமான சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமத்துவபுரத்தைப் பற்றிச், சொல்லுகின்றபோது, ஊருக்கு ஒதுக்குப்புறமான, பிரதான சாலையிலிருந்து 5 கிலோமீட்டருக்கு அப்பாலே நாம் கட்டுகின்றோம். அவ்வாறு கட்டுகின்றபோது அந்த மக்களுக்கு உண்டான பொருளாதாரம் அந்தக் கிராமத்திலே இல்லாமல் இருக்கிறது. இன்னும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் கிடையாது, சுயப் பொருளாதாரம் கிடையாது; கல்வி, வேலை வாய்ப்பிலே முழுமையான வாய்ப்பு இல்லாதபோது வெறும் 150, 200 பேர்கள் இருக்கக்கூடிய இடத்திலே தங்க வைப்பதால் மட்டுமே சமத்துவம் *(மணியடிக்கப்பெற்றது)* ஏற்படாது.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரங்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக கட்டப்பட்டு வருவதாகச் சொல்கின்றார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். தமிழ்நாடு முழுவதும்—கடந்த 3 ஆண்டுகளிலும்—மொத்தம் 100 சமத்துவபுரங்களை இரண்டாண்டுகளில் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 35 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். இந்த ஆண்டுகூட 17.50 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். 10 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. கட்டப்பட்ட இடங்களை, காஞ்சிபுரத்தில் பாருங்கள், மதுரையில் பாருங்கள், சிவகங்கையில் பாருங்கள், ஏன் திருநெல்வேலிக்குச் சென்று அங்கே பார்க்கும்போது, சிறப்பான இடத்தில் அந்த வீடுகளைக் கட்டுவதற்குரிய இடங்களைத் தேர்வு செய்வதில் மாவட்ட ஆட்சியாளர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, தொகுப்பு வீடுகளைப் போன்று இல்லாமல், எல்லோரும் பாராட்டுகின்ற அளவிற்கு, நல்லவர்கள் பாராட்டுகின்ற அளவிற்கு, பத்திரிகையாளர்கள் பாராட்டுகின்ற அளவிற்கு, மனந்திறந்து பாராட்டுகின்ற அளவிற்கு அமைந்திருக்கிறது. எனவே இந்தச் சமத்துவபுரத்தை, நீங்களும் பாராட்ட வேண்டுமென்று இந்தநேரத்திலே. தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்குப்புறம் என்று சொல்லவில்லை. பிரதான சாலையிலேயிருந்து ஊருக்குள்ளேயிருந்து 3 கிலோமீட்டர், 4 கிலோமீட்டர் அப்பால் கட்டுகிறோம். ஆனால் அந்த மக்கள் வாழ

என்ன பொருளாதாரம் இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி? கூலி வேலை செய்து பிழைப்பதற்குக்கூட வாய்ப்பில்லாமல் அவர்களை அங்கே வைக்கிறோம். அவர்கள் வாழ்க்கை வாழ்வதற்கு என்ன பொருளாதாரம் இருக்கிறது? What is the economic background? என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, ஒதுக்குப்புறம் என்று சொல்வது வேறு நோக்கத்தோடு அல்ல. அவர்கள் வாழ்வதற்கு வழியில்லாமல், 5 கிலோமீட்டருக்கு அப்பாலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்னும்போது. இவர்கள் வேலை செய்து பிழைப்பதற்கு என்ன வழியை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறோம் ....

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பது மட்டுமல்ல, வீடு கட்டி அந்த மக்களைக் குடியிருக்க வைத்து, அவர்களுடைய தொழில், பொருளாதார மேன்மைக்காகக் கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்கின்றோம். அவர்கள் என்ன தொழிலை விரும்புகிறார்களோ, அதற்கேற்றபடி வங்கிகளிலிருந்து கடன் பெற்றுத் தருவதற்கு ஆட்சியாளர்கள் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே சமத்துவபுரத்தில் குடியிருக்கின்ற அத்தனைத் தரப்பு மக்களும் மிகவும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கின்றார்கள் என்பதையும், பொருளாதார மேம்பாடு அடைவதற்குரிய அத்தனை முயற்சிகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக சமத்துவபுரங்கள் சாதி, சமயமற்ற சமுதாயத்தினைப் படைப்பதற்காகக் கட்டப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் கடந்த 2000 ஆண்டுகளில் இந்தத் தமிழ்ச் சமுதாயம் மட்டுமல்ல, இந்திய சமுதாயமே துண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டிலே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற நிலை உருவாவதற்குக் காரணமாக இருந்தது சனாதனம். எனவே அந்த சனாதனம் என்று வீழ்த்தப்படுகிறதோ, அன்றுதான் சாதி, சமயமற்ற சமுதாயம் அமைக்கப்படும். எனவே சமத்துவபுரங்களினால் சாதி, சமயமற்ற சமுதாயத்தைப் படைக்க முடியாது. அது சாதி, சனாதனத்தை மறைப்பதற்குத்தான் பயன்படுமே தவிர, அதை ஒழிப்பதற்குப் பயன்படாது. என்று சனாதனம் ஒழிக்கப்படுகிறதோ அன்றுதான் சாதி, சமயமற்ற சமுதாயம் மலரும். மேலும் தாழ்த்தப்பட்ட



மக்களுக்கும், ஏழையெளிய மக்களுக்கும் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். பொருளாதார நிலை உயர வேண்டும், கல்வி உயர வேண்டும். அப்போதுதான் உண்மையான சமத்துவம் மலரும். அதற்குண்டான வகையிலே நிலங்களைப் பகிர்ந்தளியுங்கள்; பொருளாதாரத்தைச் சமமாகக் கொடுங்கள். Budget போடுகின்றபோது தாழ்த்தப்பட்ட மக்களுடைய பங்கீட்டை 20 சதவீதமாகக் கொடுங்கள், வேலைவாய்ப்பிலே 20 சதவீதத்தைக் கொடுங்கள் என்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சந்திரசேகரன்.

***திரு. சி. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானியத்தில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகில் மனிதன் பிறந்து வாழ்கின்றான். அப்படி மலைப்பகுதியில் பிறந்து வாழ்கின்ற மனிதன் தன்னுடைய அடிப்படை வசதிகளைச் செய்து கொள்வதிலும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் அவன் மிகவும் சிரமப்படுகின்றான். இதுபோன்ற மலைவாழ்ப்பகுதியில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் வாழ்க்கையில் உயர வேண்டும் என்பதை உணர்ந்த தாயுள்ளம் கொண்ட நம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மலைவாழ் மக்களை சமுதாயத்தில் உயர்த்திக் காட்ட வேண்டும் என்பதை உணர்ந்து அரசு மூலமாக பல்வேறு சலுகைகளை வழங்கியிருக்கின்றார்கள். 100% இட ஒதுக்கீட்டில் 19% ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு வழங்கி அதில் ஒரு சதவீதம் மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கி பயன்பெற வைத்துக்கொண்டிருப்பவர் நம் முதல்வர் அவர்கள்தான். அதேபோல் TAHDCO கடன் வழங்கும் திட்டத்தில் மலைவாழ் மக்களுக்கும் கடன் வழங்கும் திட்டத்தை உருவாக்கியவர் நம் முதல்வர் அவர்கள்தான். மேலும் ration கடை அமைப்பதிலும் சலுகைகள், சாலைப் பணியாளர்கள் பணியமர்த்துவதிலும், மலைப்பகுதியில் உள்ளவர்களையே பணியில் அமர்த்தி மலைவாழ் மக்களை வாழவைத்துக் கொண்டிருப்பவர் தாயுள்ளம் கொண்ட நம் முதல்வர் கலைஞர் அவர்கள்தான். மேலும் மலைவாழ் மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மூன்றாண்டுத்

திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக மூன்றாண்டுகளில் அனைத்து அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, கல்வி, மின்சார வசதி, வீட்டு வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க, திட்டங்களை உருவாக்கி மலைவாழ் மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினா மானியத்தில் எனது கருத்துக்களைத் தெரிவிக்கின்ற அதேநேரத்தில் எனது கருத்துக்களை ஏற்றுக்கொண்டு மலைவாழ் மக்களுக்குச் சலுகைகள் மேலும் வழங்கிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி: மலைவாழ் வகுப்பைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அமைந்துள்ள அனைத்துப் பள்ளிகளையும், மலைவாழ் மக்கள் உண்டு உறைவிடப் பள்ளியாக மாற்றியும், விடுதி வசதிகளையும் ஏற்படுத்திட வேண்டும்.

மலைப்பகுதியில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிடம் நிரப்பும் போது அந்தந்தப் பகுதியில் குடியிருக்கும் ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களையே நியமனம் செய்யவேண்டும்.

மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படித்தவர்களைக் கணக்கெடுத்து மலைப்பகுதியிலேயே ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நிறுவி பயிற்சி வழங்கிட வேண்டும். மலைவாழ் மக்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என தற்போதுள்ள அரசு வழிமுறையை மாற்றி மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பத்தாம் வகுப்பு தேர்சசி பெற்றிருந்தால் போதும் என அரசு விதிமுறையை மலைவாழ் மக்களுக்கு மாற்றிட வேண்டும்.

மலைப்பகுதிகளில் உள்ள அனைத்துப பள்ளிகளிலும் ஆசிரியர்கள் தங்குவதற்கு வசதியாக விடுதி அமைத்துக் கொடுக்க வேண்டும். மேலும் எனது தொகுதியில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதியில்



தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரசு கலைக் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கொல்லிமலையில் அமைந்துள்ள அரியூர், புதுவளவு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மலைவாழ் மக்கள் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள். எனவே அதனை மலைவாழ் மக்கள் உண்டு உறைவிடப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியாகவும் இந்த ஆண்டே நிலை உயர்த்தித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

முள்ளுக்குறிச்சி மலைவாழ் மக்கள் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து பெண்களுக்குத் தனியாகப் பள்ளி தொடங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

சாலை வசதி: மலைவாழ் மக்களுக்கு சாலை வசதி அமைப்பதில் மிகப் பெரும் பிரச்சினையாக இருப்பது வனத் துறைதான். எனவே மலைப்பகுதிக்கு சாலை வசதி அமைக்கும் திட்டங்களைச் செயல்படுத்தும்போது மத்திய அரசிடம் விரைந்து அனுமதி பெற்றுத்தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவிட வேண்டும். மலைப் பகுதியில் புதிய சாலை அமைத்து தார்ச் சாலையாக மாற்றும் திட்டத்தை மலைவாழ் மக்களுக்கென சாலை அமைக்கும் நெடுஞ்சாலைத் துறைக்குக் கொடுக்கலாம். அதேநேரத்தில் ஊராட்சி ஒன்றியம் மூலமாக மண் சாலையாக அமைக்கப்பட்டுள்ள சாலை, தார்ச் சாலையாக மாற்றப்பட மலைவாழ் மக்கள் சாலை மேம்பாட்டு நிதியை வழங்கலாம்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. சிவபுண்ணியம்) தலைமை]

கொல்லிமலையில், குளிவளவு, வளப்பூர் சாலை, தேனூர் பிரிவு, ஆளத்தூர் குண்டணிச் சாலை, வேளிக்காடு வரை பத்து கிலோ மீட்டர் மண் சாலையாக உள்ளதை, தார்ச் சாலையாகவும், தடுப்புச் சுவர் தாங்கும் சுவர் அமைக்கவும் கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்கித் தரவேண்டும். அதேபோல வலப்பூர், குளிவளவு சாலை, நட்டுகுழி பிரிவு, சுண்டக்காடு, தாம்பப்பாடி, செங்காடு வரை 7 கி.மீ. தார்ச்சாலை அமைக்க ஊராட்சி ஒன்றியத்திற்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கலாம்.

வனத் துறை அனுமதி பெற்று மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் நெடுஞ்சாலைத் துறை மூலமாக சேந்தமங்கலம் பள்ளம்பாறை சாலை முதல் வாழூர்பட்டி வரையிலும், பெரிய கொம்பை-பாலப்பட்டி முதல் வால்குழி-புளியம்பட்டி வரையிலும், முள்ளுக்குறிச்சி முதல் பூசனி சூழி வரையிலும், கொல்லிமலைக்கு மாற்று வழிச் சாலை அமைத்துத்தர வேண்டும். மேலும் கொல்லிமலைப் பகுதிக்குக் கூடுதலாக இந்த ஆண்டு சாலைப் பணியாளர்கள் பணியிடம் ஏற்படுத்தித் தரவேண்டும்.

*பிற்பகல் 12.15*

எனது தொகுதியில் அமைந்துள்ள புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் நல்ல நீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். பட்டணம் சீராப்பள்ளி-புதுச்சத்திரம் சேந்தமங்கலம் கூட்டுக குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்க சென்ற ஆண்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தொடங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் அமைந்துள்ள ஒத்தக்கடைப் பகுதிக்கும் ஆளத்தூர் நாடு, குண்டூணி நாடு கிராமப் பகுதிக்கும் மலைவாழ் மக்கள் வாழும் சமவெளிப பகுதியான முள்ளுக்குறிச்சியிலிருந்து, கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயில் வரைக்கும், மலைவாழ் மக்கள் சென்றுவர வசதியாக புதிய வழித்தடம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

மலையில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். கோடைக்காலங்களில் கூலி வேலை இல்லாத காரணத்தால் அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களுக்குச் சென்று தோட்டக் கூலித்தொழிலாளர்களாகவும் கொத்தடிமைகளாகவும் வேலை செய்து வருகிறார்கள். மேலும் பெண்கள் இதில் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே எனது தொகுதியில் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதியில் 14 ஊராட்சிகளிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தும், பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தும் சமவெளிப் பகுதிக்குப் பாலை எடுத்துவர வாகன வசதிகள் செய்து கொடுத்தும் நல்ல திட்டத்தைத் தீட்டி மலைவாழ் மக்களைக்



காப்பாற்றிட வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர், கிருஸ்தவ இன மக்களின் பொருளாதார வாழ்க்கையை மேம்பாடு செய்ய, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு ஆணையர் மூலமாக செயல்படுத்த உள்ள கறவை மாடுகள் வாங்கும் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ.81.50 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தில் மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.25 இலட்சத்தை மலைவாழ் மக்களுக்கென ஒதுக்கித்தர வேண்டும். குறிப்பாக கொல்லிமலைப் பகுதிக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் மலைவாழ் மக்களுக்கு தோட்டக்கலைத் துறை மூலமாக வழங்கப்படும் செடிகளான சில்வர் ஓக், மிளகு, பலா, கொய்யா போன்ற பயிர் வகைகளை, மக்கள் வளர்க்க வசதியாக மழைக் காலங்களான ஜூன், ஜூலை மாதங்களில் வழங்கிட வேண்டும். செடி வளர்க்க மானியமாக அதிக நிதியை ஒதுக்கித்தர வேண்டும்.

மேலும் எனது தொகுதியில் நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கார்கூடல்பட்டி ஊராட்சி, முள்ளுக்குறிச்சி ஊராட்சி, நாரைக்கிணறு ஊராட்சி, பொப்பஞ்சோலை ஊராட்சி, கரியாம்பட்டி ஊராட்சி போன்ற ஊராட்சிகளில் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அப்பகுதி மக்கள் பொருளாதார வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய மலையாளப்பட்டியில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்—LAMP Society—அமைக்க அரசு இசைவு தெரிவித்துள்ளது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு சங்கம் விரைவில் தொடங்க அரசு மானியம் வழங்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கொல்லிமலைவாழ் மக்கள் நலன் கருதியும், மகளிர் சிறு வணிகக் கடன் பெற வசதியாகவும் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளையை கொல்லிமலைப் பகுதியில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

கொல்லிமலையில் மலைவாழ் விவசாயிகள் pumpset அமைத்து பயன் பெறவும், குடிநீர் நல்ல முறையில் விநியோகம் செய்யவும், தெரு விளக்குகள் சரிவர எரியவும், மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் கொல்லிமலைப் பகுதியில் துணைமின் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும். மேலும் மின்சார வசதி செய்துதர கொல்லிமலைப் பகுதிக்கு மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதியில் அதிக நிதி ஒதுக்கித்தர வேண்டும்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கொல்லிமலைப் பகுதியில் அமைந்துள்ள வலப்பூர்நாடு ஊராட்சியை நான் தேர்வு செய்துள்ளேன். எனவே மக்கள் தொகை அடிப்படை என்று காரணம் கொள்ளாமல் அந்த ஊராட்சிக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர கூடுதலாக நிதி ஒதுக்கித்தர வேண்டும்.

கொல்லிமலையில் அமைந்துள்ள அறப்பளீஸ்வரர் ஆலயம் மற்றும் ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் பேர் வந்து செல்கிறார்கள். ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிக்குச் செல்ல சாலை வசதி இல்லாததால் சுற்றுலாப் பயணிகள் நடந்து சென்று சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே மத்திய அரசிடம் வனத் துறை அனுமதி பெற்று சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கி வரும் பையில்நாடு ஊராட்சிக்கு உட்பட்ட கீழ்செங்காட்டுப்பட்டி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காட்டுக்கொட்டாய் பகுதியில் சுமார் 1000 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் கிராமம் சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளது. அவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் செல்லவும், வாக்குகள் செலுத்தச் செல்லவும் 45 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே பையில்நாடு ஊராட்சியிலிருந்து கீழ்செங்காட்டுப்பட்டியைத் தனியாகப் பிரித்து அதனைத் தலைமையிடமாகக் கொண்டு தனி ஊராட்சி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

மேலும் கொல்லிமலையில், நாமக்கல் வட்ட அலுவலகத்தில் 7 ஊராட்சிகளும், ராசிபுரம் வட்ட அலுவலகத்தில் 7 ஊராட்சிகளும் அமைந்துள்ளன. வட்ட அலுவலகங்களுக்குச் செல்வது என்று சொன்னால் சுமார் 75 கிலோ மீட்டர் தூரம் மக்கள் சென்றுவர வேண்டியிருக்கிறது. எனவே மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.



கொல்லிமலை மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை அங்கே தனி வட்டம் வேண்டும் என்பதுதான். எனவே ராசிபுரம் வட்டம், நாமக்கல் வட்டம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கொல்லிமலை, செம்மேடைத் தலைமையிடமாகக் கொண்ட தனி வட்டமாக உயர்த்தித் தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1975ஆம் ஆண்டு கொல்லிமலைக்கு வருகை தந்து, கடையேழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்கு விழா எடுத்து அங்கே இருக்கின்ற மக்களை எல்லாம் பார்த்திருக்கிறார்கள்.

நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலைவாழ் மக்கள் சிரமப்படுவதை நன்கு உணர்ந்தவர்கள். எனவே இந்த ஆண்டே கொல்லிமலையைத் தனி வட்டமாக உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கொல்லிமலை ஒரு சிறந்த கோடை வாசஸ்தலம். அது நாமக்கல் மாவட்டத்தினுடைய சிறப்பானதொரு இடமாகக் கருதப்படுகிறது. எனவே அங்கே ஓர் ஏரி அமைத்து, படகுத் துறை அமைத்துத்தரவும், அதேபோல சிறிய பூங்காக்களை அமைத்துத் தரவும் சுற்றுலாத் துறையின் மூலமாக போதிய நிதியை ஒதுக்கித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக நிலம் எடுத்து, பட்டா வழங்குகிற திட்டம் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் இருந்துகொண்டிருக்கிறது. இனிவரும் காலங்களில் மலைவாழ் மக்களுக்கும், நிலம் தேர்வு செய்து அவர்களுக்கும் பட்டா வழங்குகிற ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். மேலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசுத் துறை அலுவலர்களை வைத்தும், மாண்புமிகு அமைச்சர்களை வைத்தும் கொடைக்கானல், ஏற்காடு போன்ற பகுதிகளிலே மலைவாழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை உணருவதற்குக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களிலே பேசியவர்கள் மரப்பொந்துகளிலும், கல் சந்துகளிலும் மக்கள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். எனவே மலைவாழ் மக்கள் எங்கெல்லாம் மரப்பொந்துகளிலும், பாறைப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள் என்பதை அறிய ஓர் ஆய்வு செய்து, அவர்களுக்கு 'பெரியார் சமத்துவபுரம்' போன்று நிரந்தர வீடுகளை

அமைத்துத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் S.T. மக்களுக்கு ஒரு சதவிகித இடஒதுக்கீடு உள்ளது. அவர்கள் வாழ்க்கையில் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். எனவே அதை மூன்று சதவிகிதமாக உயர்த்தித்தர வேண்டும். அதேபோல தமிழ்நாட்டிலேயிருந்து, மலைவாழ் சமூகத்தைச் சேர்ந்த இராஜ்ய சபா உறுப்பினர்கள் எவரும் இல்லை. எனவே இராஜ்ய சபாவிற்கு ஓர் இடம் ஒதுக்கித் தந்தும், பாராளுமன்றத்திற்கு ஓர் இடம் ஒதுக்கித் தந்தும் மலைவாழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டு, இந்த மானியத்தில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *1999-2000* ஆண்டினுடைய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து' என்று சொல்லக்கூடிய வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களும் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்தாக வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்தினுடைய அடிப்படையிலே—இன்று ஆதிதிராவிட மக்கள், பொருளாதார ரீதியாக, கல்வி ரீதியாக, சமூக ரீதியாகப் பின்தங்கியிருக்கிறார்கள். ஆகவே—அவர்களுக்கும் எல்லாத் திட்டங்களையும் வழங்க வேண்டுமென்று சொல்லி, இந்தத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை மனதார நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிட மக்கள் கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வேலைவாய்ப்பிலும் பின்தங்கியிருக்கின்ற நிலைமையைக் கருத்தில்கொண்டு, ஆதிதிராவிட நலத் துறையிலே எவ்வளவு பேர் வேலைவாய்ப்பிலே பங்கேற்றிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டறிவதற்காக ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த அந்த உயர்மட்டக் குழு ஆதிதிராவிடர்கள் வேலைவாய்ப்பில் எவ்வளவு சதவிகிதம்



பங்கேற்றிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டறிந்து, அதை நிறைவு செய்வதாகவும், அதை இந்தக் கூட்டத்தொடரிலேயே அறிவிப்பதாகவும் சொல்லியிருப்பதை உள்ளபடியே நாங்கள் மனதார வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். அதேநேரத்தில் ஆதிதிராவிட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய *18* சதவிகிதம் மற்றும் பழங்குடியினருக்கு *1* சதவிகிதம் ஆக *19* சதவிகிதம், எங்கெங்கெல்லாம் காலியாக இருக்கிறதோ அந்தக் காலியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே தென் மாவட்டங்களிலே சாதிக் கலவரம் ஏற்பட்ட நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்துக் கட்சியினரையும், அனைத்து சமுதாயத் தலைவர்களையெல்லாம் அழைத்து, ஒரு நல்ல காரியத்தைச் செய்தார்கள். தென்மாவட்டங்களிலே பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த அந்த முயற்சிக்கு எங்களுடைய கட்சியின் சார்பிலே, எங்களுடைய கட்சி நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் பெரிதும் ஒத்துழைத்தார்கள். அதேநேரத்தில் அதற்கு முத்தாரம் வைக்கக்கூடிய வகையிலேதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டை தீண்டாமை ஒழிப்பு ஆண்டாக அறிவித்து, மத நல்லிணக்கம் ஏற்படக்கூடிய வகையிலே எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். அந்த முயற்சிக்கு ஆக்கபூர்வமாக நாங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்ற வகையிலேயும், அந்தக் கருத்துக்கு வலு சேர்க்கக்கூடிய வகையிலேயும் எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அனைத்து சமுதாயத் தலைவர்கள், சமயப் பெரியவர்களையெல்லாம் அழைத்து நாங்கள் மாவட்டந்தோறும் மாநாடுகளை நடத்தினோம். அனைத்து சமய, சமுதாய நல்லிணக்க மாநாடு என்று சொல்லி, பேரணிகளையும், மாநாடுகளையும் நடத்தி, அதிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர்களையெல்லாம் அழைத்து, அங்கே பேச வைத்தோம். அவ்வாறு பேசுகின்றபொழுதுகூட ஒரு வார்த்தைகூட கட்சியைப்பற்றி, அரசியலைப்பற்றிப் பேசக்கூடாது என்று நிபந்தனை எல்லாம் விதித்து முதலமைச்சருடைய அந்தக் கொள்கைக்கு வலு சேர்க்க வேண்டும், இது நாட்டு மக்கள் மத்தியிலே பரவ வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்தோம். அத்தகைய மாநாடுகளுக்குக் கிராமப் புறங்களிலேயிருந்து வருகிற மக்களிடத்திலே அந்த எண்ணத்தை, நல்லிணக்க உணர்வை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவும் மனித நேயத்தை வளர்க்க வேண்டும், சகோதரத்துவ மனப்பான்மையோடு

வாழ வேண்டும் என்பதற்காகவும் அந்தக் காரியத்தைச் செய்தோம். ஆகவே இப்படி அந்த உணர்வுகளை ஏற்படுத்திய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களிலே சாதிக் கலவரங்கள் ஒழிக்கப்பட வேண்டும், அதேநேரத்திலே அவர்களை சமூக ரீதியாக கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு,

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்று சொன்ன வள்ளுவருடைய உயர்ந்த நோக்கத்திற்கொப்ப இப்போது தென் மாவட்ட மக்களினுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஆணையம் கண்டிருப்பதை நாங்கள் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த ஆணையம் செவ்வனே செயலாற்றுவதற்கு ஆக்கபூர்வமான பணிகளை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்பி மீண்டும் நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லா மக்களும் சமத்துவ நோக்கத்திலே வாழ வேண்டும் என்று சொல்லி சமத்துவபுரம் கண்டார்கள். அதையும் பெரிதும் வரவேற்கிற நேரத்தில் அந்த சமத்துவபுரத்திற்கு தந்தை பெரியார் பெயரை வைத்தது சாலப் பொருத்தமுடையதாக இருக்கிறது என்பதைச் சொல்லி பெரிதும் பாராட்டுகிறோம்.

*பிற்பகல் 12-25*

தாழ்த்தப்பட்ட மக்களை தாழ்த்தப்பட்டவர்கள் எனச் சொல்வதைவிட அவர்களை ஆதிதிராவிடர்கள் என்று சொல்கிறோம். அதிலேகூட ஒரு சிறிய திருத்தம் கொண்டுவர வேண்டும் என்கிற என்னுடைய தாழ்மையான கருத்தை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாடு. கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களை எல்லாம் ஒருங்கிணைத்துச் சொல்லும்போது திராவிடம் என்று சொல்கிறோம்; திராவிட நாடு என்று சொல்கிறோம். இப்படி நாம் சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட கர்நாடகத்திலே இருக்கக்கூடியவர்களை ஆதிகர்நாடகர்கள் என்று சொல்கிறார்கள்; ஆந்திரத்திலே இருக்கக்கூடியவர்களை ஆதிஆந்திரர்கள் என்று சொல்கிறார்கள்; கேரளாவிலே இருக்கக்கூடியவர்களை ஆதிமலையாளிகள் என்று சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் நம்மைப் புறக்கணித்துவிட்டு, அப்படிச் சொல்கிற நேரத்திலே தமிழ்நாட்டின் மூத்தகுடிகளாகத்



தொன்றுதொட்டு வாழக்கூடியவர்கள் என்ற அந்தப் பெருமையைச் சேர்க்கக்கூடிய வகையிலே ஆதிதிராவிடர் என்று சொல்வதைவிட ஆதிதமிழர் என்று சொல்வது சாலப் பொருத்தமுடையதாக இருக்கும் என்ற என்னுடைய தனிப்பட்ட கருத்தை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவது பொருத்தமுடையதாக இருக்காது என்று சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்களே அதை மாற்றியமைத்ததைப் பெருமையோடு நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது எங்கு பார்த்தாலும் தீண்டாமைக் கொடுமை இருக்கிறது. அந்தத் தீண்டாமை ஒழிப்புக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி வலு சேர்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மீண்டும் முக்கியத்துவம் வழங்கக்கூடிய வகையிலேதான் எங்களுடைய இயக்க நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள், எங்கள் கட்சி ஆட்சிக்கு வரும் என்று சொன்னால் முதலாவதாக ஓர் ஆதிதிராவிடரை முதலமைச்சர் ஆக்குவோம் என்று சொன்னார்கள். மாநில அளவில் எங்கள் கட்சி ஆட்சிக்கு வராத போதுகூட மத்திய அரசிலே பங்கு ஏற்கக்கூடிய நிலையிலே எங்கள் கட்சிக்கு முதலாவதாக மத்திய அமைச்சர் பதவி கிடைத்தபோது ஓர் ஆதிதிராவிடருக்குத்தான் அதைக் கொடுத்திருக்கிறோம். மேலும் எங்கள் கட்சியிலேகூட பொதுச் செயலாளர் என்ற பதவியும் கொடுத்திருக்கிறோம் என்ற அந்தப் பெருமையையும் இந்தநேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குடிதாங்கி என்ற கிராமத்திலே ஓர் ஆதிதிராவிடர் இறந்துவிட்டார்; அவருடைய சடலத்தை மற்ற இனத்து மக்கள் எல்லாம் வாழக்கூடிய பகுதி வழியாக எடுத்துச் செல்ல வேண்டும்; ஆனால் இரண்டு நாட்களாக அந்தப் பிணத்தை எடுத்துச் செல்ல முடியாமல் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலேகூட எங்களுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள், வன்னியர்கள் மற்றுமுள்ள மக்களுடைய எதிர்ப்பை எல்லாம் தாண்டி அந்தப் பிணத்தை தன்னுடைய தோளிலே சுமந்து எடுத்துச் சென்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்திற்கு வலு சேர்க்கக்கூடிய வகையிலே பாட்டாளி மக்கள் கட்சி ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், சிறுபான்மையின மக்களுடைய ஒற்றுமைக்காக முதலமைச்சர்

எடுக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பாக இருக்கும் என்ற வாக்குறுதியை சொல்லிக்கொள்கிறேன். கடைசியாக ஒன்றே ஒன்று. எங்களுடைய சேலம், தருமபுரி மாவட்டங்களிலே போயர், லம்பாடி போன்ற இனங்கள் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் மிகவும் பின்தங்கிய பட்டியலிலே இருக்கிறார்கள். கர்நாடகம் மற்றும் ஆந்திரத்திலே அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்குள் அங்கே திருமண உறவு இருக்கிறது. இப்படி நெருக்கமாக இருக்கக்கூடிய லம்பாடி மற்றும் போயர் இனத்தவர்களை மீண்டும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து குறிச்சான் சமுதாயத்திற்கு.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே 3 நிமிடங்கள்தான் தங்களுக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால் 7 நிமிடங்கள் ஆகிவிட்டன, உட்காருங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டு சுமார் 75 கோடி ரூபாய் இந்தத் துறைக்காக அதிகம் அளித்த இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கழக அரசு பொறுப்பேற்ற ஒவ்வொரு காலகட்டத்திலும், ஆதிதிராவிட மக்களுக்குப் பொற்காலமாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

TAHDCO மூலம் ஆதிதிராவிட மக்களுக்கும், இளைஞர்களுக்கும் கடனுதவி வழங்கி, அவர்களைப் பொருளாதாரத்திலே மேம்பாடு அடையச் செய்ய இந்தத் துறையின் மூலம் வழங்கி வரும் கடனை இன்னும் அதிகப்படுத்தித் தந்து, அவர்களுக்கு உதவிகரமாக இருக்க



வேண்டுமென்றும் கடன வழங்குகிற முறையை எளிதாகக வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிற்றூராட்சியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் பேரூராட்சியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கிடையாது. அதேபோல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் கிடைக்காத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைப் போக்க, பேரூராட்சியில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டப்பட வேண்டும் என்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களும், தனி வட்டாட்சியர்களும் மற்றும் வருவாய் அலுவலர்களும் ஆதிதிராவிட நலத் துறைக்கு, வருவாய்த் துறை மூலம் நியமிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் வருடத்திற்கு ஓர் இடத்தில் பணிபுரிகிறார்கள். அந்த வருடம் முடிந்த பிறகு, அடுத்த வருடத்தில் பணி மாறுதல் செய்யப்படப் போகிறோம் என்ற காரணத்தினால், அவர்கள் தங்கள் பணியிலே கவனத்தை அதிகமாகச் செலுத்தாத நிலை உள்ளது. எனவே துறையினுடைய பணிகள் மிகவும் தொய்வு அடைகிற நிலையைப் போக்க அரசு, தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் நேரடியாக இத்துறைக்குப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 3 வட்டங்களுக்கு ஒரு தனி வட்டாட்சியர் நியமிக்கப்படுகிறார். அப்படி இருக்கும்போது, அவர் ஒரு நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே நடைபெறும் மனுநீதி நாளுக்குச் சென்று விடுகிறார். மீதியுள்ள 4 நாட்களில், அந்த 3 வட்டங்கள் உள்ளடங்கிய பகுதிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் மனுநீதி நாள் அல்லது மாவட்ட ஆட்சியர் மனுநீதி நாள் நடக்கின்ற நிகழ்ச்சிக்குச் சென்று விடுவார். அவருடைய அலுவலகத்திற்குச் சென்றால், தனி வட்டாட்சியரைப் பார்ப்பதற்குக் கடினமாக இருக்கிறது. அதனால் பொதுமக்கள் அலைகிறார்கள். அதிலும் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் எல்லாம் ஏழை மக்களாக இருக்கிற காரணத்தினால், அவர்கள் கூலி வேலையை விட்டுவிட்டு அவர்களுடைய பட்டா சம்பந்தமாகவோ,

அல்லது கடனுதவி பெறுவதற்காகவோ அலுவலகத்திற்குச் சென்று அவர்களைப் பார்க்க முடியாமல், இருப்பது உள்ளபடியே கவலைக்குரிய விஷயமாக இருக்கிறது. அந்த நிலையைப் போக்க, இரண்டு வட்டங்களுக்கு ஒரு தனி வட்டாட்சியர் நியமிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அங்கே எந்தவொரு அலுவலகத்திற்கும் தொலைபேசி இணைப்புகூட இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் போக்க ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு தொலைபேசி இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் என்னுடைய காங்கேயம் பகுதியில் உள்ள தனி வட்டாட்சியருக்கு கடந்த ஆண்டு ஓர் ஈப்பு வழங்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஆவன செய்து. இப்போது அவருக்கு ஈப்பு வழங்கப்பட்டு, பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்காக தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியான வெள்ளக்கோவிலில், இந்த ஆண்டு பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் வெள்ளக்கோவில் தொகுதியில், ஆதிதிராவிட மாணவியருக்கு விடுதி ஒன்று ஏற்படுத்தித்தர வேண்டுமென்றும், எனது தொகுதிக்குட்பட்ட மூலனூரில் தனித் தனி விடுதி அமைத்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எனது தொகுதியில் ஆதிதிராவிட மக்கள் சரிபாதி வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. அதற்காக நான் அரசு அலுவலர்களையும் மாவட்ட ஆட்சியரையும் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறேன். அதுவும் குறிப்பாக ஒரே வீட்டில் 3 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையை எல்லாம் போக்க, அந்த ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை விரைவாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஈரோடு மாவட்டத்தில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் நிலம் கையகப்படுத்தப்படவில்லை. சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்கிற நேரத்திலே நில உரிமையாளர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்று விடுவதால், பட்டா வழங்குகிற நிகழ்ச்சி



காலதாமதமாகிறது. இதைத் துரிதப்படுத்தி, நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கீழ்க்காணும் இடங்களில் வசித்துக் கொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு, நிலங்களைக் கையகப்படுத்தி பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டு, அந்த இடங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்:

என்னுடைய தொகுதியில் காங்கேயம் வட்டத்தில் வேலம்பாளையம் வருவாய் கிராமத்திற்குட்பட்ட வேலம்பாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு க.ச. எண் 184 என்கிற நிலத்தைக் கையகப்படுத்தி பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலம்பாளையம் வருவாய் கிராமத்தில், ந. கறையூரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பளியம்பட்டி வருவாய் கிராமத்தில் க.ச எண் 819 நிலத்தைக் கையகப்படுத்தி, அப்பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்கோவில் வருவாய் கிராமத்தில் 33/1 எண் உள்ள நிலம் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்பே கையகப்படுத்தப்பட்டும் இன்னும் அதற்குரிய இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அதையும் விரைவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

மேட்டுப்பாளையம் க.ச. எண் 1112 என்ற எண்ணில் நிலம் கையகப்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு அதுவும் தடைபட்டுள்ளது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, இராசாபாவலசில குளவிபாளையம் என்ற ஊரில் நிலத்தை கையகப்படுத்தி அங்கே மக்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நில உரிமையாளர்களுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. அதேபோல பட்டா வழங்கப்பட்ட மக்களும் அந்த இடத்திற்குக் குடி போகாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நில உரிமையாளர்களுக்கு அதற்குண்டான தொகையை வழங்கிடவும் பட்டா பெற்றவர்கள் அந்த இடத்தில் குடியேறவும் ஆவன முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலக்குமநாயக்கன்பட்டியில் க.ச.எண் 235/2 மற்றும் 245-பி.1 என்ற இடத்தை கையகப்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சாபாளையம் கிராமம் க.ச.எண் 800/3-ல் நிலம் கையகப்படுத்துவதற்காக முயற்சி எடுத்த நேரத்திலே உரிமையாளர்கள் வழக்குமன்றத்திற்குச சென்றுவிட்டார்கள். ஆனால் 797/2பி என்கின்ற இடத்தை பட்டா வழங்குவதற்குத் தர முன்வந்திருக்கிறார்கள். அதனால் அந்த இடத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்கோவில் வருவாய் கிராமத்தில 194/ஏ மற்றும் 194/பி2 என்ற இடத்தை கையகப்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உத்தமபாளையம் மற்றும் வேலம்பாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்கள் மயானத்திற்கான இடம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல வீட்டு மனைப் பட்டாவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

குருமனவலசு கிராமம், செல்வகுமரன் வலசில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டாவும் இல்லை. அதேபோல மயானத்திற்கும் இடமில்லை. எனவே அதையும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னமுத்தூர், வேலாயுதபாளையம் சர்வே எண் 175 மற்றும் 176 என்ற இடத்தை கையகப்படுத்தி பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேனாயூர் கிராமம், சுந்தரபாண்டி வலசில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்கவேண்டும். அதேபோல எனது தொகுதிக்குட்பட்ட தாராபுரம் வட்டத்தில், தாரம்பாடி வருவாய் கிராமத்தில் நத்தபாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு 444/பி என்ற இடத்தை கையகப்படுத்தி பட்டா வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொப்பம்பட்டியில் யானைகவுண்டன் புதூரில் ஆதிதிராவிட மக்களுக்கு மயானம் இல்லை. அங்கே இடத்தை கையகப்படுத்தி பட்டா வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நஞ்சியம்பாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலாம்பாளையம் கருங்காலி வலசில் சர்வே எண் 1346/1 என்ற நிலத்தை கையகப்படுத்தி பட்டா வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொளத்துப்பாளையத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும். கொளத்துப்பாளையம் துலுக்கானூர், கொளத்துப்பாளையம் மூலனூர், கோட்டைமூலனூர் மற்றும் என். குமாரபாளையம், எல்லப்பட்டி மற்றும் பொன்னிவாடி கிராமம், எம். கம்பளியம்பட்டி, எரிசலம்பாளையம், எல்லம்பாளையம், அரிக்காரன் வலசு, மாம்பாடி ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கி என்னுடைய தொகுதி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர் கண்ட கனவை, மகாத்மா காந்தி கண்ட கனவை நனவாக்கிய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், இந்தச் சமுதாயம் முன்னேற வேண்டுமானால், பட்டிதொட்டிகளில் எல்லாம் பள்ளிகளைத் திறக்க வேண்டுமென்று சொல்லி அவர்கள் காலத்திலே திறந்தார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலேதான் தமிழக சட்டமன்றத்தில் காவல் துறை அமைச்சராக கக்கன்ஜி அவர்கள் சிறப்பாகப் பணியாற்றினார். சாகும்வரை கண்ணியமான ஒரு தலைவராக இந்தச் சமுதாயத்தில் பிறந்து வாழ்ந்து மக்களுக்காகத் தொண்டாற்றியவர் கக்கன்ஜி அவர்கள். கக்கன்ஜி அவர்களுக்குத் தமிழகத்தில் மணிமண்டபம் கட்டித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வழியிலே வந்த மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள்—மகாத்மா காந்தி, இந்தியத் திருநாட்டை, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த ஒருவர் ஆட்சி செய்ய வேண்டும், அந்த உயர் பதவியில் ஒருவரை அமர்த்த வேண்டுமென்று எண்ணியதை, நம்முடைய மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள் — அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்வி வந்தபோது, கே.ஆர். நாராயணன் என்று உறுதிபட, வெளிப்படையாகச் சொல்லி அவர்களையும்

ஜனாதிபதியாக்கிய பெருமை மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களையே சாரும் என்பதை இந்தநேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

ஆகவே ஆதிதிராவிட நலத் துறையிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். என்னுடைய இராதாபுரம் தொகுதியைச் சார்ந்த பரமேஸ்வரபுரம் பஞ்சாயத்து, நெல்லை மாவட்டத்தில் S.T. பிரிவினர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து. அந்தப் பஞ்சாயத்திலே தலைவராக இருக்கிற பாலகிருஷ்ணன் அவர்கள் S.T. பிரிவைச் சேர்ந்த காட்டு நாய்க்கர் வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய குடும்பத்தில் அவருடைய சித்தப்பா, அண்ணன், தம்பிகளுக்கு அந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று நெல்லை மாவட்டத்திற்கே ஒரே S.T. பஞ்சாயத்துத் தலைவராக இருக்கின்ற பரமேஸ்வரபுரம் பஞ்சாயத்துத் தலைவருக்கு அந்தச் சான்றிதழ் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அதைக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

அதேபோல் பனகுடியிலே நரிக்குறவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். அங்கே குறவர், குறவன் என்று பாகுபாடுபடுத்தி கண்ணியமாக குறவர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதில் தாமதப்படுத்துகின்றார்கள். ஆகவே அவர்களுடைய முன்னோர்கள், அவர்களுடைய அண்ணன்-தம்பிகள், உறவினர்கள் எல்லாம் தொன்றுதொட்டு வாங்கிக்கொண்டிருக்கின்ற அந்தச் சான்றிதழை தொடர்ந்து வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று S.C./S.T. துறையின்கீழ் தமிழகத்தில் 1,253 பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளுக்கு மொத்தமாக கிட்டத்தட்ட ஆண்டுக்கு 75 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகின்றது. இந்தப் பள்ளிகளில், தற்போது எல்லா மாணவர் மாணவியர்களும் சென்று பயிலுகின்ற ஒரு நிலை இன்று தமிழகத்திலே உருவாகியிருக்கிறது. ஆகவே இந்தப் பள்ளிகளை S.C./S.T. துறையின்மூலம் நடத்த வேண்டுமா என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கல்வி நிலையங்களையுமே கல்வித் துறையின்கீழ் கொண்டுவந்து மத்திய அரசு வழங்குகின்ற 75 கோடி ரூபாயை, இந்த மக்களுக்காக நல்ல திட்டங்களைச் செயல்படுத்த நீங்கள் செலவிடலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம் தற்போது எல்லா ஊர்களிலுமே



பள்ளிகள் இருக்கின்றன. எல்லா மாணவர்களும் பள்ளிகளில் சேர்கின்ற நிலை இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் சேரக் கூடாது என்ற நிலையெல்லாம் மாறிவிட்டது. ஆகவே இந்தப் பள்ளிகளுக்குப் பதிலாக மத்திய அரசு மூலம் வருகின்ற 75 கோடி ரூபாயைக்கொண்டு ஒரு தொழில்நுட்பப் பயிலகம் அல்லது பொறியியல் கல்லூரி போன்ற உயர் படிப்புகளுக்கான கல்லூரிகளை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தற்பொழுது வேலைவாய்ப்பு மிக அதிகமாகக் கிடைக்கின்ற கணினி படிப்பு, M.B.A. போன்ற உயர் படிப்புகளை தாழ்த்தப்பட்ட மக்களும் படிக்கின்ற வண்ணம் தனிக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். S.C./S.T. பள்ளிகளில் படிக்கின்ற 2 இலட்சத்து 38 ஆயிரம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளைப்போல பிற பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கும் சலுகைகளை வழங்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெண் குழந்தைகள் இடையூறின்றிப் படிப்பதற்கு, ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை படிக்கின்ற மாணவிகளுக்கு 500 ரூபாய் ஆண்டுதோறும் கொடுக்கப்படுவதை, எல்லா மாணவ, மாணவிகளுக்கும் வழங்க வேண்டும். குறிப்பாக 14 மாவட்டங்களில் படிக்கின்ற மாணவிகளுக்குத்தான் இந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. தென்மாவட்டங்களான நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி போன்ற பிற மாவட்டங்களுக்கும் இந்தச் சலுகைகளை அளிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இடைநிலை பணியிடத்தில் ஆசிரியர்கள் குறைவாக இருப்பதால், கடந்த ஆண்டு நம்முடைய அரசு 1,150 இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பணியிடங்களில் சேர்வதற்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தீர்கள். ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்றனர் அல்லது பணியிடங்கள் காலியாகி வருகின்றன. அந்தப் பணியிடங்களில் கிட்டத்தட்ட 2,000 பணியிடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தேவைப்படுவதால்—அந்தப் பணியிடத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாததால்—தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென்று ஐந்து தனி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் சமத்துவபுரமானது மிகச் சிறப்பான முறையில் எல்லா இடங்களிலேயும் கட்டி முடிக்கப்பட்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று மகிழ்ச்சியாக அங்கே மக்கள வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தொகுப்பு வீடுகள் என்று ஆதிதிராவிட மக்களுக்காகக் கட்டப்படுகின்ற காலனி வீடுகளையும் தற்போது சமத்துவபுரத்தில் இருப்பதைப்போன்று நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் எல்லா காலனி வீடுகளிலுமே தற்போது மின்விளக்கு வசதி இல்லை. அங்கே சாலை வசதி, மின்வசதியைக்கூட நிறுத்திவிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்கூட வந்தார்கள். அங்கே காலனி வீடுகளைத் திறந்தோம். அதேமாதிரி மாடபுரம் பஞ்சாயத்திலே காலனி வீடுகளைத் திறந்தோம்; விளக்கு கிடையாது என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மட்டும் 74,000 குடியிருப்புகளுக்கு மின்விளக்கு வசதி செய்து தந்திருக்கின்றோம். ஒவ்வோர் ஆண்டும் முதலமைச்சர் அவர்கள் எத்தனை வீடுகளைக் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்களோ அத்தனை வீடுகளுக்கும் மின் இணைப்பு தரப்படுகிறது.

*பிற்பகல் 12-45*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலனி வீடுகளைக் கட்டினாலும் அவற்றைத் திறப்பதற்கு முன்னால் மின் வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை நீங்கள் வழங்கவேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள் சமத்துவபுர வீடுகளைத் திறக்க வருவதற்கு முன்னால், அங்கே எல்லா வசதிகளையும் செய்வதுபோன்று காலனி வீடுகளுக்கும் அத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதோடு காலனி வீடுகள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கிய பின்பும் அங்கே நிலங்களைக் கையகபபடுத்துவதில் மிகப் பெரிய குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே சமத்துவபுரம் திட்டத்திற்கு பேச்சுவார்த்தை மூலம் விரைவாக நீங்கள் நிலத்தைக் கையகப்படுத்துவதைப்போன்று, ஆதிதிராவிடக் குடியிருப்புகள், காலனி வீடுகள் கட்டுவதற்கும் அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.



அதோடு நீங்கள் எல்லா மாவட்டங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சமத்துவபுர வீடுகளைக் கட்டுகின்றீர்கள். எல்லாச் சட்டமன்றத் தொகுதிக்கும், ஆண்டுக்கு ஒன்று என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும். என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் மிகச் சிறப்பான இடங்கள் இருக்கின்றன. காசி - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலே அருமையான இடங்களெல்லாம் இருக்கின்றன. நாங்களே வாங்கிக் கொடுக்கின்றோம். ஆகவே இந்த ஆண்டு இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு சமத்துவபுரத்தைக் கட்டித்தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 1979 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதமாக ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதாவது பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையால் 11-1-1979 ஆம் தேதி அன்று — மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் — ஓர் அலுவலகத்தில் பத்திற்கு மேற்பட்ட பணியிடங்கள் இருந்தால்தான் அங்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கை அமல்படுத்தப்படும் என்று ஓர் ஆணை இருப்பதாக அறிகிறேன். ஆகவே பத்திற்கும் குறைவான இடங்கள் இருந்தால்கூட இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்த வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் வீடுகள் கட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கழகம். ஆனால் தற்போது ஆதிதிராவிட காலனிகள் எல்லாம் ஒவ்வோர் ஒன்றியத்தின் மூலமும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் மூலமும் கட்டப்படுகின்றன. ஆகவே இவர்கள் கடன் வழங்குகின்ற பணியை மட்டும்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். மிகவும் வசதியானவர்கள் மட்டும்தான் அந்தக் கடன்களைப் பயன்படுத்துகின்றார்களே தவிர, சாதாரண மக்களுக்கு அந்தக் கடன்கள் சென்றடைவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட TAHDCO என்ற அந்த ஆணையம் தேவையா? நம்முடைய மாண்புமிகு கிருஷ்ணசாமி அவர்கள் அதை தாட்கோ வங்கியாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். TAHDCO-விலே அவர்களுக்கு மானியத்தைக் கொடுத்து நீங்கள் கடன் வழங்குங்கள் என்று வங்கிகளுக்கு அனுப்பிவிடுகின்றனர். ஆனால் வங்கிகளிலே கடன் பெறுவதற்கு அவர்கள் அலைகின்ற அலைச்சலைப் பார்த்தால் மிகக் கேவலமாகக்கூட இருக்கின்றது. அந்த அளவிற்கு வங்கிகளிலே உள்ளவர்கள் அவர்களை மனிதர்களாகக்கூட நினைக்கமாட்டேன்

என்கின்றனர். ஒன்று, TAHDCO வங்கிகளின்மூலம் அதைக் கொடுக்க வேண்டும் அல்லது TAHDCO, subsidy கொடுக்கின்றபோது, வங்கிகளிலிருந்து அந்தப் பணத்தைப் பெற்று ஒவ்வோராண்டும் அந்த மக்களுக்கு அரசு கொடுக்கின்ற நிதி சென்றடைய வேண்டும். தற்போது ஆதிதிராவிடர்களுக்கான தனி வட்டாட்சியர்கள் 80 பேர் தமிழகத்திலே இருக்கின்றார்கள். ஒரு வட்டத்திற்கு ஓர் ஆதிதிராவிட வட்டாட்சியர் இருக்க வேண்டும். அவர்களுக்கு அங்கே தொலைபேசி வசதி, வாகன வசதி போன்ற போக்குவரத்து வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து எல்லா கிராமங்களையும் சென்று பார்வையிட்டு, அந்த மக்களிடையே உண்மையான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

குறிப்பாக ஆதிதிராவிட மக்களை எடுத்துக்கொண்டோமேயானால், இன்று தமிழகத்திலே எங்கு சென்று பார்த்தாலும் மிகப் பெரிய நிறுவனங்களை அவர்கள் நடத்தவில்லை. தொழிலை நடத்துவோமா? தொழிலை நடத்த முடியுமா என்றளவில் நம்பிக்கையில்லாமல இருக்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். கல்வி ஸ்தாபனங்களை எடுத்துக்கொண்டால், ஒரு கல்வி ஸ்தாபனத்தைக்கூட அவர்களால் நடத்த முடியவில்லை. தற்போதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய ஜான்பாண்டியன் அவர்களுக்கு Physiotherapy College ஒன்றை ஆரம்பிக்க அனுமதி கொடுத்துள்ளார்கள். தமிழகத்திலேயிருக்கின்ற ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த முதல் கல்லூரி அதுதான் என்று நான் நினைக்கின்றேன். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வண்ணம், அரசினுடைய நிதியானது கொடுக்கப்பட்டு, அவர்களும் இந்தச் சமுதாயத்தில் தொழில் செய்கின்ற அளவில் ஊக்குவிக்க வேண்டுமென்று அன்போடுக் கேட்டுக்கொள்கிறேன். எனவே, நம்முடைய TAHDCO-வை மாற்றி, எல்லா வட்டங்களுக்கும் ஆதிதிராவிட தனி வட்டாட்சியர் மூலம் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம், ஜெய் ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வளர்ச்சியையும், சமத்துவத்தையும் அடிப்படையாகக்கொண்டு செயல்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி இம்மானியக் கோரிக்கையை உங்கள் முன்னால் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

*பிற்பகல் 12-50*

வாடிய முகத்துடன் வறுமைக்கோட்டின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கக்கூடிய அந்த மக்களை முன்னேற்றுவதற்காக கண்போல் காத்து நிற்கும் தமிழக முதல்வர் அவர்கள் 509 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பதை முதலில் நன்றியோடு கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆதிதிராவிடரும், அருந்தமிழ்ப் பழங்குடியினரும் ஓதி உணருவதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காக அருமையான திட்டங்களை எல்லாம் இங்கே தந்திருக்கிறார்கள். மொத்தம் இந்தத் துறையின் சார்பாக 1,258 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதிலே இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். பழங்குடியினர் பள்ளிகள் 241 இயங்கி வருகின்றன. 828 தொடக்கப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. நடுநிலைப் பள்ளிகள் 93 இயங்கி வருகின்றன. உயர்நிலைப் பள்ளிகள் 47 இயங்கி வருகின்றன. மேல்நிலைப் பள்ளிகள் 49. இங்கு மாணவர்களுக்கு இலவசமாக எழுது பலகைகள், பாடப் புத்தகங்கள், புத்தக வங்கி, சட்டப் பயிற்சி, கணினி பயிற்சி, ஊக்கத் தொகை, உதவித் தொகை, பரிசுத் தொகை, அறிவுக் கூர்மைப் பரிசு, முதல்வரின் தகுதிப் பரிசு, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள் இப்படிப் பல்வேறு பயிற்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 310.49 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது நம்முடைய அருமைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. திசைவீரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்டினார்கள். இந்தத் துறையின் சார்பாக சிறப்பாக இலவசப் புத்தகங்களை வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்கள். கடந்த காலங்களிலே, கடந்த ஆட்சியிலே புத்தகங்களுக்கு அலையோ அலை

என்று அலைந்து திரிந்த காலம் உண்டு. ஏன் இலவசப் பாடப் புத்தகங்கள்கூட விலையோ விலை என்று விற்றுக்கொண்டிருந்த கொடுமைகூட நடந்தது. அந்த அவல நிலைகளையெல்லாம் நீக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பள்ளி திறந்த அன்றே, ஏன் பள்ளி திறப்பதற்கு முன்னாலேயே பாடப் புத்தகங்கள் பள்ளிக்குச் சென்று அடைந்திட வேண்டும்; பள்ளி திறந்த அன்றே மாணவர்களின் கரங்களிலே அவை தவழ வேண்டும் என்று உத்தரவிட்டு அதற்காக 3 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் சீருடை வழங்குவதிலும் கடந்த காலத்தில் என்னென்ன சீர்கேடுகள் நடந்தன என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். இப்போது சரியான நேரத்திலே, சரியான அளவிலே பள்ளி திறந்த அன்றே அந்த மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள் சரியாக, தரமாக, வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 7.52 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். 'அடுப்பும் விறகும் இருந்தால்தான் அருமையாகச் சமைத்திட முடியும்' என்பது கிராமத்துப் பழமொழி. அதைப்போல தளவாடக் கருவிகள், ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் வரலாற்றுச் சாதனங்கள், வரைபடம், விளக்கப் படங்கள், அத்தனையும் பள்ளிக்கு அவசியம் வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு ரூ. 58 இலட்சத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதுபோல இளங்கல்வி, உயர்கல்வி பயிலுகின்ற இளம் சிறுமியர்களுக்குத் தடைபடா பெண் கல்வித் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் — பெண்கள் கல்வியில் முன்னேற வேண்டும், பெண்கள் கல்வியில் முன்னேறினால்தான் நாடு முன்னேற முடியும் என்ற முற்போக்குச் சிந்தனைக்குச் சொந்தக்காரராக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் — தடைபடா பெண்கள் கல்வித் திட்டம் என்ற ஓர் அருமையான திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதன்மூலமாக 90 ஆயிரம் பேர் தொடர்ந்து பள்ளி செல்வதற்கான ஒரு வாய்ப்பை, வசதியை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அடுத்து, மாணவர் விடுதிகள். இந்தத் துறையின் சார்பாக மொத்தம் 1,075 விடுதிகள் இயங்கி வருகின்றன. பள்ளி மாணவர்கள், 75 ஆயிரம் பேர் தங்கிப் படித்து வந்தார்கள். 733 மாணவர் விடுதிகள் இயங்கி வருகின்றன. 342 மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. 460 அரசுக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களிலே 615 இயங்கி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகாலமாக தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் 111 விடுதிகள் புதியதாகத் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அந்த 111 விடுதிகளில் இன்னும் சொல்லப்போனால், 81 விடுதிகளை சகல வசதிகளுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கட்டிக்கொடுப்பதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக—பெண்—மாணவியர்களுடைய கல்விக்காக, முன்னேற்றத்திற்காக அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாணவியர் விடுதிகளுக்காக அதிக முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள். 61 விடுதிகளைக் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 19 மாணவ விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டிலும் 42 மாணவ விடுதிகள் கட்டுவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 13.86 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உணவுக் கட்டணம். உணவுக் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே இங்கே பேசிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு கிருஷ்ணசாமி அவர்கள்கூடச் சொன்னார்கள். கடந்த காலங்களிலே மாணவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய விடுதிகளில் உணவுக் கட்டணங்கள் எவ்வளவு மோசமாக இருந்தன என்பதையெல்லாம் இந்த நாடே நன்கு அறியும். அதையெல்லாம் மாற்றியமைத்து, அந்த மாணவர்கள் தரமான உணவு உண்ண வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்குகின்ற நோக்கத்தில் அதில் தவறுகள் ஏற்பட்டு விடக்கூடாது; நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்குச் சென்று போய் விடக் கூடாது என்ற நிலையையெல்லாம் உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தநேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு முதல்வரவர்கள் பள்ளி விடுதிகளைப் பழுது பார்ப்பதற்காக 1.92 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். கடந்த காலங்களில் கட்டப்பட்ட கட்டடங்கள், பள்ளிகள், விடுதிகள் எல்லாம் பழுது பார்க்கப்படாமல் குட்டிச் சுவர்களாகக் காட்சியளித்தன. ஏன், மரங்கள்கூட திடீரென்று வகுப்பறைகளாக மாறிய காலமும் உண்டு. அதையெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் பார்த்து வேதனைப்பட்டு, மாணவர்கள் மரத்தடியிலே பாடம் படிக்கின்றார்கள் என்ற நிலையைப் போக்குவதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் 1.92 கோடி பணத்தை அள்ளித் தந்திருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள்—அன்பாலயமாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள்—25 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தந்திருக்கின்றார்கள்; அடக்கமில்லாது ஆண்ட ஆட்சியிலே தொடக்கப் பள்ளிகளும் முடங்கிக் கிடந்தன; தொடக்கப் பள்ளிகள் நிலை உயர்த்தப்படாமல் இருந்தன. கடந்த ஆண்டிலும் 50 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்திக் கொடுத்தது தலைவர் மாண்புமிகு முதலமைச்சரவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போல நம்முடைய கழக ஆட்சியிலே சென்ற ஆண்டு நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் 6, உயர்நிலைப் பள்ளிகள் 6; இப்பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு 71.28 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். நடப்பாண்டிலும் நடுநிலைப் பள்ளிகள் 5 உயர்த்த இருக்கின்றோம்; உயர்நிலைப் பள்ளிகளும் 5 உயர்த்த இருக்கின்றோம்; கடந்த ஆட்சியில் நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கையை உங்கள் பார்வைக்கு வைக்கின்றேன். தொடக்கப் பள்ளிகள் 13; நடுநிலைப் பள்ளிகள் 13; உயர்நிலைப் பள்ளிகள் 13; ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள், கல்வி சிறந்த நம் நாட்டில் கலைஞர் ஆளுகின்ற தமிழ்நாட்டிலே தொடக்கப் பள்ளிகள் 62 தொடங்கப்பட்டிருக்கின்றன; நடுநிலைப் பள்ளிகள் 16 உயர்த்தப்பட்டிருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகள் 16 உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 94 பள்ளிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 3 மடங்கு, மூன்று தமிழாய் வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் 3 மடங்கு உயர்த்தியிருக்கின்றார்கள் என்பதை இந்தநேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



முந்தைய ஆட்சியில் இதற்காக அவர்கள் ஒதுக்கிய மொத்தத் தொகையை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த் 5 ஆண்டுக் கால ஆட்சியில் அவர்கள் ஒதுக்கிய தொகையோ ரூ.729.72 கோடியாகும். ஆனால் கடந்த 3 ஆண்டு கால ஆட்சியில் இந்த மக்களுடைய முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபடக்கூடிய ஒப்பற்ற தலைவர் கலைஞருடைய ஆட்சியில் ஒதுக்கிய தொகையோ ரூ.865.13 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 3 ஆண்டுகளில் கூடுதலாக ஒதுக்கப்பட்ட தொகை கிட்டத்தட்ட 135.42 கோடியாகும். இது சாதனை இல்லையா? வேதனையில் மூழ்கியிருக்கக்கூடிய அந்த மக்களைக் கரையேற்றுவதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் பொருளாதார நெருக்கடியிருந்தாலும் அவர்கள் வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நன்றியுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல. கல்விக்காக மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் ரூ.415.71 கோடியை ஒதுக்கியிருக்கின்றார்கள். இது 57 விழுக்காடுதான். கழக ஆட்சியில் இந்த 3 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.483 கோடி. 61 விழுக்காடாக உயர்த்தி கலைஞர் தலைவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களுடைய முன்னேற்றத்திற்காகவும், மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வி கற்பதற்காகவும், நல்வாழ்வு பெற வேண்டும், அவர்களுடைய வாழ்வு மிகப் புதிர்காலமாக அமைந்துவிடக் கூடாது என்று அவர்கள் நலனிலே அக்கறை கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள்—மாணவர்கள்மேல் அக்கறை கொண்ட தலைவர் அவர்கள்—பணத்தை அள்ளித் தந்திருக்கிறார்கள்.

கணிப்பொறித் தமிழ்க் காவலராக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள்—எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்வதைப் போன்று எல்லாவற்றிலும் கணிப்பொறி மயமாக அமைத்து வந்திருக்கக்கூடிய தலைவரவர்கள்—மாறிவரும் சமுதாயத்தில் மணம் பரப்பக்கூடிய இந்த அறிவியல் யுகத்தில், சென்னை மாநகராட்சியின் தந்தை அவருடைய நிர்வாகத்திற்கு உட்பட்ட பள்ளிகளை எல்லாம் கணிப்பொறி மையமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்போல ஆதிதிராவிடர் நலத் துறையில் இயங்கக்கூடிய 60 பள்ளிகளையும் கணிப்பொறி மையமாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.80 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

TAHDCO என்ற நிறுவனத்தைப்பற்றி நம்முடைய அன்பிற்குரிய அண்ணன் பழனிசாமி அவர்களும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அருமைக்குரிய கிருஷ்ணசாமி அவர்களும், மூத்த உறுப்பினர் அம்மா பொன்னம்மாள் அவர்களும் இங்கே பேசினார்கள். TAHDCO நிறுவனம் வெள்ளியும் பொன்னும் விழாக்களில் மட்டுமே இருக்கின்றது; ஆதிதிராவிட மக்களுடைய வீடுகளுக்காக அது பயன்படவில்லை என்பதையெல்லாம் உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள் வேளாண் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக வேளாண் துறை மூலமாக 41.82 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கின்றார்கள். கலப்பினக் கிடேரிக் கன்றுகளை வழங்குவதற்காக 2.14 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். கறவை மாடுகள் வழங்குவதற்காகவும் 17.24 கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள்.

இப்படிப் பல்வேறு துறைகள் மூலமாக நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய பணம் மானியமாகவும், கடன் உதவியாகவும் வழங்கப்படுகிறது என்பதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல அவர்கள் சுய தொழில் தொடங்க வேண்டும்—ஆதிதிராவிட மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள்—அவர்களைக் கைதூக்கிவிட வேண்டும், கரையேற்ற வேண்டும் என்பதற்காக கடந்த மூன்றாண்டுகளில் 8,472 நபர்களுக்கு 19 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே சுய தொழில் தொடங்குவதற்கு 10,080 நபர்களுக்கு ரூ.4.54 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நடப்பு நிதி ஆண்டில் 3,100 பேர் சுயதொழில் தொடங்க 7.75 கோடி ரூபாய் மானியமாகவும் 15.25 கோடி ரூபாய் விளிம்புத் தொகையாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

பின்னலாடைத் தொழில்களுக்காக, ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களுக்கு இடையிலே ஈங்கூர் மற்றும் முதலிபாளையத்தில் ஒரு புதிய தொழில் நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. அங்கே 2000 சதுர அடி பரப்பில் 300 தொழிற் கூடங்கள் ரூ.32.74 கோடி செலவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அங்கே பயனாளிகள் தேர்வு முடியும்



நிலையை எட்டியிருக்கிறது. அந்த நகரில் 200 தொழிற் கூடங்களுக்கு விரைவில் தேர்வு நடத்தப்பட இருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**வணிக வளாகம்:**-சுயமாகத் தொழில் தொடங்க வேண்டும், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காகத் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த மக்களுக்குக் கை கொடுப்பதற்காகக் கடன் வசதியும் அளித்தார். வணிக வளாகங்களையும் அமைத்துத் தந்தார். நல்ல வியாபாரம் நடக்கக்கூடிய இடங்களில் ஆதிதிராவிட மக்களுக்குக் கடைகள் கிடைப்பதில்லை, வாடகைக்குக் கொடுப்பது இல்லை என்ற நிலைமைகளையெல்லாம் எண்ணி, வருத்தப்பட்ட முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 70 வணிக வளாகங்கள் கட்டுவதற்கு 45.50 இலட்ச ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம்:**- ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளி விளக்காய் விளங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் கட்ட, 23-12-1998 ஆம் நாளன்று அதன் கட்டுமானப் பணியை நம்முடைய முதல்வர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே பெருமையுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த நிலையில் அந்த மணி மண்டபத்தைத் தொடங்குவதற்கு அங்கே வருகை தந்தார் என்பதை இந்தநேரத்தில் நான் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளி விளக்காய் விளங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய மணி மண்டபத்தின் கட்டுமானப் பணியைத் தொடங்குகின்ற நேரத்தில், உடல் நலம் குன்றியிருந்த நேரத்தில், அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு வருவாரா, வரமாட்டாரா என்று நினைத்து ஏங்கியிருந்த நேரத்தில், ..., எதிரிகள்கூட, இரக்கம் உடன்பிறப்புகள் எல்லாம் அஞ்சுகின்ற நேரத்தில், எதிரிகள்கூட, இரக்கம் இல்லாதவர்கள்கூட, தலைவர் கலைஞர் அவர்களுடைய உடல்நிலையை நினைத்து வருத்தப்பட்ட நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் அம்பேத்கர் மணி மண்டபத்தின் கட்டுமானப் பணியில் நான் கலந்துகொள்ளாமல் இருந்தால், நான் இந்தப் பொதுவாழ்வில் இருந்ததற்கே பொருள் இல்லாமல் போய்விடும் என்று சொல்லி, தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் மேல் வைத்திருந்த அன்புப் பெருக்கத்தினால் அந்த நிகழ்ச்சியில்

கலந்துகொண்டார்கள். அம்பேத்கர் மணி மண்டபத்தின் கட்டுமானப் பணிகளில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத்தான் தெரியும்; நாடும் நன்றாக அறியும்; நல்லவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அம்பேத்கருடைய பேரன் பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள்கூட அதைப் பார்த்து மகிழ்ந்தார்கள். நேரடியாகச் சந்திக்கும்போது, உங்களுடைய தலைவர் ஆதிதிராவிடர்கள் மீது அக்கறை கொண்டவர், ஆதிதிராவிட மக்களின் நலன் காக்கக்கூடிய அரசாக இந்த அரசு இருக்கிறது என்று நேரடியாகப் பாராட்டினார். ஆகவே அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபம் விரைவில் கட்டப்பட இருக்கிறது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. விரைவில் முடிய இருக்கிறது. இதற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தலைவருக்குத் தலைவராய் இருக்கும் அண்ணா அவர்களின் பெயராலே அமைந்திருக்கின்ற அண்ணா பல்கலைக்கழகத்திற்கு இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அவர்கள் சான்றிதழ் வழங்கியவுடன் மணிமண்டபம் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துப்புரவுப் பணியாளர்கள் புனர் வாழ்வுத் திட்டத்தைப்பற்றி நீங்கள் எல்லாம் மனம் திறந்து பாராட்டியிருக்கிறீர்கள்; மகிழ்ச்சியோடு இன்றையதினம் இருக்கிறீர்கள். சட்டங்களை உருவாக்குகின்ற கர்ப்பப்பையாக இருக்கிற சட்டமன்றமே இன்றையதினம் மனம் மகிழ்ந்து வாழ்த்திக்கொண்டு இருக்கிறது. மனித இதயம் உள்ள, இரக்கமுள்ள, மனிதாபிமானமுள்ள கலைஞர் அவர்கள், இந்த ஊர் சுத்தமாக இருக்க தன்னை அசுத்தப்படுத்திக்கொள்கின்ற துப்புரவுப் பணியாளர்களுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டும், அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றவேண்டும் என்பதற்காக—அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும்; அப்படி மாற்று வேலைவாய்ப்புக் கொடுப்பதன் மூலமாக—மத்திய சர்க்காரின் ஓர் அமைப்பு, துப்புரவுத் தொழிலாளர் தேசிய நிதிக் கழகம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நிதிக்கழகம் ஒரு கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது. ஒரு கோடி ரூபாயை வழங்குகிற நேரத்தில் நீங்கள் அதற்கு பொறுப்பு உறுதித் தொகைக்கு எழுதித் தரவேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச்சென்றவுடனேயே நிதி நெருக்கடி இருந்தாலும் தலைவர் கலைஞர் அவர்கள் துப்புரவுப் பணியாளர்கள் வாழ்வு முன்னேறவேண்டுமென்ற தூய்மையான எண்ணத்துடன், 'அடிமை நாட்டில் அரசனாய் இருப்பதைவிட, சொந்த நாட்டில் தோட்டியாக இருப்பதே 'மேல்' என்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



அவர்கள் சொன்னார்களே, அதைப்போல, அந்தத் தோட்டியினுடைய வாழ்க்கை உயர வேண்டும் என்பதற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு கோடி ரூபாயைப் பொறுப்பு உறுதித் தொகையாக வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

கடந்த மூன்று ஆண்டுகளில் 7,012 துப்புரவுப் பணியாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்காக ரூ.8.38 கோடி மானியமும் விளிம்புத் தொகையும் வழங்கியிருக்கிறார்கள் மாண்புமிகு முதல்வரவர்கள். அதைப்போல நடப்பு ஆண்டிலும் புனர்வாழ்வு அளிப்பதற்காக ரூ.1.30 கோடி நிதி வழங்கியிருக்கிறார்கள்.

கிராமங்களில் வாழும் இளைஞர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக, சுயதொழில் தொடங்குவதற்காக அவர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு ரூ.1.30 கோடி வழங்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தீண்டாமையை ஒழிக்க வேண்டும்; நாட்டிலே சமத்துவம் நிலவ வேண்டும்; சமூக நீதி வர வேண்டும் என்றெல்லாம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஊருக்கு, உலகிற்கு உபதேசம் செய்யும் உத்தமர்கள் வாழ்கின்ற நாட்டிலே, நம்முடைய தலைவர் அவர்கள்தான் உணர்வுபூர்வமாக தீண்டாமையை ஒழிப்பதற்காக, அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு எத்தனையோ உதாரணங்கள், எத்தனையோ நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சாதி மத பேதத்தை ஓட்டிட ஆதி திராவிடப் பெண்ணை மருமகளாக்கி இன்றையதினம் சமத்துவத்தை இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கம்தான இந்தியாவிற்கு சமூக நீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டுகின்ற இயக்கம் என்று எடுத்துக்காட்டுவதைப்போல, இந்த திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக, முதுபெரும் தலைவராக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் தீண்டாமையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். 28 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, முன்மாதிரியாக இருக்கக்கூடிய கிராமங்களாக சாதி பேதத்தை ஒழிக்கக்கூடிய கிராமங்களாக அவற்றை மலரச் செய்ய

வேண்டும்; சமத்துவத்தை நிலைநாட்டுகின்ற கிராமங்களாக இருக்க வேண்டும். முன்மாதிரி கிராமங்களாக இருக்க வேண்டும் என்ற நல்ல உணர்வின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்கள் மாவட்டம் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல சமூக நீதிக்காகப் போராடுகின்றவர்களுக்கு, அண்ணல் அம்பேத்கர் பெயரிலே விருது வழங்க வேண்டுமென்பதற்காக கடந்த ஆண்டுகூட ஆதிதிராவிட மக்களுடைய மூத்த தலைவராக இருக்கக்கூடிய திரு. எல். இளையபெருமாள் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பு வழங்கி, ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டுகின்ற நேரத்திலே, ஆதிதிராவிட மக்களுக்கு எந்த அளவுக்கு இந்த அரசு பாதுகாப்பாக இருக்கிறது; எந்த அளவுக்கு ஆதிதிராவிட மக்களை முன்னேற்ற வேண்டும்; எந்த அளவுக்குத் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்; சமத்துவத்தை நாட்டிலே பரப்ப வேண்டும் என்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல வீட்டுமனைப் பட்டா. இங்கே பேசிய பல நண்பர்கள், அதிலும் குறிப்பாக திரு. சாமிநாதன் அவர்கள் பேசினார்கள். அவர் சட்டமன்ற உறுப்பினர், நேரில் பார்க்கின்ற நேரங்களிலே, அவரை 'பட்டா சாமிநாதன்' என்று சொல்கின்ற அளவுக்கு, எப்போது பார்த்தாலும் அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே இருப்பார்கள். அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்து அவர் வீட்டடி மனைப் பட்டா கேட்டுக்கொண்டே இருப்பார் என்பதை நான் நேரிலே பார்த்திருக்கிறேன். என்னிடம் பல தடவை சொல்லியிருக்கிறார்கள். அவருடைய நிலைமையை நன்றாகக் கவனித்த இந்த அரசு—ஆதிதிராவிட மக்களுக்காக கடந்த ஆட்சியில் 2 cent நிலம் என்று இருந்தது; ஊரை வளைத்துப் போட்ட அவர்களுடைய ஆட்சியிலே வழங்கிய நிலமே 2 cent-தான். தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு 2 cent என்று இருந்ததை 3 cent-ஆக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 2,34,614. அதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.49.18



கோடியை வழங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு இலவசப் பட்டா வழங்குவதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.18.69 கோடியை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே வீட்டடி மனைப் பட்டாக்களை விரைந்து கொடுக்க வேண்டும் என்பதற்காக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

80 வட்டாட்சியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவசியம் தொலைபேசி வசதி வேண்டுமென்று அருமைக்குரிய அண்ணன் அப்பாவு அவர்கள்கூடச் சொன்னார்கள். இன்னும் பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். தொலைபேசி தொலைதூரத்தில் இருக்கின்ற காரணத்தால், தொலைபேசி வசதி விரைவில் கிடைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவோம். வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஈப்புகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்றையதினம் 50 ஈப்புகளை நாங்கள் வழங்கியிருக்கிறோம் இந்த அரசின் சார்பாக என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொகுப்பு வீடுகள். வீட்டடி மனைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தை—இந்தியாவிற்கே நம்முடைய தலைவர் அவர்கள்தான் சாதனைக்கோர் தலைவராக, முன்னோடித் திட்டங்களை அறிவிப்பதற்கோர் முதல்வராக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே கடந்த மூன்றாண்டுகளில் கட்டித் தரப்பட்ட தொகுப்பு வீடுகள் 2,41,347. அதற்கான செலவு 498.72 கோடி ரூபாய் ஆகும். இந்த ஆண்டும் கட்டப்படவுள்ள 16,000 வீடுகளுக்கு ரூ.44.16 கோடி என்று தலைவர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர்கள் நரிக்குறவர்களுக்கு சான்றிதழ் வழங்க வேண்டும், வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள் இந்தநேரத்திலே நான் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் நாடோடிகளாகத் திரிகின்ற நரிக்குறவப் பெருமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்தார்கள் மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதியிலுள்ள விளத்தூர் என்ற கிராமத்தில்

நரிக்குறவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்; அவரைத்தவிர யாரையும் எடுத்துக்காட்டுக்குச் சொல்ல முடியாது. நாடோடி மக்களாக இருந்தாலும்சரி, காட்டு நாயக்கர்களாக இருந்தாலும்சரி, மலைக் குறவர்களாக இருந்தாலும்சரி, பழங்குடியின மக்களாக இருந்தாலும்சரி, அத்தனைத் தரப்பு மக்களும் பாராட்டுகின்ற அளவுக்கு, சகல தரப்பு மக்களும் போற்றுகின்ற அளவுக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை உங்கள் மத்தியில் சொல்வதில் நான் பெருமை அடைகிறேன்.

*பிற்பகல் 1-10*

கொத்தடிமை ஒழிப்பில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. 'கொடிது, கொடிது கொத்தடிமை கொடிது, பெரிது, பெரிது அதை ஒழித்தல் பெரிது' என்று சொல்லுவார்கள். அதைப்போல தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 25,008 கொத்தடிமைகள் கண்டறியப்பட்டனர். அவ்வாறு கண்டறியப்பட்ட கொத்தடிமைகளில் 5,178 கொத்தடிமைகள் மீட்கப்பட்டு, அதற்காக தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கொத்தடிமை ஒழிப்பிற்காக 6 கோடி ரூபாய்—மத்திய அரசு 3 கோடியும், மாநில அரசு 3 கோடியுமாக, மொத்தம் 6 கோடி ரூபாய்—ஒதுக்கப்பட்டிருக்கிறது. கொத்தடிமை ஒழிப்பில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்துகிறது, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதற்குச் சான்றாக, உச்ச நீதிமன்றமே பாராட்டி இருப்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் வன்கொடுமைபற்றிப் பேசினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் தேநீர்க் கடைகள் என்பது அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்; அந்தத் தேநீர்க் கடையில் இரு குவளைகள் இருக்கக் கூடாது; அந்த இரு குவளைகள் சாதியைப் பிரிக்கும் உணர்வுக்கு தூபமிடக்கூடாது என்பதை உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், ஒரேயொரு குவளைதான் இருக்க வேண்டும்; அது ஒரு குவளையாக இருக்க வேண்டும் என்பதுதான், திருக்குவளை தந்த திருமந்திரம் ஆகும். இவ்வாறு இருக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர்களை எந்த அளவிற்கு முடுக்கிவிட்டிருக்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த அளவிற்கு அதில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். எந்த அளவிற்கு விரைவாக வேகமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை



நாங்கள் நேரிடையாகப் பார்த்தோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் தனவேல் அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் மிகவும் சிறப்பாக இந்த வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் பணியாற்றுகின்ற அளவுக்கு வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

*பழங்குடியினர் நலம்:-* நம்முடைய அன்பிற்குரிய சகோதார் சேந்தமங்கலம் சந்திரசேகரன் அவர்கள் பழங்குடியினர் நலத்தைப் பற்றிப் பேசினார்கள். கடந்த காலங்களில், கடந்த மூன்று ஆண்டுகளில், பழங்குடியின மக்களுக்காக, ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமல்ல, பழங்குடியின மக்களும் முன்னேற வேண்டும். பழங்குடியின மக்கள் காட்டுப் பகுதியிலே இருக்கிறார்கள், நாட்டுப் பகுதிக்கு வந்து அடிப்படை வசதி இல்லாமல் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மக்களுக்கு வசதிகளைத் தேடிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ரூ.128.12 கோடியை வாரி வழங்கினார்கள். இந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் 54.50 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். மேலும் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மலைவாழ் பழங்குடி மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். பல்வேறு நலத் திட்டங்களை அறிவிக்கிற நேரத்தில் சிறு வனப் பொருட்களைச் சேமித்து விற்பதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் 18 பல்நோக்கு பெரிய கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து இருக்கிறார்கள். விற்காத பொருள்களுக்கு (திராட்சை) எல்லாம் விலை பேசி, விற்கின்ற நேரத்தில் விளைகின்ற பொருள்களுக்கு, பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் (LAMP Society) இல்லாமல் அலைந்து கொண்டிருக்கக்கூடிய மலைவாழ் மக்களுடைய மலைபோல இருந்த பிரச்சினைகளையெல்லாம் பனிபோல நீக்கி தலைவர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் அவர்களுக்கு, பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் வைத்து அமைத்திருக்கிறார்கள். பழங்குடியினர் தொழிலிலே முன்னேறுவதற்காக 1 கோடியே 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த மக்களுடைய சாலை வசதி, மின் வசதி மற்றும் அடிப்படை வசதிகளுக்காக 145.77 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இட ஒதுக்கீட்டை மையமாக வைத்து சட்டமன்றத்தினுடைய மூத்த உறுப்பினர் ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும், நம்முடைய அன்புச் சகோதரர் டாக்டர் கிருஷ்ணசாமி

அவர்களும், அருமை அண்ணன் பழனிசாமி அவர்களும் மற்றும் பல சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தச் சட்டமன்றத்தில் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இட ஒதுக்கீட்டைப் பொறுத்தளவில், நம்முடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் இருந்துகொண்டு, சமூக நீதியில் இந்தியாவின் தலைநகரமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது என்றால், தலைவர் கலைஞர் அவர்களால்தான் என்பதை நான் மனந்திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இட ஒதுக்கீட்டை நிறைவேற்ற வேண்டும், அரசுத் துறையாக இருந்தாலும் சரி, அரசு சார் நிறுவனங்களாக இருந்தாலும் சரி, 18 விழுக்காட்டை ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்க வேண்டும், ஒரு விழுக்காட்டை பழங்குடியின மக்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று, 1-4-1989 ஆம் ஆண்டு 10 ஆண்டுகளுக்கு முன்பே அரசு சட்டம் இயற்றி, அதனால் மகிழ்ந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்தநேரத்திலே சுட்டிககாட்ட ஆசைப்படுகிறேன்.

அதைப்போல ஆதிதிராவிட மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை நிறைவாக, சிறப்பாக நிரப்ப வேண்டும் என்பதற்காக, அதில் எந்தவிதத் தவறும் ஏற்படக்கூடாது என்றவொரு நல்ல உணர்வின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்கள் உயர்மட்டக் குழுவை அமைத்துத் தந்திருக்கிறார்கள். இந்தியாவே பின்பற்றக்கூடிய அளவிற்கு, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஓர் உயர்மட்டக் குழுவை, ஆதிதிராவிட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய 9 பேரை நியமித்துத் தந்த வரலாறு தலைவர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு. இந்தக் குழு, தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி, தகுந்த நேரத்திலே அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறது. விரைவில் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மக்கள் ஆரோக்கியமாக இருந்தால் வைத்தியருக்குக் கோபம் வரும், போலி வைத்தியரைத்தான் சொல்கிறேன். உண்மை வைத்தியரைச் சொல்வதற்கு யாருக்கும் மனம் வராது. இந்த நோத்திலே, மக்கள் ஆரோக்கியமாக இருந்தால் வைத்தியருக்குக் கோபம் வரும் என்பதுபோல, சிலபேர் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் கோபப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; கோபித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்களோ, இட ஒதுக்கீட்டை ஒதுக்கித் தருவதிலே எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரு சிறந்த முதல்வராக இருந்து கொண்டிருக்கிறார்



என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். ஆகவே தலைவர் கலைஞர் அவர்கள் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் அதிக தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

சாதிச் சான்றிதழ் பிரச்சினையில், அன்புக்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இன்றையதினம், பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்கள் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கின்ற நேரத்திலேயும் சாதிச் சான்றிதழ்கள் கிடைக்காத, கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகிற நேரத்திலே, அவற்றை பள்ளியின் மூலமாக வழங்கலாம் என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதுவும் அதுபோல ஆதிதிராவிட, பழங்குடி மக்களுக்காகவும், சாதிச் சான்றிதழ்கள் கோட்டாட்சித் தலைவர் மூலமாக வழங்கி வந்த நிலை கண்டு வருந்தி, இன்றையதினம், அந்த மக்களுடைய வேதனைப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்கள், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் மூலமாக வழங்கலாம் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு ஆணையிட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். தமிழகம் இன்றையதினம் அதைப் பாராட்டிக்கொண்டிருக்கிறது என்பதை இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதி திராவிட நலத் துறை இப்படிப்பட்ட பல அரிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது என்றால், அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவுரை, அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படிதான் என்பதை இந்தநேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல ஆதிதிராவிட மக்களுக்காக உழைக்கக் கூடிய தலைவராக — ஆதிதிராவிட மக்களுடைய இரண்டாவது அம்பேத்கராக — தலைவர் ஆதிதிராவிட மக்களுடைய இரண்டாவது அம்பேத்கர் — தலைவர் கலைஞர் அவர்கள் பாடுபட்டுக்கொண்டு வருகிறார் என்பதை இந்த நேரத்தில் மனந்திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதிதிராவிட நலத் துறை தோன்றி 50 ஆண்டுகள் ஆகி பொன்விழா முடிந்து இருக்கிறது. அதுபோல கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட TAHDCO என்ற நிறுவனம் வெள்ளி விழாவைக் கண்டு கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மனித நேய விழாவைக் கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறது. அறிவியல் தமிழை அரியணை ஏற்றும் விழாவாக, அற்புத விழாவாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள், மாண்புமிகு

தலைவர் கலைஞர் அவர்கள். கணிப்பொறித் தமிழ்க் காவலராக வீற்றிருக்கின்ற நமது தலைவர் கலைஞர் அவர்கள், பவள விழா காணக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் ஆதிதிராவிட நலத் துறையின் முன்னேற்றத்திற்குக் கடந்த ஆண்டை விட 75 கோடி ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள். இத்துறைக்குக் கூடுதலான நிதியைத் தந்து கொண்டிருக்கிறார்கள் ஏன் நம் தேவைக்கு அதிகமாக நிதி தந்து கொண்டிருக்கிறார்கள், ஏன் நாம் கேட்காமலேயே இந்தத் துறைக்காக 'பால் நினைந்தூட்டும் தாயாக' தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கி வருகிறார்கள் என்பதைப் பல்வேறு உதாரணங்களுடன் இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணல் அம்பேத்கருடைய மாற்று உருவத்திலே நடமாடக்கூடிய இரண்டாவது அம்பேத்கர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 'ஆண்டவனே நீங்கள் எங்களை ஆளுங்கள்; எவ்வளவு காலம் என்று எங்களைக் கேட்காதீர்கள். இந்தக் கூழாங்கற்கள் எல்லாப் பாறாங்கற்களாக ஆகும்வரை ஆளுங்கள். நீண்ட காலம் வாழுங்கள்' என்று இந்தநேரத்திலே - நீங்கள் ஜூன் 3 ஆம் தேதி பவள விழா காண இருக்கிறீர்கள். வளமான தமிழகம் காண வாழ்த்துகின்ற நேரத்தில், 1½ கோடி ஆதிதிராவிட தமிழ் மக்களின் சார்பாக ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக உங்களை இந்தநேரத்திலே வாழ்த்தி, இந்தத் துறைக்கு நீங்கள் தந்த நன்கொடைகளைப் புதிய அறிவிப்புகளாகத் தந்து மகிழ்கின்றேன்.

ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக, பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயில, 25 அரசு தொடக்கப் பள்ளிகள் ரூபாய் 41.20 இலட்சம் செலவில் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். ஆதிதிராவிட அரசு நடுநிலைப் பள்ளிகள் 5 ரூ.24.83 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். இருண்டு கிடந்த இருளர் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக, திண்டிவனத்தில் ஒரு பழங்குடியினர் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்ற அங்கே ஒரு பழங்குடியினர் பள்ளி அமைக்கப்படும். அதுபோல நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் பெரியசாமி அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திண்டுக்கல் மாவட்டத்தில் கோரக்கொம்பு என்ற இடத்தில் ஒரு பழங்குடியினர் பள்ளி ஆரம்பிக்கப்படும். இதற்காக ரூ.9.40 இலட்சம் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளில்



ஆதிதிராவிட நலத் துறை சார்பாக பல்வேறு திட்டங்களை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளி - உண்டி உறைவிடப் பள்ளி — உண்டு உறைவிடப் பள்ளி என்று முன்பு இருந்தது. உண்டு உறைவிடப் பள்ளி என்ற உடனே பள்ளியில் இருக்கக்கூடிய விடுதியிலே உண்டு, உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். 'உண்டி முதற்றே உலகு' என்ற ஓர் ஆதி தமிழன் சொன்ன காரணத்தினால், ஆதி தமிழனாக இருக்கக்கூடிய, நம்முடைய அன்னைத் தமிழாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள், இதுநாள் வரையில் இத்துறையின் சார்பாக உண்டு உறைவிடப் பள்ளியாக இருந்ததை, அதுவும் சொல்லப்போனால், உண்டு கொண்டேயிருந்த பள்ளிகளை எல்லாம், இன்றையதினம் உண்டி உறைவிடப் பள்ளியாக மாற்றவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள் நேற்று ஒரு பெரிய அறிவிப்பைத் தந்து........

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் ஆற்றிய உரையில் பொறுக்கி எடுத்தால் 'தலைவர் கலைஞர் அவர்கள்' என்பது, ஓர் ஆயிரம் சொல்லாவது இருக்கும். எனவே மிச்சமுள்ள, எஞ்சியுள்ள பேச்சிலாவது 'தலைவர் கலைஞர்' என்ற சொல்லை நீக்கிவிட்டு, அவைக்குறிப்பிலிருந்து அல்ல, அவர் பேசுகின்ற குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டு, தொடர்ந்து பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் எனக்கே ரொம்பக் கூச்சமாக இருக்கிறது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்ட அனுபவம் எனக்கு உண்டு. இருந்தாலும் தாயாக, தந்தையாக இருக்கின்ற உங்களை நாங்கள் வாழ்த்தாமல், வணங்காமல் இருக்க முடியவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே இந்தநேரத்திலே இந்திய ஆட்சிப் பணி மற்றும் சிவில் பணித் தேர்வுக்குத் தனிப் பயிற்சி நிலையம் அமைப்பதற்காக 5 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். அதோடு TAHDCO மூலமாக துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ஒரு கோடி ரூபாய், தேசிய துப்புரவுப் பணியாளர் நிதி வளர்ச்சிக் கழகத்திற்குப் பொறுப்புறுதியாக

அளிக்கப்பட்டிருக்கின்றது. துப்புரவுப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு மூவுருளை வாகனம், கார், சிறிய லாரிகள், கழிவுநீர் அகற்றும் ஊர்திகள் வாங்குவதற்கு ரூ.1.30 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ.5 கோடி செலவில் 500 நபர்களுக்கு விசை இயந்திரங்கள் வழங்கப்படும். ரூ.3.75 கோடி செலவில் 500 நபர்களுக்கு கதிர் அடிக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.

நாட்டிலேயே முதன் முதலாக மகளிருக்கான சிறப்புத் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்த ரூ.6.50 கோடி ஒதுக்கப்படும். இதன்மூலம் 15 நபர்கள் கொண்ட 130 குழுக்கள் மாநிலம் முழுவதும் தேர்வு செய்யப்படும். ஓராண்டுக் காலம் தணிக்கைப் பட்டயப் பயிற்சி ரூ.4.36 கோடி செலவில் 2 ஆயிரம் நபர்களுக்கு அளிக்கப்படும்.

500 நபர்களுக்குக் கணிப்பொறி இயந்திரத் தொழில்நுட்பப் பயிற்சி ரூ.1.09 கோடி செலவில் வழங்கப்படும்.

பழங்குடியின மகளிர் விழாக் காலங்களில் பந்தல் அமைக்க உதவும் திட்டம் ரூ.25 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

பழங்குடியினருக்கு TAHDCO நிதி உதவியுடன் 50 சுற்றுலா வாடகை சீப்புகள், 20 mini van-கள், ரூ.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

மலைவாழ் மக்கள் பயன்பெற பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் பலதரப்பட்ட சிறு தொழில் வளர்ச்சிக்கான திட்டம் ரூ.47 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 211 உண்டி உறைவிடப் பள்ளிகளில், 880 இடை நிலை ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். தலைமை ஆசிரியர்களும் மற்றும் உதவி ஆசிரியர்களும் அந்தப் பள்ளியில், பணியாற்றுகின்றபோது — மலையில் இருக்கக்கூடிய பள்ளிகளில், அந்த மலைவாழ் மக்களுடைய நிலைமை எண்ணி அவர்களுக்காகக் கல்வி போதிக்காமல் — சில தவறுகள் நடக்கின்ற நேரத்திலே, அதைக் கண்டு தலைவர் வேதனைப்பட்டு நம்முடைய அருமைச் சகோதரர் சந்திரசேகரன் சொன்னதைப்போல, பழங்குடி மக்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கி, அந்தப் பழங்குடியினர் பள்ளியில் பழங்குடியினரையே நியமனம் செய்ய வேண்டுமென்று இன்றைய தினம்



தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல சாதி பேதமற்ற, எல்லா வகையிலும் சமத்துவ நிலையைக் கடைபிடிக்கின்ற கிராமங்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 28 மாவட்டங்களுக்கு 28 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள்; சான்றிதழும் வழங்கியிருக்கின்றார்கள் என்பதை இந்தநேரத்திலே கூறிக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கேற்று, உரை நிகழ்த்தி வாழ்த்துரைத்தவைகளையும், அறிவுரைகளையும் மனமகிழ்வோடு ஏற்கிறேன் செயலாற்ற. அவற்றுக்கு என் பதிலாக இவ்வுரைதனை ஏற்றிடவும், இதனையே சட்டப் பேரவை நிகழ்ச்சியில் பதிவு செய்திடவும் வேண்டுகிறேன். நான் தந்த விளக்கத்தை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை மனமுவந்து விலக்கி மானியக் கோரிக்கை எண் 30-க்கு ரூ.334,58,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கிட வேண்டுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 30 - பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் நலிவுற்றோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை. திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இலலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ.334,58,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-25

## 9. அரசினர் தனித் தீர்மானம்-தொடர்ச்சி

### மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு மனிதர்களை அமர்த்துதல் மற்றும் உலர்ந்த வகைக் கழிவறைகளைக் கட்டுதல் (தடுப்புச்) சட்டம் 1993-ஐ (மையச் சட்டம் 46/1993) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுப் பயன்படுத்துதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.



## 8. அரசினர் தீர்மானம்-தொடர்ச்சி

### (ஆ) விதி—32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைய தினம் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே ஏராளமான உறுப்பினர்கள் பேச விருப்பம் தெரிவித்துள்ள காரணத்தால், வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்தி வைக்கலாம் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்து, அதற்குரிய தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் எனவுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 12-5-1999 அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளைய வினாக்கள்-விடைகள் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12-5-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1999 மே 11

# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

153. கோயம்புத்தூரில் 29-11-1997 மற்றும் 30-11-1997 ஆகிய நாட்களில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் ஏற்பட்ட பொருட்சேதத்திற்கான நிவாரணம் குறித்த நீதிபதி திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

154. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 20-11-1998 ஆம் நாளிட்ட 246 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

155. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்களை செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 30-12-1998 ஆம் நாளிட்ட 260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

156. நவம்பர் 1992 முதல் மார்ச் 1994 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் முதல் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

157. 1994-95 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

158. 1995-96 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)



1999 மே 11 ]

159. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

160. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

213. மானியக் கோரிக்கை எண் 30 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

214. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

215. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மக்கள சாசனம் என்ற புத்தகம், 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

216. பொது கணக்குக் குழுவின் நூற்று எண்பத்து ஒன்பதாவது அறிக்கை, 1998-99.

217. பொது கணக்குக் குழுவின் நூற்றுத் தொன்னூறாவது அறிக்கை, 1998-99.

218. பொது கணக்குக் குழுவின் நூற்றுத் தொன்னூற்று ஒன்றாவது அறிக்கை, 1998-99.

219. பொது கணக்குக் குழுவின் நூற்றுத் தொன்னூற்று இரண்டாவது அறிக்கை, 1998-99.

220. பொது கணக்குக் குழுவின் நூற்றுத் தொன்னூற்று மூன்றாவது அறிக்கை, 1998-99.

221. நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் அவர்கள் தலைமையிலான நிருவாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்பு தொடர்பான உயர்நிலைக் குழுவின் முதல் அறிகை (சூன் 1997) (தமிழ், ஆங்கிலம்)

222. நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் அவர்கள் தலைமையிலான நிருவாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்பு தொடர்பான உயர்நிலைக் குழுவின் இரண்டாவது-இறுதி அறிக்கை (செப்டம்பர் 1997) (தமிழ், ஆங்கிலம்)

223. நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் அவர்கள் தலைமையிலான நிருவாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்பு தொடர்பான உயர்நிலைக் குழுவின் முதல் மற்றும் இரண்டாவது-இறுதி அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).



# இணைப்பு

[186 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண் 30

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு—1999-2000

சமுதாயத்தில் அடித்தட்டு நிலையில் வாழும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல்வாழ்விற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு திட்டங்களைத் தீட்டி, சீரிய முறையில், முனைப்புடன் இத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகின்றது.

சாதி, மத பேதங்கள் இல்லாத, ஏற்றத்தாழ்வற்ற புதிய சமுதாயத்தை உருவாக்கிடவும், ஒற்றுமை உணர்வோடும், மனித நேயத்தோடும், அன்பில் என்றும் நிலைத்து வாழ்ந்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிகோலப்பட்டு "பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்" எனப் பெயரிடப்பட்டு; இந்திய திருநாட்டிற்கு வழிகாட்டும் திட்டமாக தமிழ்நாடு முழுவதும் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 5.59 கோடி. அதில் ஆதிதிராவிட மக்கள் தொகை 1.07 கோடியாகும் (19.18 விழுக்காடு), பழங்குடியின மக்கள் தொகை 0.06 கோடியாகும் (1.03 விழுக்காடு).

2. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பணிக்கு இவ்வரசு உயர் முன்னுரிமை அளிக்கிறது. அவர்களுடைய பொருளாதார நலிவுக்கும், சமூக இயலாமைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. எனவே, ஆதிதிராவிடர், பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கு வழிகோலும் வலுவான பொருளாதாரத் திட்டம் ஒன்றை வகுப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது.

3. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலக் குறிக்கோள்களைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் எய்துதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் முயற்சிகளோடு

[1999 மே 11

ஏனைய துறைகளின் முயற்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றன.

4. ஆதிதிராவிடர் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக இவ்வரசு பின்வரும் பன்முனை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

(1) ஆதிதிராவிடர், பழங்குடியினரின் கல்வி மேம்பாடு;

(2) ஆதிதிராவிடர், பழங்குடியினரின் பொருளாதார மேம்பாடு;

(3) ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு வீட்டுமனைகள், வீட்டு வசதி முதலான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்.

**I. கல்வி**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் முன்னேற்றத்திற்கு, கல்வி, மிக முக்கியமான ஒன்றாகும். எனவே, இத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் மொத்தத் தொகையில் 61 விழுக்காடு கல்விக்கென செலவிடப்படுகிறது. இத்துறையின் மூலம் 1258 பள்ளிகள் இயங்குகின்றன.

1. உயர்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப் பாடம் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தம் 60 பள்ளிகளில் கணினிப்பாடம் நடத்தப்பட்டு வருகின்றது.

2. இத்துறையின்கீழ் இயங்கும் 55 உயர்நிலைப் பள்ளிகளிலும் 57 மேல்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

3. 15 மேல்நிலைப் பள்ளிகளில் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் ரூ.78 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.20 இலட்சத்திற்கு ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

4. 44 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1.60 கோடி செலவில் ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.21.50 இலட்சத்திற்கு ஆய்வுக்கூட உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

5. 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டுதோறும் 2 இணைச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.



1999 மே 11]

இத்திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

6. 48 பள்ளிகளில் ரூ.5.85 கோடி செலவில் புதிய கட்டடங்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் கூடுதல் வகுப்பறைகளும், ஆய்வுக்கூடமும் கட்ட ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த மூன்றாண்டுக் காலத்தில் மாணவ/மாணவியர்கள் தங்கும் விடுதிகள் கட்டுவதில் தனிக்கவனம் செலுத்தி நல்ல வசதிகள் கொண்ட 81 விடுதிகள் ரூ.25.48 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. 42 விடுதிகள் கட்டுவதற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.13.86 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

8. கடந்த மூன்றாண்டுகளில் தனியார் வாடகைக் கட்டடங்களில் 111 மாணவ/மாணவியர் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில் 5 விடுதிகள் முதுகலைப் பட்டதாரி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

9. சென்ற ஆண்டில் 50 துவக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 6 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 6 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. 1999-2000 ஆம் நிதி ஆண்டில் 25 துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.2.38 கோடி செலவில் நிலை உயர்த்தப்படும்.

10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்கு பாட புத்தகங்கள், குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.12.40 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

11. பத்தாம் வகுப்பு படிப்புக்கு முந்தைய படிப்பிற்கான கல்வி உதவித் தொகைகள் வழங்க மாநில அரசுத்திட்டத்தின்கீழ் ரூ.2.08 கோடியும், மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் ரூ.2.46 கோடியும் இந்நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் அவர்கள் தங்கி பயிலும் விடுதிகளுக்கு அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி உதவித் தொகையை விட கூடுதலாக செலவு செய்திருந்தால் அவர்களுக்கு இத்தொகை கடனாக வழங்கப்படுகிறது. பட்டப்படிப்பு படிப்போர்களுக்கு ஆண்டுக்கு ரூ.6,500ம், தொழில் படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயில்வோர்க்கு ரூ.7,000-ம் கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென இந்நிதி ஆண்டில் ரூ. 4.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. மாணவ, மாணவியர்கள் விடுதி சேர்க்கைக்கான பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ.15,000-லிருந்து ரூ.50,000-ம் ஆக 1997-98 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

14. அரசு விடுதிகளில் தங்கி பயிலும் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.300 என்றிருந்ததை ரூ.400 ஆக உயர்த்தி கடந்த நிதியாண்டிலிருந்து வழங்கப்படுகின்றது.

15. இளங்கலை, முதுகலை, தொழிற் பட்டப்படிப்புகளில் 60 விழுக்காடு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகை ரூ.1,000-1,500 என்பதிலிருந்து ரூ. 2,000-5,000 ஆக 1997-98 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.32.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. 1998-99 ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

17. 1999-2000 ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற் தொடர்பான பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு பதிவுக் கட்டணம் மற்றும் சேர்க்கைக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

18. 1998-99 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடனான மாணவர் பரிமாற்றுத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் வெளிநாடு



சென்று உயர் கல்வி பயில ஆண்டொன்றிற்கு ஒரு மாணவருக்கு ரூ.3 இலட்சம் வீதம், பத்து மாணவர்கள் உதவித்தொகை பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ் நடப்பு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் 50 மாணவர்கள் பயன் பெறுவர்.

19. 1998-99 ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் கல்ராயன்மலையிலுள்ள வெள்ளிமலையில் பழங்குடியினர் உண்டுறை மேல்நிலைப்பள்ளி ஒன்று ரூபாய் ஒரு கோடி செலவில் தொடங்கப்பட்டது. மேலும், நடப்பு நிதி ஆண்டில் இரண்டு பழங்குடியினர் உண்டுறை மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்படும். இம்மூன்று பள்ளிகளுக்கும் கூடுதலாக ரூ.6.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இப்பள்ளிகளை பழங்குடி இன மக்களை அங்கத்தினர்களாகக் கொண்டுள்ள பதிவு பெற்ற சங்கம் நிர்வகிக்கும்.

20. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, தொழில்நுட்பம், சட்டம், முதுநிலை வணிக நிர்வாகம், பட்டயக் கணக்கு, உயிர் அறிவியல் படிப்பு மற்றும் தொழிற்கல்வியில் முதுநிலை பட்டயப் படிப்புகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு, படிக்கும் வகுப்புகளுக்கேற்ப இலவசமாக ரூ.2,400 முதல் ரூ.7,500 வரை புத்தகங்கள் வாங்கி வழங்கப்படுகின்றன.

21. 40 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 46 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ.56.76 இலட்சம் கடந்த நிதி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

22. 30 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகளில் குடிநீர் வசதி செய்வதற்காக கடந்த நிதி ஆண்டில் ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

23. 1998-99 ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் உள்ள சுவாமி சகஜானந்தா அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கான புதிய விடுதி கட்ட ரூ.37.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

24. சிதம்பரத்தில் உள்ள சுவாமி சகஜானந்தா அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புதியதாகக் கட்டடம் கட்ட ரூ.22.50 இலட்சம் சென்ற ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

[1999 மே 11

## II. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

கடந்த 2 ஆண்டுகளில் சாதி சமயமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் 'சமத்துவபுரம்' - தமிழ் நாடெங்கும் 100 இடங்களில் ரூ.35.00 கோடி செலவில் உருவாக்க முடிவெடுக்கப்பட்டு 27-4-99 வரை 19 இடங்களில் திறக்கப்பட்டுள்ளது. 1999-2000-ல் மேலும் 50 இடங்களில் 'பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்' உருவாக்கப்படவுள்ளன. இதற்கென இவ்வாண்டில் ரூ.18.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சமத்துவபுரங்களில் ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர இனத்தவர்கள் இணைந்து சமாதானத்துடனும், குடிநீர், மின்வசதி, சமுதாயக் கூடம், பள்ளி, மயானம் போன்ற பொது வசதிகளை பகிர்ந்து கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது.

## III. வீட்டுமனை வழங்கும் திட்டம்

இத்திட்டம் சொந்த வீட்டுமனை இல்லாத ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.18.79 கோடியில், 68,499 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர கூடுதல் இழப்பீட்டிற்காக (Enhanced Compensation) ரூ.3.63 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1999-2000-ஆம் ஆண்டிற்கு ரூ.18.69 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## IV. வீட்டு வசதி

வசிக்க வீடில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்டித்தரும் திட்டம், செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 'ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்'கீழ் மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.33.59 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.47.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1999 மே 11]

## V. தீண்டாமை ஒழிப்பு

1999ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு-மத நல்லிணக்க ஆண்டாக தமிழ்நாடு அரசு கடைபிடித்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக குற்றவியல் வழக்குரைஞர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு தீண்டாமை தொடர்பான குற்றம் புரிவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முனைந்து செயல்படுகிறது. தீண்டாமை தொடர்பான வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் தனியாக கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு மத்திய அமைச்சர் திருமதி மேனகா காந்தி அவர்கள் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்ததற்கு பாராட்டு தெரிவித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தேநீர் கடைகளில் ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்காக தேநீர் வழங்க தனிக் குவளை பயன்படுத்தும் முறை அடியோடு மாற்றப்பட காவல் துறை தலைவர் (மனித உரிமைகள்/மற்றும் சமூக நீதி) மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இணைந்து கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சாதிப் பூசல்களால் அவ்வப்போது ஏற்படும் சில நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக கடந்த நிதி ஆண்டில் ரூ.1.06 கோடி நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் நிவாரண நிதியாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## VI. கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை ஒழிப்பில் இந்நாட்டிற்கே வழிகாட்டியாகத் தமிழகம் மேற்கொண்ட திகழ்கிறது. உச்சநீதி மன்றத்தில் இம்மாநில அரசு நடவடிக்கைகள் பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்கள் கண்டறிந்துள்ள 25,008 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு வழங்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.3.62 கோடி செலவிடப்பட்டுள்ளது.

VII. **துப்புரவுப் பணியாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம்**

இந்த அரசு கடைப்பிடிக்கும் மனித நேயக் கொள்கையின் அடிப்படையாக மனிதக் கழிவுகளை மனிதனே எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிலையை அகற்றுவதற்கான சட்டமுன்வடிவு கொண்டு வரப்படும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் செய்ய வசதி போன்ற மறுவாழ்வு திட்டங்கள் செயல்படுத்தப்படும். கடந்த மூன்றாண்டுகளில் 7012 துப்புரவுப் பணியாளர்கள் இதன் மூலம் புனர்வாழ்வு பெற்றுள்ளனர். இதற்கென ரூ. 8.38 கோடி மானியம் மற்றும் விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது

VIII. **பணி நியமனங்களில் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு**

ஒதுக்கீடு விதிகளைக் கையாளுவதில் இவ்வரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சரின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு கூடி இதுபற்றி அனைத்துத் துறைச் செயலர்களுடனும், துறைத் தலைவர்களுடனும் ஆய்வு நடத்தியுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அரசுப் பணிகளில் நியமனம் பற்றி இரு துறைகளின் குழுக்களால் ஆராயப்பட்டு அக்குழுக்களின் அறிக்கைகள் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளை அமைச்சர்கள், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் கொண்ட குழு ஆய்வு செய்து வருகிறது. அக்குழு தரும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு முடிவினை அறிவிக்கும்.

IX. **வேலைவாய்ப்புப் பயிற்சிகள்**

தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வண்ணமாகப் பொறியியல் பட்டதாரிகளுக்கும், மேற்படிப்புப் படித்தவர்களுக்கும் 'சிப்காட்' (SIPCOT) நிறுவனத்தின் மூலமாக தொழில் துறையே ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கும் திட்டம் சிறப்பாகத் தொடங்கப்பட்டுள்ளது. ரூ. 12 இலட்சம் செலவில் ஆண்டுக்கு எட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



போதிய கல்வித் தகுதி பெற்றவர்களுக்குச் சுய தொழில் அமைக்கவும், பணிகளில் சேரவும், வாய்ப்பளிக்கும் பணிசேர் பயிற்சிகள் (Placement Guaranteed Trainings) பல இத்துறையின் நிதி உதவியோடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றன.

அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதுவோருக்குப் பயிற்சி அளிக்க சென்னையில் இத்துறைக்கென ஒன்றும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒன்றும் ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் உள்ளன. பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், நம் மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், இவ்விரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து வசதிகளையும் தரத்தையும் மேம்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

நடப்பு நிதி ஆண்டில் இத்துறையின்கீழ் இயங்கும் பயிற்சி மையத்திற்கு மானியமாக ரூ. 5.00 இலட்சம் வழங்கப்படும்.

X. **டாக்டர் அம்பேத்கர் மணி மண்டபம்**

டாக்டர் அம்பேத்கர் மணி மண்டபம் அமைக்கும் பணி 23-12-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. டாக்டர் அம்பேத்கர் நினைவகக் கட்டடம் கட்டுவதைப் பற்றி கருத்துகளையும், அறிவுரைகளையும் கூறுகின்ற பணியினை அண்ணா பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்து அப்பணிக்காக ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மணி மண்டபம், அதனைச் சுற்றி பூங்காவும் அமைப்பதற்கு மொத்த செலவு ரூ. 5 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. அம்பேத்கர் நினைவகம் கட்டுவதற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இறுதி செய்யும் நிலையில் உள்ளது. விரைவில் கட்டுமானப் பணி தொடங்கப்படும்.

XI. **பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில், தமிழக அரசு பழங்குடியினர் துணைத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. ஏழு மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் ஒன்பது பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்தமான மேம்பாட்டுப் பணிகளுக்கென ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினரின் தொழில் முறைகளுக்கேற்ப தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு ஆகிய திட்டங்கள் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

பழங்குடியின மக்களின் விளை பொருட்களை விற்பனை செய்ய வகை செய்வதோடு மட்டுமின்றி, குறுகிய கால, நீண்ட கால கடன்கள் வழங்குவதற்கும், பழங்குடியினருக்குத் தேவையான நுகர் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்வதற்கும் பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (Lamp Society) செயல்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதிகளில், 16 சங்கங்களும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் அல்லாத பகுதிகளில் 2 சங்கங்களும், பழங்குடியினரின் தேவைகளை நிறைவு செய்ய நிறுவப்பட்டுள்ளன.

பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்த உதவுவதோடு, கல்வி, மருத்துவம், மின்வசதி, குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் செய்து தரப்படுகின்றன.

பழங்குடியின மக்களில் மிகவும் பின்தங்கிய பண்டைய பழங்குடியின மக்களில் கண்டறியப்பட்ட ஆறு பிரிவினர்களுக்கு உதவிட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கென ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 241 அரசுப் பழங்குடியினர் உண்டுறைவிடப் பள்ளிகளை 16 மாவட்டங்களில் நடத்தி வருகிறது. (இதில் 8 உயர்நிலைப் பள்ளிகளும், 9 மேல் நிலைப் பள்ளிகளும் அடங்கும்). மேற்குறித்த 241 பள்ளிகளில் தங்கிப் பயில்வோரின் மொத்த எண்ணிக்கை 15,078 ஆகும். இப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர் அனைவருக்கும் உணவு மற்றும் உறைவிடம் இலவசமாக வழங்கப்படுகின்றது. அரசு பழங்குடியினர் உண்டுறைவிடப் பள்ளி, விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கென கம்பளி விரிப்புகள் வழங்கப்படுகின்றன.



நடப்பு ஆண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் அல்லாத இடங்களில் பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயிலும் பள்ளிகள் இரண்டை ஏற்படுத்த ரூ. 9.48 இலட்சம் வழங்கப்பட உள்ளது.

## XII. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (TAHDCO)

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15-02-1974 அன்று தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்திற்கு மாநில அரசு 51 விழுக்காடும், மைய அரசு 49 விழுக்காடும் பங்கு மூலதனமாக நிதி வழங்குகின்றன.

### 1. சிறப்பு மத்திய நிதி உதவி (SPECIAL CENTRAL ASSISTANCE)

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்கு வலுவூட்டும் வகையில் இந்நிதி ஆண்டுதோறும் மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

### 2. தொழில் நுட்பப் பணிகள்

பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், மாணவர் / மாணவியர் விடுதிகள், ஆசிரியர் குடியிருப்புகள், சமுதாயக் கூடங்கள் முதலிய கட்டுமானப் பணிகள் தொழில் நுட்பப் பிரிவுகள்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

1980-81 ஆம் ஆண்டிலிருந்து பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரான ஆதிதிராவிட மக்களின் இன்னல்களை நீக்குவதற்காக சிறப்பு மத்திய நிதி உதவியின்கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைத் தனியாகவும், பிற துறைகளுடன் இணைந்தும் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கென 1980-81 ஆம் ஆண்டு முதல் 1998-99-ஆம் ஆண்டு வரை ரூ. 319.41 கோடி நிதியினை மத்திய அரசிடமிருந்து தாட்கோ நிறுவனம் பெற்றுள்ளது.

**4. தாட்கோ செயல்படுத்தும் திட்டங்கள்**

**(அ) வேளாண் மற்றும் வேளாண் தொடர்பான திட்டங்கள்**

விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டுள்ள ஆதிதிராவிடர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வடிமுனை ஊற்றுக் கிணறுகள் தோண்டுதல், பம்ப் செட்களுக்கான டீசல் மோட்டார் (5 H.P) மின்சார மோட்டார் (7.5 H.P.) வழங்குதல், இரண்டு காளை மாடுகளுடன் டயர் வண்டி வழங்குதல், உழவு மாடுகள், மிதி வண்டியுடன் கூடிய விசைத் தெளிப்பான் ஆகியவைகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

**(ஆ) தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்**

இத்திட்டம் மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர்களிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்காக ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 5.00 இலட்சம் வரை மதிப்புடைய சொத்துக்களை உருவாக்க வகை செய்கிறது. தாட்கோ நிறுவனம், தொழில் முனைவோர் ஒவ்வொருவருக்கும் சிறப்பு மத்திய நிதியிலிருந்து உயரளவு மானியமாக ரூ. 25,000-ம், உயரளவு விளிம்புத் தொகையாக ரூ. 1,25,000-ம் வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் லாரி இழுவை வண்டிகளுடன் கூடிய டிராக்டர், எண்ணெய் லாரி, சிறிய வேன், அம்பாசிடர் கார், ஆட்டோ ரிக்சா முதலானவை வாங்கி வருவாய் ஈட்டுதல், பால் பண்ணை, கோழிப் பண்ணை, பலவகை சிகிச்சை மருத்துவமனை, தோல் தொழில், இரசாயனத் தொழில், கணினிப்பொறி மையம், நகலக இயந்திரம், செங்கல் சூளை, கட்டடப் பணிகளுக்கான முட்டுக் கொடுக்கும் சாதனங்கள், மீன் பண்ணை, மளிகைக் கடை, ஏற்றுமதி ஆடைகள் தயாரிப்புத் தொழில் போன்ற பெருமளவு வருமானம் அளிக்கக்கூடிய திட்டங்களுக்கு வகை செய்யப்படுகின்றது.

**(இ) சிறு தொழிற் கடன்**

சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துப் பணியைத் தமிழ்நாடு அரசு, தாட்கோ நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது இத்திட்டத்தின்கீழ் காலணித் தொழில், மோட்டார் இயந்திரம் பழுது பார்த்தல், மளிகைக் கடை, தோல் பதனிடுதல் போன்ற 31 சிறு தொழில்கள் கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக வழங்கும் உயரளவு தொகை ரூ. 10,000 ஆகும். இதில் உயரளவு மானியம் ரூ 5,000 மும் தாட்கோ நிறுவனம் விளிம்புத் தொகையாக 25 சதவீதமும் வங்கிக் கடனாக 25 சதவீதமும் வழங்கப்படுகிறது.

22|198

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.